
1551

# மலர்

ஜூலை 1970
விலை சதம் -/50.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மலர்" சஞ்சிகையில் ஏன் விளம்பரம் செய்யவேண்டும் என்பதற்குச் சில காரணங்கள்

1. ஈழத்திலே மிகச் சிறப்பான முறையில் வெளிவரும் இலக்கிய ஏடு "மலர்". கண்ணைக் கவரும் அமைப்பில் வண்ண ஓவியங்களுடனும் எண்ண எழுச்சிகளுடனும் வெளிவருவது இச்சஞ்சிகை.

2. எவ்வித சார்புமற்ற நடுநிலை ஏடாய் விளங்குவதன் காரணத்தால் ஈழத்து வாசகர்களின் ஏகோபித்த பாராட்டுதலையும் அபிமானத்தையும் பெற்றுள்ளது இச்சஞ்சிகை.

3. ஈழமெங்கும் விநியோகமாகும் இச்சஞ்சிகை, பாடசாலைகள், பயிற்சிக்கல்லூரிகள், அலுவலகங்கள் எங்கும் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளது. ஆசிரியர், மாணவர், அலுவலர் முதலியோர் இதன் நிரந்தர சந்தாதாரராக உள்ளனர்.

4. தினசரிப் பத்திரிகை விளம்பரங்கள் படமுடியாத பார்வைகளில் "மலர்" விளம்பரங்கள் படுகின்றன. தினசரிப்பத்திரிகை விளம்பரங்களை விட முப்பது மடங்கு கூடிய காலம் "மலர்" விளம்பரங்கள் உயிர் வாழ்கின்றன.

5. தினசரிப்பத்திரிகைகளின் விநியோகம் (circulation) இடம் (space) முதலிய அம்சங்களை விகிதாசாரப்படி ஒப்பிடுகையில் "மலர்" விளம்பரவிகிதம் மிக மிகக் குறைவானதாகும்.

6. வியாபார நோக்கமற்று, இலக்கியப்பணி குறித்து நடாத்தப்படுவது "மலர்". இச்சஞ்சிகையில் விளம்பரம் செய்வதன் மூலம் ஈழத்து இலக்கிய முயற்சிகளுக்குக் குறிப்பிடத்தகுந்த சேவை செய்கிறீர்கள் — அதாவது உங்கள் பங்கைச் செய்கிறீர்கள்.

[பின்புற உள் அட்டையைப் பார்க்கவும்]

கல்முனையிலே பெயர் பெற்ற ஜவுளி ஸ்தாபனம்

**K. K. M. STORES**

REST HOUSE ROAD, KALMUNAI.

உங்களுக்குத் தேவையான, கைத்தறி ஆடைகள், நைலெக்ஸ் சாரிகள், வொயில் சேலைகள், சிறுவர்களுக்கான உடுப்புகள், 'ஹென்ட்லி,' 'டிப்ளோமட்,' 'மான்ஹட்டன்', பென்ஹர்' சேட் வகைகள், கூப்பன் துணிகள், இன்னும் பல குறைந்த விலையில்

— பெற்றுக்கொள்ள சிறந்த இடம் —

**K. K. M. STORES**

REST HOUSE ROAD, KALMUNAI.

*BRANCH :*

**MARIKAR'S**

**Main Street – KALMUNAI.**

கல்முனையில்

நம்பிக்கையான தங்க நகைகளுக்கு உகந்த இடம்



**லலிதா நகை மாளிகை**

பிரதான வீதி,

கல்முனை.



ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.

**ஒருமுறை விஜயம் செய்தவர்கள் மீண்டும் மீண்டும் எங்களையே நாடி வருகிறார்கள்**

**LALITHA JEWELLERS**

MAIN STREET. KALMUNAI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது மக்களே! இன்றே நாடுங்கள்!!

மட்டக்களப்பின் பிரபல வர்த்தக ஸ்தாபனமான

"டிப்டொப்" ஸ்தாபனத்திற்கு!

உங்களுக்குத் தேவையான ஆங்கில மருந்து வகைகளைக் கட்டுப்பாட்டு விலைக்கும், பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள், பாலுணவு வகைகள், மற்றும் சாய்ப்புச் சாமான்கள், ஆகியவற்றை மலிவான விலைக்கும் பெற்றுக்கொள்ளச் சிறந்த

— ஒரே ஸ்தாபனம் —

"டிப்டொப்" - மட்டுநகர்!

'டியுரோல்' விட்டமின் டானிக்,
ஓவல்டின் சத்தூட்டப்பெற்ற பாலுணவு
ஆகியவற்றிற்கு மட்டுநகரின் ஏகவிநியோகஸ்தர்கள்:

A P. M. நாகுலெப்வை
"டிப்டொப்"
இல. 4, பிரதான வீதி — மட்டுநகர்.

மட்டக்களப்பில் பிரசித்தி பெற்ற ஹார்ட் வெயார் ஸ்டோர்ஸ்

லங்கா ஹார்ட் வெயார் ஸ்டோர்ஸ்

இல. 26, பஸார் ஸ்ட்ரீட் — மட்டக்களப்பு

உங்களுக்குத் தேவையான கட்டிட சாமான்கள், லக்சால் பெயின்ட் வகைகள், எஸ்—லொன் பைப்ஸ், யானை மார்க் அஸ்பெஸ்டோஸ் முதலியவற்றைக் குறைந்த விலையில் நாங்கள் தருகிறோம்.

× சிலோன் சீமெண்ட் கோப்பரேஷன்
× சிலோன் ஸ்டீல் கோர்ப்பரேஷன்
× சிலோன் ஸ்டேட் ஹார்ட் வெயார் கோர்ப்பரேஷன்
× சிலோன் செரமிக்ஸ் கோர்ப்பரேஷன்

பொருட்களுக்கு அங்கீகாரம் பெற்ற வியாபாரிகள்

LANKA HARDWARE STORES
No. 28, Bazaar Street,
BATTICALOA.

இங்கே கத்தரிக்கவும்

ஈழத்தில் மிகச் சிறப்பான முறையில் வெளிவரும் இலக்கிய மாதஏடு "மலர்". இச்சஞ்சிகைக்கு உங்கள் பாராட்டுதல்களைச் செயல்மூலம் தெரிவிப்பதற்கு ஒரேவழி உடனடியாக "மலர்" சந்தாதாரர் ஆகுவதுதான். அதேபோல், உங்கள் நண்பர்களையும், மற்றும் சுற்றத்தவர்களையும் 'மலர்' சந்தாதாரர் ஆக்குவது, நீங்கள் இச்சஞ்சிகைக்கும், ஈழத்து இலக்கிய உலகுக்கும், உங்கள் சக்திக்குட்பட ஆற்றும் மகத்தான பணியாகும். அதுமட்டுமல்ல, உங்களுக்கு மிகவும் வேண்டியவர்களுக்கு நீங்கள் அளிக்கக்கூடிய மிகச்சிறந்த — நிலையான ஞாபகமுள்ள ஒரு பரிசு "மலர்" ஆண்டுச் சந்தா ஆகும்.

கீழே உள்ள விண்ணப்பப்படிவததைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள்.

— ஆசிரியர்.

---

நிர்வாகி "மலர்"
21, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

அன்புடையீர்,

"மலர்" இலக்கிய மாத ஏட்டினுக்கு ஆண்டுச் சந்தாவாக ரூபா 6/— இத்துடன் காசோலையாக / மணி ஓடராக / போஸ்டல் ஓடராக அனுப்புகிறேன்.

..................... மாதம் முதல் ஒரு வருடத்திற்கு "மலர்" பிரதிகளை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இவ்வண்ணம்

..............................................
கையொப்பம்

திகதி..........................

'மலர்' அனுப்பவேண்டிய முகவர்:—

..............................................

..............................................

..............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்கம்

இந்த இதழைப் பார்த்ததுமே வாசகர்களுக்கு ஒரு 'பிரமிப்பு' ஏற்பட்டிருக்கும் ஆம்; அநேக வாசகர்களின் நீண்டநாள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் முகமாக இம் மாதம் முதல் ''மலர்'' ஏட்டினை இப்புதிய தோற்றத்தில் வெளிக்கொணருகிறோம்.

உள்ளூர் முயற்சிகளை ஊக்குவிக்கும் எண்ணம் கொண்ட புதிய அரசாங்கம் தோன்றியுள்ளது. இலக்கியத் துறையிலும் அதன் தாக்கம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ''மலர்'' போன்ற இலக்கிய சஞ்சிகைகளுக்கும் ஒரு நல்ல எதிர்காலம் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

நாம் ஏற்கனவே அறிவித்திருந்த தொடர் அம்சங்களில் மூன்று இந்த இதழில் ஆரம்பமாகின்றன. மேலும் பல புதிய அம்சங்கள் இடம்பெறவிருக்கின்றன. எப்படியான புதிய அம்சங்களைச் சேர்க்கலாம் என்பதில் வாசகர்கள் கருத்துக்களையும் அறிய விரும்புகிறோம்.

ஈழத்தின் சிறப்புமிக்க இலக்கிய ஏடான ''மலர்'' ஈழத்தின் மூலை முடுக்குகளெல்லாம் பரவுவதற்கு வாசகர்கள் துணைபுரிய வேண்டும்.

—ஆசிரியர்.



# மலர்

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்—பாரதியார்.

செடி: 1 | ஜூலை, 1970 | மலர்: 5

## மகரந்தம்

**கதை** — பக்கம்

உள்ளம் ஒன்று ........ நிவேதிதா ... 16
ஆதாரம் ........ எம். ஐ. எம். தாஹிர் ... 33
உள்ளும் புறமும் ........ சாரல் நாடன் ... 35
● ........ வேதாந்தி ... 41
கறுப்பையா ........ மருதூர் மஜீத் ... 55
மலைப்பாம்புடன் ........ எஸ். சிதம்பரப்பிள்ளை ... 58

**கவிதை**

இளம் வாலிபரே ...... காரை. செ. சுந்தரம்பிள்ளை ... 6
மரணமும் வாழ்வும் ........ குமார. இராமநாதன் ... 25
வேண்டுதல் வேண்டாமை ........ பாண்டியூரன் ... 32
சங்கமம் ........ கணேஷ் ... 40
முழக்கினேன் குரல் ........ பண்ணுமத்தான் ... 45
நாலும் நாலு ........ நிதானி ... 53

**கட்டுரை**

வி. சி. மெம்பர் ........ அம்மாச்சி ஆறுமுகம் ... 23
வீதியெல்லாம் ........ கலைமேகம் இப்ருஹீம் ... 46
கொசுமருந்து ........ எடுத்தாளன் ... 61


**பிற**

கன்னத்தில் ........ திமிலைத்துமிலன் ... 9
வணக்கம் ........ ... 4
இலக்கிய வளர்ச்சிக்கு ........ ... 7
கலை ஈழம் ........ ... 14
ரீங்காரம் ........ ... 26
ஒரு அனுபவம் ........ ... 27
பூங்கா ........ ... 48
ஈழத்து ரத்தினங்கள் ........ ... 63

கதைகள் யாவும் கற்பனை. கட்டுரை கவிதைகளில் உள்ள கருத்துகளுக்கு அவற்றின் படைப்பாளிகளே உரிமையாளர்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளம் வாலிபரே!

காரை.
செ. சுந்தரம்பிள்ளை.

பட்சமுள்ள இளம் வாலிபரே உங்கள்
பாரிய தோள்களைத் தூக்கி — உள்ள
வீரியம் யாவையுந் தேக்கி — இந்த
எட்டுத் திசையிலும் ஈழப் புகழினை
ஏற்றி வைப்பீர் பொருள் ஆக்கி — நாட்டை
மாற்றி வைப்பீர் தொழில் ஊக்கி.

பட்டினிக் கோலத்தில் பாராளு மன்றப்
படியினில் ஏறி இறங்கி — எம். பி
அடியினில் வீழ்ந்து வணங்கி — ஒரு
குட்டித் தொழிலேனும் எட்டிப் பிடித்திடக்
கோடி தவஞ் செய்வதேனோ — உளம்
வாடி அவஞ் செல்வ தேனோ?

தென்னை பனையுண்டு தேமா பலாவுண்டு
தேயிலை ரப்பரு முண்டு — திறம்
போயிலை வாழையுமுண்டு — நல்ல
கன்னல் விளைந்திடச் செந்நெல் செழித்திடக்
காடு கழனிகள் உண்டு - பசு
மாடுகள் ஆடுகள் உண்டு.

வேட்டிகள் சேலைகள் பானைகள் சட்டிகள்
வேண மட்டும் செய்ய லாமே — இதால்
மானமுடன் உய்ய லாமே — இந்த
நாட்டினில் ஆயிரம் நல்ல தொழிலுண்டு
நாண மெதற் கடா தம்பி — அஞ்
ஞான மொழியடா நம்பி.

ஆழக் கடல் சென்று மீனைப் பிடித்திடும்
ஒன்னிய நாட்டவர் போல — பொருள்
மன்னிய நாட்டவர் போல — எங்கள்
ஈழப் புதல்வர்கள் ஏறிப் படகினில்
ஈட்டலாமே பெருஞ் செல்வம் — நிலை
நாட்ட லாமே புகழ் வெல்லம்.



# மலர்

## இலக்கிய வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் உதவி.

ஈழ நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், பொருளாதார அபிவிருத்தியிலும் விவசாய, தொழில் விருத்தியிலும் முக்கிய கவனம் செலுத்துவதற்கான திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டது.

காலக்கிரமத்தில், நாட்டில் இலக்கிய வளர்ச்சியும் அரசாங்கத்தால் பேணப்படவேண்டிய ஒன்றே என்பதை உணர்ந்து, அதற்காகவும் சில திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டது.

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை சாகித்திய மண்டலம், இலங்கைக் கலைக்கழகம் முதலிய அமைப்புகள் தமிழ் இலக்கிய, நாடகவளர்ச்சிக்கான பணிகளை மேற்கொண்டிருந்தன. பல வருடகாலம் இவை ஆற்றிய சேவையின் 'அறுவடை'யைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது நாம் மகிழ்ச்சியடைவதற்கில்லை என்ற வருந்தத்தக்க உண்மை தலைநீட்டி நிற்கிறது. மேலும், இவ்வமைப்புகளில் நிலவிய 'தில்லுமுல்லுகள்' பற்றியும் ஈழத்து இலக்கிய உலகில் பெரும் அதிருப்தி நிலவுவது யாவரும் அறிந்ததே.

இப்போது புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிறது. இப் புதிய அரசாங்கம், கலாச்சார விவகாரங்களைக் கவனிப்பதற்குத் தனி அமைச்சு நிறுவியதும், சாகித்தியமண்டலம், கலைக்கழகம் முதலிய அமைப்புகளைப் புனருத்தாரணம் செய்ததும், சகல துறைகளிலும் உள்ளூர் முயற்சிகளுக்கு ஊக்கம் கொடுத்து வந்துள்ளமையும் ஈழத்து இலக்கிய உலகில் புது நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கிறது.

ஈழத்து இலக்கியப் படைப்பாளியும், ஈழத்து இலக்கிய உலகும், நிச்சயம் அரசாங்கத்தின் உதவியும், ஊக்கமும் பெற்றுத் தழைக்கமுடியும் என்ற நம்பிக்கையைப் புதிய அரசாங்கம் ஊட்டியிருக்கிறது.

அரசாங்கத்தின் எண்ணங்களையும், திட்டங்களையும் செயல்படுத்தும்போது ''நேர்மை'' கடைப்பிடிக்கப்பட்டால் மட்டுமே இந்த நம்பிக்கை பலிதமாகும் இதற்குப் பொறுப்பாக இருக்கப் போகிறவர்கள் இதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

எந்த எந்த அம்சங்களில் கவனம் செலுத்தினால், ஈழத்தில் தமிழ் இலக்கியத்தில் — படைப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்கியத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்படும் என்று நாம் கருதுவதைக் கீழே தருகிறோம்:—

(i) ஈழத்தில் எத்தனையோ இலக்கியப்படைப்புக்கள் அச்சில் வெளிவர முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றன. இவற்றில் தரமானவற்றைத் தெரிவு செய்து, அரசாங்கமே அச்சேற்றவும் பாடசாலை நூல் நிலையங்கள், அலுவலக நூல் நிலையங்கள் முதலியவற்றுக்கு அவற்றை விநியோகிக்கவும் ஒழுங்கு செய்ய வேண்டும். தரமான படைப்புகளைத் தெரிவு செய்யும் குழு, பேர் பிரபலத்துக்கோ, பிரதேசச் சார்புக்கோ, கோஷ்டிச் சார்புக்கோ இடம் கொடாது நடுநிலையில் நின்று கடமையாற்ற வேண்டும்.

(ii) எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் வெளிவரும் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் விநியோகம் ஆவதில் சிரமம் இருக்கிறது. தரமான நூல்களைத் தெரிவு செய்து அரசாங்கமே மேற்குறித்த முறையில் விநியோகம் செய்வதற்கு முன்வர வேண்டும்.

(iii) பிறநாட்டுத் தூதரகங்கள் மூலம், தரமான ஈழத்து இலக்கியப்படைப்புகள் (மொழி பெயர்ப்புகள்) வெளிநாடுகளிலும் விநியோகமாவதற்கு அரசாங்கம் ஒழுங்கு செய்யவேண்டும்.

(iv) வியாபார நோக்கற்ற, தரமான இலக்கிய சஞ்சிகைகளுக்கு அரசாங்கம் ஆதரவு கொடுக்கவேண்டும். இச்சஞ்சிகைகளை, பாடசாலை அலுவலக நூல் நிலையங்களில் விநியோகிக்க ஒழுங்கு செய்வதன் மூலமும்; அரசாங்க திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் முதலியவற்றின் விளம்பரங்களை இவற்றுக்கு அளிப்பதன் மூலமும் அரசாங்கம் இதைச் செய்யலாம்.

(v) பாடத் திட்டத்தில் உள்ள இலக்கியப்பாடத்தில் இன்றையப் படைப்பிலக்கியம் ஒரு முக்கிய அம்சமாகச் சேர்க்கப்பட வேண்டும். உயர் வகுப்புகளில் இது ஒரு தனிப்பாடமாகவே சேர்க்கப்படலாம்.

—★—

## ஈழத்து எழுத்தாளர் வெளியிடும் நூல்களுக்கு இலவச விளம்பரம்.

ஈழத்து எழுத்தாளர்கள், தனிப்பட்ட முறையில் ஈழத்தில் வெளியிடும் நூல்களுக்கு 'மலர்' சஞ்சிகையில் இலவசமாக விளம்பரம் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்வாறு விளம்பரம் பெறவிரும்பும் எழுத்தாளர்கள், தாங்கள் வெளியிடும் நூலின் ஒரு பிரதியுடன் விண்ணப்பிக்க வேண்டும். 1 - 1 - 70 முதல் வெளிவரும் நூல்களுக்குமட்டுமே இத்திட்டம் அமைவதாகும்.

— ஆசிரியர்.





## 1. மீனாவின் கூச்சல்.




மாலை வேளை.

வானை நோக்கி உயர்ந்திருந்த மலைச் சிகரங்களை மையலால் தழுவிக்கொண்டே குழைந்து கிடந்தன மழைமுகில்கள். மஞ்சள் வெய்யிலிலே தங்கப் பாளங்களாக, மினுங்கிக்கிடந்த மலை முகடுகளிலிருந்து 'தத்திமித்தோம்' எனத் தாளமிசைத்துத் தவழ்ந்துகொண்டிருந்தன அருவிகள்.

பறித்த தேயிலைக் கொழுந்தை நிறுத்துக் கொடுத்துவிட்டு, வீடுகளைநோக்கி வரிசையாக நடந்து கொண்டிருந்தார்கள் பெண்கள். எல்லோருக்கும் முன்னாக, கம்பீர நடைபோட்டு, துள்ளிச் சென்று கொண்டிருந்தாள் ஒரு இளநங்கை. ஆம்; அவளொரு குறும்புக்காரி.

— துடிப்புள்ள பெண்.

அவள் பாடத் தொடங்கிவிட்டால்,......மற்றவர்கள் பின்பற்றுவதைத்தவிர வேறு வழியில்லை. கற்பாறைகளினூடாக, அவள் துள்ளிச் செல்லும் வேகத்திலேயே பாடலும் துள்ளித்துள்ளி மிதந்துகொண்டிருந்தது.

"தீமிலைத்துமிலன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடைகட்டித் தொங்கவிட்டுக்
கொழுந்தெடுக்கப் போகையிலே
சாடையாகக் கண்ணடிச்சான்
முத்துக் கங்காணி — அதில்
தன் மனதை ஏங்கவிட்டாள் செல்லவீராயி!

''தென்றலும்தெம் மாங்கும்போல
தேயிலைக்குச் சீனிபோலே
ஒன்றிவிட்டோம்'' என்றுசொன்னான்
முத்துக் கங்காணி — ''மச்சான்!
உண்மைதானோ?'' என்றுகேட்டாள் செல்லவீராயி.

தேயிலைக்கன் றேரத்திலே
தேன்குடித்த மந்திபோல
வாயிலே ஈ மொய்க்கநின்றான்
முத்துக் கங்காணி — ''ஐயா!
வந்ததென்ன சொல்லு'' என்றாள் செல்லவீராயி.

கண்ணே! கற் கண்டேஎனைக்
கவர்ந்துவிட்ட கோகுலமே!
வண்ணமயில்! வாடி'' யென்றான்
முத்துக் கங்காணி! — மச்சான்!
மாலையிலே வாறேனென்றாள் செல்லவீராயி.

நரியை நம்பிப் போன நண்டாய்
நங்கையவள் ஓடிவந்தாள்
''அரிவையே நீ அஞ்சேல்'' என்றான்
முத்துக் கங்காணி! — பாவம்
அவன் மொழியில் தனைமறந்தாள் செல்லவீராயி.

பாட்டை இன்னும் முடிக்கவில்லை அவள். ரோசம் பெங்கிய வீராயி இடையிலே சேலையை இறுகச் சுற்றினாள். கூட்டத்தை இடித்துக் கொண்டு முன்னுக்கு வந்தாள்.

''அது என் விருப்பமடி! நீ யாரடி கேட்க?'' என்று எரிந்து விழுந்தாள். ஆனால் அந்தப் பூங்கொடி சிரித்தாள்.

''வீராயி! வீராயி!
வெகுளுவதேன் வீராயி?
ஓரிரவு உனையணைத்தான்
முத்துக் கங்காணி — வேறோர்
உத்தமியை மணமுடித்தான் உண்மைவீராயி...''

வீராயிக்கு ஆத்திரம் வெடித்தெழுந்தது. அவள் உதடுகள் துடித்தன. கண்களிலிருந்து கங்கையாறு பொங்கிற்று. வரம்பு மீறிய வார்த்தைகள் கனலெனத் தெறித்தன.



வீராயி: உத்தமி பெரும் உத்தமி யிவள்
ஊர் சிரித்திடு முத்தமி
எத்தனைதர மேகினும் நீ
என்னையாரடி கேட்பவள்?
சுத்தமுள்ளவள்! பத்தினியிவள்;
தோற்றமேயது செல்லுதே.
ஒட்டவெட்டுவன் நாவினையினி
ஓர்மொழியெனைக் கூறினால் ......

என்னையாரென எண்ணினையடி
எருமைமாடுபோல் துள்ளுறாய்!
சொன்னவாயினுள் மண்ணையிட்டுளி
சொருகுவேன்பல் திருகுவேன்.
கன்னியா? அடி காமுகி! ஒரு
கட்டிலாதசி றுக்கிநீ
இன்னுமென்னடி பேசுறாய்? பல்
இளிக்கிறாய்கண் விழிக்கிறாய்!

அவள்: வீரமோ இது தீரமோ அடி
வேல்விழிதனி னோரமோ?
காரமாய் எனைப் பேசுறாய் உன்
காதல் தோற்றதில் ஏசுறாய்!
நாரியே! அடி நங்கையே இவை
நானுரைத்தது மோசமோ?
வாரிபோல் வசை வீசுறாய் ஏன்
வம்புவார்த்தைகள் பேசுறாய்?

வீராயி: என்னை ஏன்டி இழுக்கிறாய் அடி!
ஈனமற்றவள் மூடடி
கன்னம் வாங்கத் துடிக்குதோ? என்
கைருசியறி யாயடி!
முன்னம் ஓர்முறை என்னை வீண் பழி
மூட்டினாய் கதை தீட்டினாய்
அன்னையாணையுன் மன்னை பீறுவன்
அஞ்சவா அடி வஞ்சகி!

கேலி செய்து நகைக்கிறாய், வா
யாடியே வெறும் பேடியே!
வேலிகட்ட நீ யாரடி எனை
மேய்க்கிறாய் உயிர் மாய்க்கிறாய்?
தாலி கட்டுதல் யாரடிசா
முண்டியேவனப் பன்றியே
நீலிநீயொரு பெண்ணிலே? யென்ன
நேர்மையோ உனக் கோர்மையோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவள்:** வேலையற்றவள் மூடடிவாயை
வீணிலே கோபம் மூட்டுறாய்
நாலு சொத்தையில் வேண்டுமோ? சீ;
நாய்போல் ஏனடி கத்துறாய்?

**வீராயி:** வேலையற்றவள் நீயடியென்னை
வேண்டுமென்றே யிழுக்கிறாய்
சேலைகட்டிய கன்னி! வாடி நீ
தீர்க்கிறேன் உன்னைப் பார்க்கிறேன்.

வாய்ப்பேச்சு இறுதியில் கைப்பேச்சாக முடிந்தது. இருவரும் ஒரே வயதுக்கன்னியர். அந்த மலைச் சாரலிலே மல்யுத்தம்! பேச்சுமூச்சின்றி வேடிக்கை பார்க்கத் தொடங்கிவிட்டார்கள் மற்றப்பெண்கள். கற்பாறையிலே கட்டிப்புரண்டு மோதியெழுந்தனர். காதணிகள் சிதறின. கைவளைகள் நொருங்கின. குழல் அவிழ்ந்தது. சேறும் சுரியும் எங்கும் புரண்டது. இறுதியில் அழுதுவடித்துக்கொண்டு வீடுநோக்கி ஓடினாள் வீராயி

மற்றவள் ஒரு வீரப்புன்னகையோடு எழுந்து நின்று இடுப்பிலே சேலையைச் செருகினாள். பாவம் வீராயியின் கன்னம் வீங்கிப்போயிருந்தது. மற்ற வீராங்கனையோ பீடு நடை போட்டு வீட்டையடைந்தாள். அடுத்த நொடி அவள் குளிக்கும் ஆடையோடு அந்த நீர் வீழ்ச்சியை நோக்கி நடந்தாள்.

அப்போது கறுப்பன் அங்கே வந்தான்.

**கறுப்பன்:** மீனாச்சி! மீனாச்சி! எங்கபோறா? கொஞ்சம் நில்லு புள்ள.

**மீனா:** குளிக்கப்போறன். ஏன் மாமா?

**கறுப்:** இஞ்சபாருபுள்ள; ஒனக்குக் கையிப்ப நீண்டு போச்சி. கறுப்பனெண்ணா இந்தத் தேயிலைத் தோட்டமே நடுங்கும். ஆமா.

**மீனா:** என்ன மாமா; இதுக்குத்தானா என்னை நிக்கச்சொன்னே?

**கறுப்:** ஆமா; கதையப்பாரு; அவ அப்பன் மவ; ஏம்புள்ள ஒனக்கு முதுகு ஒளையுதா?

**மீனா:** (கோபமாக) மாமா!

**கறுப்:** ஆளப்பாரு. கோபமா: கோபம்; பொத்துத்து வருதில்லே; பெரீய சண்டியன் மவ:

**மீனா:** மாமா! வீணா என்னுட கோபத்தக் கிண்டுறா; ஆமா.

**கறுப்:** ஏம்புள்ள; ஒன்னுட கோபம்; ஓம்மட்டுல. என்ன என்ன செய்யப்போவுது? வீராயிய அடிச்சிப்போட்டியாமே: ஒங்கப்பன் சோறு சீல குடுத்தா வளத்தே?

**மீனா:** நான் சோறு சீல குடுத்தா இப்படியா விடுவேன்; நொறுக்கு நொறுக்கிண்ணு நொறுக்கி, சூட்டுக்கோல் வைப்பேன்; சூட்டுக்கோல்; ஆமா முதுகொளஞ்ச சாரப்பாம்பு பட்டிக்காரன்கிட்டப் போவுமாம். மாமா! மீனாச்சி நல்லவளுக்கு நல்லவ. கெட்டவளுக்குக் கெட்டவ. பேசாமப் போயிடு.

**கறுப்:** என்ன புள்ள; பாக்கப்பாக்கத் தலைக்குமேலே போவுது?

**மீனா:** மாமா! இந்தப் பயறை இந்தப் புள்ளக்கிட்ட வெதைக்காத; ஆமா. ஒன்ட மெரட்டலுக்கு முத்துக் கங்காணிதான் நடுங்கணும்.



**கறுப்:** இந்தாபாரு புள்ள; முத்துக் கங்காணியை இழுக்காதே. நாளைக்கு வேலைக்கு சீட்டுக் கிழியும். சொல்லிப்புட்டன்

**மீனா:** ஐயே; ஒனக்குத்தான் மாமா, இந்தப் பிச்சக் காசி பெரிசு: விடிய அஞ்சுமணியிருந்து ராத்திரி ஆறு மணிபொறுக்க வேலை செஞ்சா, காவயத்துக்கே பத்தாது கூலி. சீட்டுக்கிழியுமாமே; சீட்டு. முத்துக் கங்காணி ஒனக்குத்தான் ராசாத்தி மவன்; எனக்கில்ல. ஒசத்தியப்பாரு, ஒசத்திய.

**கறுப்:** (கோபமாக) மீனாச்சி!

**மீனா:** இந்தாபாரு மாமா; மீனாச்சிய அறியாம வாலாட்டாத: அப்புறம்; ஆமா.

**கறுப்:** யாரடி என்னைக் கேலியா பேசுறாய்
யாரடி அடி யாரடி
தலைபோயிடும் அடிபேதையே
மரியாதையாய்க் கதைபேசடி (யாரடி...)

பாரடி எனைப் பார்த்துமா பேசிறாய்
பாரடி அடி பாரடி
மலையாவினும் பெயர்கேட்டதும்
தலை கூனுவர் இதை நீயறி (யாரறி...)

**மீனா:** (சிரிப்பு) ஆ; கா, கா, கா. கா......
பேசாதே பேசாதே தங்கமாமா
என், சிங்கமாமா! — நாளை
பெரிய போத்தலொன்று வாங்கித் தாறேன்-நானும்
(பெரிய)

**கறுப்:** போத்தலெடுத்து நீ வாங்கிவந்தால் — உன்
புத்தியை மெச்சுவன் மீனாச்சி — அடி
ஆத்திரம் தீரும் வழியதடி — எனை
அன்பாயழையடி மீனாச்சி

**மீனா:** கத்தி பிடிக்குமுன் கையினிலே — மாமா! கையினிலே
கஞ்சி குடிக்கவும் காசியில்லே — பாவம் (கஞ்சி)
முத்துக் கங்காணியை வால்பிடித்தால் — மாமா
வால்பிடித்தால்
மூன்று முறையும் குடித்திடலாம் — மாமா
மூன்று முறையும் குடித்திடலாம்.

**கறுப்:** கேலியா பேசிறாய் மீனாச்சி — எனைக்
கெட்டவனென்று நீ ஏசுகிறாய்?
நாலு முழத்திலோர் கம்பிருந்தால் — உனை
நாய்போலடித்து நொறுக்கிடுவேன்.

**மீனா:** ஆ! ஐயோ! அம்மா! (காலைக் கையால் பிடித்துக்கொண்டே கூச்சல் போடுகிறாள்.)

**கறுப்:** ஆ! என்னபுள்ள; காலெல்லாம் ரத்தம்?

**மீனா:** அம்மா! ஐயோ!

**கறுப்:** என்ன காலுல? எடுபுள்ள; கையால மூடிவச்சிக்கிட்டுக் கூச்சல் போடுறியே! எங்கே கையை எடு ..... (கையை எடுக்கிறான். ஒரே நேரத்தில் இருவரும் பயங்கரமாக அலறுகிறார்கள்.)

(அடுத்த 'மலரி'ல் ''எதிரொலி'')

(அடுத்த 'மலரி'ல் ''எதிரொலி'')



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை ஈழம்

## ''வேதாளம் சொன்ன கதை"
### (கவிதை நாடகம்)

—★—

கடந்த 16-6-70ல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 'நிழல்' நாடகக் குழுவினர் அளித்த ''வேதாளம் சொன்ன கதை'' என்ற கவிதை நாடகம் அரங்கேறியது. தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து நடாத்திய இந்த நாடகத்திற்கு கல்வி அமைச்சர் கௌரவ ஜனுப் பதியுதீன் முகமது அவர்கள் தலைமை வகித்தது மிகவும் பொருத்தமாக அமைந்தது. நாடக உலகைச்சேர்ந்த பலர் இந்த நாடகத்திற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கவிதை நாடகத் தொடரில் இது இரண்டாவது முயற்சி. முதல் கவிதை நாடகமாகிய 'மகாகவி' யின் ''கோடை'' பெருவெற்றியளித்தது. 'வேதாளம் சொன்ன கதை' நாடக உலகிற்குச் சற்றே புதுமையானதாகவும் இருந்ததெனலாம். சுஹேர் ஹமீட் அவர்களின் நெறியாள்கையில் உருவாகிய பல நாடகங்கள் வெற்றியடைந்திருக்கின்றன. 'வேதாளம் சொன்ன கதை'யும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை.

நாடகம் ஆரம்பத்தில் சற்றே 'போர்' அடித்தாலும் 'பசாசின்' வருகைக்குப்பின் சூடு பிடித்துவிடுகின்றது. சில நிமிட நேரமே மேடையில் தோன்றும் இந்தப் பிசாசின் வேடத்தை லடிஸ் வீரமணி ஏற்று எந்தப் பாத்திரத்தையும் தம்மால் சிறப்பாக நடித்துக் காட்டமுடியும் என்று நிரூபிக்க, இரசிகர்களும் அதை ஏகமனதாக ஆமோதித்தார்கள். லடிஸ் வீரமணியைத்தவிர அந்தப் பாத்திரத்தை வேறு எவருமே அத்தனை லாகவமாகக் கையாண்டிருக்க முடியாது. உண்மையாகப் பசாசு தோன்றியபொழுது பல பெண்களும், சிறுவர்களும் பயந்து நடுங்கியதை நான் அவதானித்தேன். வேதாளமாக நடித்த பிரான்சிஸ் மிகவும் அடக்கமாகவும், சிறப்பாகவும் தனது பங்கைச் செய்து பெயரைத் தட்டிக்கொண்டு போய்விடுகிறார். 'நிர்மலர்' ரகுநாதன் முனிவராகவும், அரசகுருவாகவும் தோன்றினர். முன்னதைவிட பின்னது எடுப்பாக இருந்தது. கதாநாயகனாக நடித்த ஜவாகர் வழக்கம் போலவே தனது சிறந்த நடிப்பை வெளிக்காட்டிப் பாராட்டுப் பெற்றதைக் குறிப்பிடத்தான் வேண்டும். ஆனால் இடையிடையே சிவாஜி கணேசனை ஞாபகமூட்டியது ஒரு குறையே. பிராமணனாக நடித்த அமீரும் இயற்கையாக நடித்தார்.

மற்றும் ஜெயந்தி, தேவராணி சிசுநாகேந்திரா ஆகியோரும் தத்தம் பாகத்தைச் செய்து முடித்தனர். மொகமட் சாலியின் இசையும், மர்சூக்கின் ஒப்பனையும், போல் திலகநாயகத்தின் பின்னணி இசையும் நாடகத்திற்கு மேலும் மெருகு ஊட்டின.

மொத்தத்தில் ''வேதாளம் சொன்ன கதை'' நாடகம், நாடகப்பண்பு தவறாத, ஒரு புதுமையான, சலிப்பில்லாத நாடகமாக அமைந்திருந்தது.

—கூத்தன்.

✲

## தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வைரவிழா – நாடகவிழா

—★—

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியினர் இம்மாதம் 25ம் திகதி தொடக்கம் வைரவிழா நடத்துகின்றார்கள். தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடைபெறும் இவ்விழாவில் தினமும் ஒவ்வொரு நாடகமும் இடம்பெற ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கிறது.

கடைசி மூன்று தினங்களிலும் கொழும்பிலிருந்து மூன்று நாடகங்கள் வரவழைக்கப்படுகின்றன. ஜுலை மாதம் 2ம் திகதி சிவதாசன் குழுவினரின் "வாடகைவீடு" என்ற நகைச்சுவை நாடகமும், 3ம் திகதி கமலாலயம் அளிக்கும் "ஞான ஒளி" என்ற நாடகமும், கடைசித் தினமான 4ம் திகதி கொழும்பு யாழ் கலையரங்கத்தினரின் ''பித்தலாட்டம்'' என்ற நகைச்சுவை நாடகமும் நடைபெறுமென்று எதிர்பார்க்கப் படுகின்றது. ''பித்தலாட்டம்'' என்ற நாடகம் கடந்த 27–2–70 பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மேடையேறி பலரின் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

நாடகப் போட்டிகள் பலவற்றில் பரிசுகளைத் தட்டிக்கொண்ட மகாஜனக் கல்லூரி, தனது வைரவிழாவையொட்டி இப்படி ஒரு நாடக விழாவை ஏற்பாடு செய்தது மிகப் பொருத்தமானதும், வரவேற்கத்தக்கதுமாகும்.

—★—




மட்டுநகர் வேனில் விழாவில் இடம்பெற்ற ''ஐயோ பாவம்'' நாடகத்தில் ஒரு காட்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் ஒன்று அழுகிறது!



நிவேதிதா

இரத்தின வல்லித் தோட்டத்தின் வலப்புறத்தில் பரந்துள்ள சிங்களக் கிராமத்தின் ஆரம்ப வாசல்தான் அந்த முனை. பள்ளத்தாக்கில் அமைந்துள்ள தேயிலைத் தொழிற் சாலை, துரை பங்களா, மற்றும் தொழிலாளர் குடியிருப்புகள் அனைத்தையும் மேலே மலைச்சிகரத்தின் நெற்றியில் நெளிந்து செல்லும் தார் ரோடுடன் இணைக்கும் பிரத்தியேக சரளைக் கல் ரோட்டின் 'இஸட்' வளைவுகள் வரிசையில் இரண்டாவது வளைவின் தலைமாட்டில் வந்து தொடும் முனை அது. அந்த எல்லையின் காவலன் போல் இறுமாப்புடன் நிற்கிறது அந்த இரட்டை மரம். இரட்டை மர முடக்கு, இரட்டை மரத்துக் கடை, என்றெல்லாம் தன்னைச் சுற்றியுள்ள பொருட்களுக்குப் பெயர் தானம் செய்ததோடல்லாமல், ஒரு பெரிய முற்றத்திற்குக் குளு குளு நிழலையும் கொடையாக வழங்கிக்கொண்டு, குடையாக விரிந்து நிற்கும் அந்த மரத்தின் தோற்றமே ஒரு அதிசயம். ஆமாம்! நம்மவர்களிடம் அரசையும்; வேம்பையும் அருகருகே நட்டுவளர்க்கிற ஒரு சம்பிரதாயம் உண்டல்லவா? அதுமாதிரி யாரோ ஒரு பண்டைய கிராமவாசி அரசங்கன்று ஒன்றையும், ஆலங்கன்று ஒன்றையும் ஒன்றாக நட்டுவிட, அவை ஒரே கதியில் வளர்ந்து அர்த்த நாரீசுவர வடிவில் இணைந்து, வேற்றுமையின்றிப் பிணைந்து நலாபுறமும் கிளைகளைப் பரப்பிக்கொண்டு விசுவரூபமாக நிற்கிற கோலம் பார்க்க வியப்பாக இருக்கும். ஆலமரத்தின் விழுதுகள் அரச மரத்தையும் தாங்கிக்கொண்டிருக்கிற அருமையான காட்சி மனதைச் சிலிர்க்க வைக்கும்.

அந்த இரட்டை மரத்தின் விசாலமான நிழல்படுக்கையின் ஒரு புறம் ஒரு சிறிய புத்த கோயில் — என்றோ அழகுடன் திகழ்ந்து இப்போ அனைத்தும் சிதைந்துவிட்டதற்கு அடையாளமாகச் சிற்பவேலைப்பாடமைந்த கற்தூண்கள் சிலவும், துண்டு துண்டுகளாய் நிற்கும் சுவர்ப்பகுதிகள் சிலவும் காட்சியளிக்கின்றன. இன்னொரு புறத்தில்தான் லொக்கு பண்டா முதலாளியின் கடையும் இருக்கிறது. லொக்குபண்டா முதலாளியின் அருமை மகள்தான் சுமித்திரா. பண்டையாவுடைய கடையின் சின்ன முதலாளியாக விளங்கி, சித்திரப் பதுமையாய் நடந்து, சின்ன முயல்குட்டிபோல் ஓடித்திரிந்த அவள்தான் இன்று இடிந்துபோன கோவிலைப்போல் சிதைந்துபோன மனதுடன், சிந்திக்கவும் திராணியின்றி அந்த இரட்டைமரத்தின் அரசமரப் பகுதியில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள்.

தோட்டத்து மக்கள் அந்த 'நாட்டுத் தொங்கலுக்கு' வேலைக்கு வரும்போதெல்லாம் பகல் நேரத்தில் வீட்டுக்குச்செல்லச் சங்கடப்படுவார்கள். பெண்கள்கூட 'ரெட்டை முடக்கு' ரோட்டிலே கணக்கப்பிள்ளை கொழுந்தை நிறுக்க, லொறிவந்து ஸ்டோருக்கு ஏற்றிச் சென்றதும், 'உஸ் அப்பாடா' என்று ரெட்டைமரநிழலில் வந்து ஓய்ந்து உட்கார்ந்து விடுவார்கள் வீட்டிலுள்ள சின்னஞ்சிறுசுகள் கொண்டுவரும் சுட்ட ரொட்டித் துண்டையும், சூடு ஆறிய சாயாத் தண்ணியையும் தொண்டைக்குள் இறக்கிக் கொண்ட சிலர் திருப்தியுடன் வெற்றிலை போட, கங்காணிமாருடன் மற்றும் சிலர் 'ரெட்டை மரத்துக் கடை'யை முற்றுக்கை இடுவார்கள். அன்று கடையில் வியாபாரம் ஏதேஷ்டம்!

கடை என்றால் கண்டி, கொழும்பில் உள்ளமாதிரிக் கண்ணைப் பறித்துக் கருத்தைப் பிடுங்குகிற 'நாகரீகக் கடை'யல்ல. டவுனிலிருந்து பல மைல் தூரம் ஒதுங்கிக்கிடக்கும் தோட்டத்து மக்களின் அன்றாட-அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பலசரக்குக் கடை, பாக்கு வெற்றிலைக் கூடை, தேத்தண்ணிக் கடை, காய்கறிக் கடை முதலான பல 'கடை'களையும் உள்ளடக்கிய ஒரு சின்னக் கடை! கடைக்குப்பின்னாலேயே பண்டையாவின் வீடும் ஒட்டிக்கொண்டிருக்கிறது. அந்த வீட்டின் குசினியை ஒட்டிய கொட்டிலில் ஒரு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘தண்ணிக்கடை’ யும் உள்ளடங்கி இருக்கிறது என்பது பகிரங்க இரகசியம்......! மொத்தத்தில் கடைக்குத் தனியாகப் பெயர்ப்பலகை இல்லை. ஆகவே மொத்த வியாபாரத்திலும் மோசமில்லை.

இத்தகைய சிறப்புக்களை எல்லாம் ஒருங்கே பெற்ற கடை முதலாளியின் தலைமகள்தான் சுமித்திராவதி. அவளைத்தவிர மற்றும் இரு ஆண்பிள்ளைகள் உண்டு. இரட்டைப் பிள்ளைகள். முக்கால் மைலுக்கப்பால் இருக்கும் பாடசாலையில் நலாம் வகுப்பில் படிக்கிறார்கள். இடையில் ஒரு பெண் இருந்தாள், ‘தயாவதி’ என்று. அவள் பத்து வயதில் செத்துப்போனாள். ஆகவே சுமித்திரா பண்டா முதலாளியின் மூத்த மகள் மட்டுமல்லாது, ஒரே செல்ல மகளாகவுமிருந்தாள். இந்த இரட்டிப்புக் கௌரவம் அவளைத் துள்ளித்திரியும் சுதந்திர மான்குட்டியாக வளர்த்து விட்டிருந்தது. சுட்டித்தனமும், கெட்டித்தனமும் கூடவே வளர்ந்திருந்தன. அவளும் எட்டாம் வகுப்புவரை படித்தவள் தான். பத்தாம் வகுப்பைப் புறம் கண்டோ, பல்கலைக்கழகத் திறம் கண்டோ அவள் உத்தியோகம் செய்யவேண்டிய அவசியமில்லாது தோன்றியதால் முதலாளி அவளை வீட்டில் நிறுத்திவிட்டார். அதனால் நஷ்டம் எதுவும் ஏற்படவில்லை. மாறாகக் கணிசமான லாபம்கூட ஏற்பட்டது ஏனெனில், முதலாளி சாமான் கொண்டுவர ‘டவுனு’க்குப் போகின்றபோதும், அநேகமாக வாரம் ஒரு நாள்—மற்றும் தினசரி மாலைகளில் அவர் தம் வீட்டின் குசினிப் பக்கம் மேற்பார்வையிடச் செல்லும்போதும். (அங்கே வியாபாரம் செய்யும் முதலாளி சுமித்திராவின் அம்மா.) சுமித்ரா தான் முன்புறக் கடையின் பொறுப்பாளர். அந்நேரம் கடை முதலாளி சாமான் கொடுப்பவர்—கணக்கெழுதுபவர்-காசு வாங்குபவர் எல்லாமே சுமித்திராதான்.



இப்படியாக அவள் பார்த்த உத்தியோகம்தானே, அவனை சந்திக்கவும் — இந்தச் சஞ்சலமடையவும் வழிகோலிற்று.

இரண்டு வருடத்திற்குமுன் ஒருநாள்...


முற்பகல் நேரம் மூடிக் கவிந்த முகில் குமுறிச் சிரித்துக்கொண்டிருந்தது.

அன்று காலை பண்டா முதலாளி டவுனுக்குப் போயிருந்தார். கடையில் சுமித்திரா இருந்தாள். இரண்டொருவர் சுவரோர பெஞ்சில் உட்கார்ந்து பீடி புகைத்தபடி ஏதோ பேசிக்கெண்டிருந்தனர். சுமித்திராவின் அம்மாவும் உள்வாசற்படியில் நின்றவாறு அவர்களுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தாள். வெளியே இடி மின்னலுடன் ‘சோ’ வெனப் பொழியும் மழையில் நனைந்து, கிளைகளை அசைத்துக்கொண்டிருக்கும் அந்த இரட்டை மரத்தை நோக்கியபடி உட்கார்ந்திருந்தாள் சுமித்திரா. அப்போதுதான்.....

‘பளீ’ரென ஒரு மின்னல் சாட்டை, பூமியதிரும் இடியொலி, கடையின் தளமும் சுவர்களும் கூட இலேசாக அதிர்ந்தன. அந்த அதிர்வு கூட முற்றாக நிற்கவில்லை. ஏழெட்டுப் பேர் திமுதிமுவென ஓடிவந்தனர் கடையை நோக்கி. ஆளுக்கொரு இறப்பர் சீட்டுகளைத் தலையில் அணிந்தவண்ணம் யாரையோ கால்மாடு தலைமாடாகத் தூக்கிக் கொண்டு வந்தார்கள் அவர்கள். கொண்டு வந்து பெஞ்சின்மேல் கிடத்தினார்கள். ரெட்டை மரத்துத் துண்டிலே முள்ளு குத்திக் கொண்டிருந்தார்களாம். காற்றில் ஒடிந்த மரக்கிளை ஒன்று அவன் மீது விழுந்துவிட்டதாம் !

தலையில் இரத்தம் கசியும் ஒரு கட்டு. தோளில் ஒரு உருமால்... பல அடிகள் பட்டிருக்கவேண்டும். அவன் நினைவற்றுக் கிடந்தான். பார்க்கவே நெஞ்சு வலித்தது சுமித்திராவுக்கு. வாழும் பருவம், வஞ்சகமின்றி வளர்ந்த உடல்.. ... அவனுடைய முகம் அவளை அடிக்கடி பார்க்கத்தூண்டியது.

தோட்டத்து லொறி வந்து கடைவாசலில் நின்றது. அவனை அள்ளிப் போட்டுக்கொண்டு ஒரு சிலர் உடனே சென்றனர். மீதிப் பேர் தமக்குள் அதிர்ந்து, அந்த அவலநிகழ்ச்சியைப் பற்றி விமரிசனங்கள் செய்துவிட்டு ஆளுக்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரு தேத்தண்ணியும் குடித்து விட்டு மலைக்குச் சென்றனர். இரண்டு மூன்று வாரங்களுக்குப் பின்னர் 'அவன்' இன்னொருவருடன் கடைக்குச் சாமான் வாங்க வந்தான். அவனைக் காண்கையில் அந்த இடியும், மின்னலும் அவள் ஞாபகத்துக்கு வந்தன. இயல்பான ஒரு ஆதரவுடன் அவனை நோக்கிச் சுகம் கேட்டாள் சுமித்திரா.

"இப்ப எப்படி? நல்ல சொகமா நீங்க?''

அவள் தமிழ் பேசும் அழகை ரசித்தபடி அவன் புன்னகை செய்தான். தலையசைத்தான். அறிமுகமாயிற்று—தொடர்ந்து சில கேள்வி பதில்கள். கதை ஆரம்பமாயிற்று. அதற்குப்பின் அப்படியான சந்தர்ப்பங்கள் எத்தனை எத்தனையோ ஏற்பட்டன. அவன் சுபாவமே குறும்புத்தனம். அவள் அதற்கு நிகரான துடுக்குக்காரி. அவனுடைய குறும்புத்தனம் அவளுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. அவன் தேயிலைத் தோட்டத்தில் கூலி வேலை செய்பவனாய் இருந்தாலும் கம்பீரமான தோற்றமும், கண்ணியமான குணமும் கொண்டிருந்தான். அதையும்விட அவனிடம் அன்புமயமான ஒரு இதயம் இருந்தது. அதே அச்சில் தன்னிடமிருந்த இதயத்தை அவனிடம் கொத்துப் 'பண்டமாற்றுச்' செய்து கொள்ள விரும்பினாள் அந்த அழகி. அவனும் அதற்கு உடன்பட்டு — அந்த 'மாற்றமும்' ஆகிவிட்டது. சுமித்திரா தன் தந்தையின் வியாபார தந்திரங்களைக் கடைப்பிடிக்கவில்லை. மாறாகத் தனக்குத் தேவையான புதிய தந்திரங்கள் சிலவற்றைக் கற்றுக்கொண்டாள். அவன் வரும் நேரங்களில் பிறர் அறியாமல் கண்ணாலேயே கதை சொல்லிவிடுவது. ரஞ்சினியுடன் ஆற்றுக்குக் குளிக்கப் போவதாகக் கூறிவிட்டுப்போய், அங்கே புதிதாகக் 'கொந்தரப்பு' வெட்டும் அவனைச் சந்திப்பது...இப்படியான சில தந்திரங்கள்தான்.

அவள் அவனிடம் கெஞ்சி யாசித்தாள்.

''நீங்க என்னைய உட்டுட்டுப் போவ ஏலுமா? நாங் என்ன செய்யறது? வாணுங்க! இங்க பாருங்க...? நாங், நம்ப தாத்தா, அம்மா தாருக்கும் தெரியாம ஒங்ககூட வாறன். நாம்ப ரெண்டுபேருங் 'டவுங்' பக்கம் போயிட்டு ஒரு சின்ன கடை வைச்சுக்கிட்டு நல்லா இருக்கலாங்! காசு வேணுமென்ட நாங் கொண்டு வாறேன். நீங்க கவலைப்படாம சரி சொல்லுங்க.'' அவளது கெஞ்சல் மொழிகள் காற்றோடு போயின. அவள் அழுத கண்ணீர் ஆற்றோடு கலந்தது.

அவன் மரம்போல் நின்றான். ஏன்? அவனுக்கு இதயமே இல்லையா? இருந்ததைத்தான் சட்டமென்ற உருவில் வந்த யமன் கொன்றுவிட்டானே! அவன் என்ன செய்வான்? பாவம், ஏழை! பிறப்புரிமைகூட அற்ற அகதி!

அவள் அதையெல்லாம் புரிந்து கொள்ளவில்லை. அவளுக்குப் புரிய வைக்க அவனுக்கும் தெரியவில்லை. முதலில் அவனுக்கு ஒன்றும் புரியவில்லையே .... ?

அவள் மனம் உடைந்து அவனைச் சபித்தாள்.

'' என்னை ஏமாத்திட்டது தானே .. ...? நீங்க சந்தோசமா இருக்கமுடியுமா எங்கினேயும்?''

அவனுடைய சந்தோஷ வாழ்வைத்தான் பெற்றுப் பிறந்த சாபக்கேடு என்றோ சுட்டுச் சாம்பலாக்கி விட்டதே. இவள் சாபம் இனி என்ன செய்யப்போகிறது? என்றாலும் அவன் உயிரெல்லாம் ஒடுங்க அவளிடம் காரணம் காட்டினான்.

'' சுமி! எனக்கு அப்பா இல்லைங்கிறது உனக்குத் தெரியும் தானே? உன்னைமாதிரி ரெண்டு வயதுவந்த தங்கச்சிகள் எனக்கு இருக்கிறதும், இன்னும் இரண்டு தம்பிகள் இருக்கிறதும், ஒரு வயது போன தாய் இருக்கிறதும் உனக்குத் தெரியுமில்லையா? இங்கே பார் சுமி! இவங்க எல்லோரையும் விட்டிட்டு, எனக்குமட்டும் சந்தோச வாழ்வு வேணும்னு ஓடிப்போறது என்னும் பெரியகாரியமில்லை. ஒருவேளை... சுமி! இவங்க எல்லோரும் இதே தோட்டத்திலேயாவது, அல்லது இந்த சிலோன்லே எந்த பகுதியிலேயாவது தொடர்ந்து இருக்கிறதாயிருந்தா கட்டாயம் இப்பவே வேணும்னாலும் நான் உன்னை எங்காவது — நீ சொல்றபடி கூட்டிட்டுப்போயி, நாம ரெண்டு பேரும் எப்படியாவது வாழலாம். காசுகொண்டுவந்து கொடுத்தா என்னை நான் காப்பாத்தணும்? இல்லை சுமி! இதோபார்! இந்த ரெண்டு கையாலேயும் பாடுபட்டு உன்னைக் காப்பாத்துவேனே! ஆனா சுமி... நீ யோசிச்சுப்பாரு! தகப்பனில்லாத நாலஞ்சு பிள்ளைகளும் வயசுபோன ஒரு தாயும் — அகதிகளாக அந்நிய ஊருக்குக் கப்பலேறவேண்டிய ஒருசந்தர்ப்பத்திலே நானும் கைவிட்டுட்டா? சுமி! சட்டம் ஒருவேளை என்னை மன்னிக்கலாம். ஆனால் தெய்வம் மன்னிக்குமா? அதுதான் மன்னிச்சாலும் என் மனம்...? அது என்னை எப்படி மன்னிக்கும்?''

'' நீங்க பேசறது எனக்கு வெளங்கவே இல்லை நீங்க என்ன தான் செய்யப்போறீங்க..?'' அவள் விம்மினாள்.

''நீதான் என்னை மன்னிக்கணும் சுமி?''

''அப்படி எண்டா?''

''சுமி...சுமி...நீ இந்த ஊரில் எல்லா உரிமையும் உள்ளவ. எப்படி வேணுமானாலும் வாழலாம். அதனாலே...நீ என்னை மறந்துடு சுமி!''

''ஐயோ! ஒங்களுக்கு இந்த மாதிரிப் பேசவும் முடியுதா?'' அவள் அழுதாள். அவனும் சேர்ந்து அழுதான். அவளது கண்ணீரைத் துடைக்காமலே, தன் விழி நீர் காயுமுன்னமே, பேசமுடியாத ஊமையாகி எழுந்து நடந்தான். அவளோ 'நில்' லென்று கூவ ஆந்திரம் எழுந்தும் நிலைமயங்கி, மனம் புழுங்கி நின்றாள்.

நீரில் எழுதிய எழுத்துக் கண்ணுக்குத் தெரியுமா? கண்ணீரில் எழுதப்பட்ட கதைகளும் அப்படித்தான். அநேகமாக அவை பிறர் அறியாமலேயே அழிந்து போய் விடும்—அழிக்கப்பட்டுவிடும்.

ஆனால் மனதில் எழுதிவைத்த கதைகள்? அவற்றை அவ்வளவு சுலபத்தில் அழித்துவிட முடிகிறதா என்ன? அப்படி அழித்துவிட முடிந்தால் ஒரு பெரிய சாதனை தான். அதே சமயம் அவை அழிவுபடாமல் இருப்பதோ? அம்மம்மா! சொல்லவொண்ணு வேதனைதான்!

அந்த இரட்டை மரததின் அரசிலைகளும், ஆலிலைகளும் எவ்வித வேறுபாடுமின்றிக் காற்றின் இதமான அலைப்பில் கலகலத்துச் சிரிக்கின்றன.

படைப்பில் உயர்ந்த மனித இனத்தால் சாதிக்கமுடியாத ஒரு இணைப்பை — ஒருமையை எத்தனையோ ஆண்டுகளுக்குமுன் — பூமியிலிருந்து எழும்போதே சாதித்துவிட்ட தன் செயற்கரும் செயலை எண்ணிப் பூரிக்கிறது போலும்!

கேவலம் மரங்கள் கூட இனத்துடன் இனம், இணைந்து உறவு கொண்டாடி மகிழுகின்றன. பாழாய்ப் போன மனிதனால் மட்டும் அதுமுடியுதில்லையே! அர்த்தமற்ற சட்டங்களையும், சம்பிரதாயங்களையும் உண்டாக்கிக்கொண்டு அந்த வலைக்குள் தன்னையும் சிக்கவைத்துக்கொண்டு துன்புறுவதில் மனிதனுக்கு ஏன் இத்தனை மோகம்?

சுமித்திரா கடையுள் நின்றபடி அந்த 'ரெட்டை மர'த்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கிறாள். எண்ணங்கள் புயலாகி, கடலாகி என்னென்னவோ செய்கின்றன. அவளுக்கு ஏதோ புரிகிறது. அதேசமயம் ஒன்றுமே புரியவுமில்லை.

ஒன்று மட்டும் சர்வ நிச்சயம்.

இனி 'அவன்' வரமாட்டான்! அவனை இனிக் காணவும் முடியாது.

அவனுடன் ஓடிப்போகவும் முடியாது.

அந்திப் பொழுது விடைகேட்டுக்கொண்டு — அவசர அவசரமாய்ப் புறப்பட்டுக்கொண்டிருந்தது. மங்கிய வெயிலின் ஒளி தூசிபடிந்தமாதிரி, நிழலுடன் இணைந்து நழுவிக்கொண்டிருந்தது.

'மறந்துவிடு' என்று மன்றாடிய அவன் குரலோசையும் அடங்கிவிட்டது. அதில் தொனித்த ஏக்கம் அவளுள் நித்தியமாய் குடிபுகுந்து கொண்டது.

கடையின் பூஜாமாடத்தில் உள்ள சுவாமி படங்களுக்கு முன்னால் உள்ள விளக்கை ஏற்றிவைக்கிறான் அவளுடைய தம்பிகளில் ஒருவன். மற்றவன் சாம்பிராணி தூபம் போடுகிறான். லொக்கு பண்டா இரண்டு ஊதுபத்திகளைக் கொளுத்திச் சொருகுகிறார்.

யாரோ இருவர் குசினிப்பக்கமிருந்து குளறும் மொழிகளுடன் தட்டுத்தடுமாறிச் செல்கின்றனர்.

சமீபத்திலுள்ள 'பண்சல'விலிருந்து 'பண' ஒலிக்கிறது. சுமித்திரா சாம்பிராணிப் புகையூடே, விளக்கொளியில் மினுமினுக்கும் புத்தபகவானின் முகத்தைப் பார்க்கிறாள். அதில் கருணையின் உயிரூற்று ஜ்வலிக்கிறது.

அவளுடைய கண்களிலோ கண்ணீரின் பெருவெள்ளம் மடை திறக்கிறது.

✽

## நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் வேலை!

போயா விடுமுறை நாள். தந்தையார் வீட்டில் நின்றபடியால் பையன்கள் இருவருக்கும் ஒன்றன்பின் ஒன்றாக ஏதாவது தொட்டாட்டு வேலைகளை இட்டுக்கொண்டே இருந்தார். அலுத்துப்போன மூத்த புதல்வன் தன் தம்பியிடம் கூறினான்:

''நம் அப்பா நாட்டில் பிரதமராக வந்தால் வேலையில்லாத்திண்டாட்டமே இருக்காதுடா!''

''ஏன்?''

''இந்தச் சின்ன வீட்டுக்குள்ளேயே நமக்குத் தருவதற்கு இத்தனை வேலை வைத்திருக்கிறாரே. நாடு முழுவதும் தன் கையில் இருந்தால் கேட்கவாவேண்டும்!''

★

## நானா? நானா? நானா?

ரேடியோவில் பிரபல வித்வான் ஒருவர் பாடிக்கொண்டிருந்தார். நெடுநேரமாக ராக ஆலாபனை நடந்து கொண்டிருந்து. பொறுமையிழந்த 'நேயர் விருப்ப' அபிமானி ஒருவர் கூறினார்:

''இந்தப் பாகவதருக்குப் பாடுவது தான்தானா, வேறு யாரோ என்ற சந்தேகம் போலிருக்கிறது. அரை மணி நேரமாக, 'நானா, நானா, நானா' என்று கேட்டுக்கொண்டிருக்கிறாரே!''

— ஜனனி



விருத்தாந்த சித்திரம்—1.

நகைச்சுவை ஒன்றையே நோக்கமாகக் கொண்டு, விருத்தாந்த சித்திரம் என்ற மகுடத்தின் கீழ் வெளியாகும் இந்தச் சிறப்பு அம்சம், தனிப்பட்ட எவரையும் புண்படுத்தும் நோக்கத்துடன் எழுதப்படவில்லை. — கட்டுரை ஆசிரியர்.]

# வி. சி. மெம்பர் காசிநாதர்!

**அம்மாச்சி ஆறுமுகம்.**

ஆரெண்டு தெரியுமா...? என்ன, விளங்கல்லப் போல.. ஓம் ஓம் எங்கட படுவான் கரையில பேரான கிராமச் சங்கம்; அதில ஒம்பதாம் வட்டாரத்துக்கு நான்தான் நம்பர்!

அதெதென்னத்தப் பேசி ஏதெண்டு சொல்லுவன்? ஒரு எலக்சன் நடத்தி முடிக்கிறத்துக்குள்ள, மனிசண்ட சீவன் போயிரப் பாக்குது: பின்னென்ன பின்ன... எத்தின நாளா எடுத்த எடுப்பிது. சோறா, தண்ணியா, வீடா, வாசலா, நித்திரையா நிமையா? நாயோட்டம்! தொங்குகால் பாச்சல்! கடப்பேறி ஏறி, கால் பாதி தேஞ்சு போச்சி! ஒறிம்......

என்னவோ ஆண்டவன் கண்ண முழிச்சான். இல்லாட்டிப் பின்ன அந்த ஆண்டவனும் பட்டினிதான் கிடக்க வேணும்! எலியும் வெளவாலும் ஏறி நிறஞ்சு அரசாச்சி நடத்தின கோயில் கதவு துறபடுமா இல்லக் கேக்கிறன். வாற வையாசிப் பூரணைக்கு கதவு துறந்து பூச நடக்கப் போகுது. எலக்சனுகள்ள நான் தோத்துகள் இருக்கவேணும். கடவுளும் இல்ல கச்சடாவும் இல்ல. எனக்குப் பெருங்கடலும் கைதர மாட்டாது! ஊர்க்கோயில் பூச புனற்காரம் இல்லாமக் கிடக்கே எண்டு போட்டுத்தான்......அதுக்கு மட்டும் சுளயா ஐந்நூறு!

நான் எப்படி வெல்லாமப் போற..? என்ட சாதி என்ன, சனமென்ன... குலமென்ன கோத்திரமென்ன... ஊரெல்லாம் என்ட அப்ப மச்சான் சாதியான் ஓய்! பருப்புப் போல முந் நூறு வோட்ட வச்சுப்போட்டு, அந்தக் கோப்பி குடியானுக்கு வி. சி. கதிரயக்குடுத்தா, நானும் என்ட பணியாரந் தின்னிக் குடியானும் உசிர வச்சிருக்கிறதப் பாக்க உப்புச் சிரட்டைக் குள்ளதான் விழுந்து சாகவேணும்!

இடையால ராக்குடிச்ச குடியாருக்கும், அந்த வி. ஸி. கதிரயில இருந்து பாத்திரவேணுமெண்டு ஒரு சோட்ட! வாருகல் கட்டுக்குக் குஞ்சம் கட்டுறப்பலதான்! அவியிர குலத்தில ஆர்ரா... தோழே, ஊர் உத்தியோகம் பாத்தாக்கள்? கட்டுக் காசும் சுவாகா!

என்ட இனசனம் சத்தா சமுத்திரம்! இது தெரியாம வாறானுகள் போட்டிபோட! விடுவனா... இல்ல என்ட சாதியான்தான் விடுவானா இல்லக் கேக்கிறன்.

பத்துப் பத்து ரூவா பசமுறியாத பச்சப் பச்சத் தாளாக் கொ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ண்டு நீட்டிப் பல்லக் காட்டிப் பாத்தாங்களே! என்ன பலனக் கண்டாங்க? எண்ட பணியாரந்தின்னிக் குடியானிட்டயும் இந்தப் பாச்சாவுகள் பலிக்குமாடா தோழே! கொல்லு களுத்தறு எண்டு சொல்லிப் போட்டானுகள்!

நான் ஒருதுண்டுக்குப் பதினைஞ்சு போட்டுத்தான் குடுத்த! எண்ட அப்பன் மச்சான் சாதி எண்ட படியாத்தானே அதையும் கை நீட்டி வாங்கினவனுகள். வாங்கினு வாங்கினதுதான்! அங்கால இஞ்சால அசையாமல் கடைசி வரையும் ஒரே கையா நிண்டு வெத்தியக் காட்டியும் போட்டானுகள்!

இந்த ஊருக்கு வீ. ஸி. நம்பராப் போறவன், ஒரு சாதி மகனு இருக்க வேணு மெண்டு, இந்தக் கஞ்சாங் கொத்திப் பஞ்சான் பயலுகளுக்கு இன்னும் விளங்கல்ல. போட்டி போட வாறானுகளாம் போட்டி! அடேய்... நீங்கெல்லாம் என்னப்பத்தி என்னதான் நினச்சுக் கொண்டு திரியுறயள்?

கட்டெண்டால்க் கட்டி, அடியெண்டால் அடிச்சி, வெட்டெண்டால் வெட்டி விளையாட்டுக் காட்டின சாதியாண்டா நான்? என்னோடதானேடா இந்த ஊர்ப் பெரிய கையெல்லாம்!

சற்குணம் தருமலிங்கம் மாய்ற்றர், அந்தாள் ஒரு பெரிய தலம வாத்தி. இருபத்தஞ்சு வருசமாக இந்த ஊர்ப் பள்ளியிலே சறுவிஸ்! அந்தாள் படிப்பிச்ச பொடியனுகள் தானே, கல்லோயா பாமில இண்டைக்கு, மாசம் மாசம் சுளசுளயாச் சம்பளம் எடுக்கானுகள். காடு வெட்டுறது தொடக்கம், கட்ட நாட்டிக் கம்பியடிக்கிற வேல ஈறுக எம்லாம் அவனுகள்தானே. தறுமலிங்கம் வாத்தியார்ர சகுனி மூளய உங்களுக்கென்னடா தெரியும்! வாத்தியார் எண்ட வலது கை!

இனி, விதானையார் வீரசிங்கம், தறுமலிங்கம் வாத்தியார்ர கைப் பிரம்பு! எனக்கு இடது கை!

அது மாத்திரமா, 'உடையார்ர உடுப்பன் கணபதி! அவன மாட்டுக்கள்ளன் எண்டு நீங்க சொன்னுப் பல, அவனுக்கு என்ன குறஞ்சு போச்சு? அவன் குப்பையில கிடக்கிற குண்டுமணி! ஒரு முட்டிக்கள்ளு சொன்ன வேல செய்யும்! அடிடா எண்டால் இடிப்பான்! கட்டெண்டால் வெட்டுவான்! அவன் பெரிய சண்டியன்.

ஈர்த்தலையன் இளையான் எண்டு பகிடி பண்ணுறயள். பண்ணுங்கவன்! அவண்ட தோலுக்க பூந்திருமா அது? இல்லக் கேக்கிறன். அவன் தானேரா கோயில் துரத்தினகாறன்! நீங்க ஊர் கூடிக் குடுத்த வேலையா இது? அவனுக எடுத்த வேல! ஆரக் கேக்கிற?

இளையாண்ட பெரியம்மயிர மகன், எங்கட வள்ளிக் கிழவியிர வன்னமணி வட்டவிதான!

இவ்வளவு பேரும் ஒரு கையில திரண்டு நிக்கானுகள் எண்னோட! இதிர காரிய பாகம் கணக்கு வழக்குகள் தெரியாம, நீங்களும் வீ.ஸி. நம்பர் போட்டிக்கு வாறயள்! ஆரெண்டு நினச்சயள் இந்தக் காசிநாதன?


சொல்லி அடிச்சன்! ஒரே ஒரு துண்டால! ஒரு துண்டுக்குள்ள தானே தோழே வெத்தியும் தோல்வியும். வெண்டு போட்டன்! இப்ப என்ன சொல்றயள்? இல்லக் கேக்கிறன்......

*

> அடுத்த இதழில்....
> **"போடி மகள் பொன்னம்மா"**
> **(விருத்தாந்த சித்திரம்—2)**



# மரணமும் வாழ்வும்



**பண்டாரவளை**
**குமார. இராமநாதன்.**

—※—

தழுவும் மரணமென் தலையை வருடி
மிருது வாக முணுமுணுத்த திதனை ...[...]
''ஏழைக் குழந்தாய்! யானே உன்னை
வேதனை நீங்க விடுவித் துனது
இழந்த மகிழ்வைப் புதுப்பித் தளித்து;
மீண்டும் வரும்பெரு மகிழ்வை அடைத்து;
கீத மிசைக்கும் பறவை யாக,
தாமரை நாடும் தேனீ யாக,
பெய்யும் மழையின் வெள்ளித் துளியாய்;
மயங்க வைக்கும் 'சிரிஸ்ஸா வெளியின்',
பரிமள சுகந்த உருவாய்; இந்தக்
கான கத்துக் காற்றின் ஒலியாய்;
தண்ணீர் அலையின் பண்ணாய்; மீண்டும்
அவற்றை உனக்கே உவப்பாய்த் தரவோ?
என்றது! யானோ நன்றி யுரைத்தேன்!
தாங்கள் எனக்காய் ஈங்கு கூறும்
இதயங் குளிரும் கருணை என்றன்
செவியை வெட்கம் கொளவைக் கிறதே!
ஓவென் மரணமே! யானிவ் வளவாய்
துணிவே யற்ற பிணம்போன் றவளோ?
உள்ளம் நிறைந்த துன்பப் போதுமென்
ஆவி நடுங்கி மாறுதல் கூறுமோ?
— அன்றியும் ... ...
எனது உடம்பே பயந்தான் கொள்ளுமோ?
இன்பம் நிறைந்த என்றன் நாட்டின்
தேவைக் காயென் ''சேவை'' யினதோ
நாதங் கலந்தவென் கீதத் தினதோ;
ஒப்பந் தத்தை முற்ற முடிக்கும்
முன்னர் தானிங் கென்றன் ஆவி
தவறி விடுமோ? தவறி விடுமோ?

(கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் THE DEATH AND LIFE என்ற கவிதையின் தமிழாக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரீங்காரம்

ஆனந்த விகடனும், குமுதமும் இல்லாவிட்டால் தமிழிலக்கியம் இற்றுவிடும் என்ற எண்ணம் இன்னும் ஈழத்துப் பாமர இலக்கிய இரசிகர்களுக்கும், பொழுதுபோக்கு இலக்கியக்காரருக்கும் உண்டு. இந்த எண்ணம் தப்பானது. இலக்கியம் அவைகளல்ல என்று நெஞ்சு நிமிர்த்திவைத்த 'மலரு'க்கு எனது வாழ்த்துக்கள்.

**—புதுவை இரத்தினதுரை, புத்தூர்.**

× × ×

New Streams must be welcome with its dirts and rush; If it awakes and arouses the appreciation, it must be allowed into the sea of literature; If it demands the expulsisn of the traditions in literature, let it take its own turn and ending; If there is anything in literature that awaits outcasting, it shall be outcast by the influence of the inflowing materials.

**– Sehu Issadeen, Kattankudy.**

× × ×

இதுவரை இந்தியக் குப்பைப் பத்திரிகைகளில் வெளியாகும் கற்பனைக்கெட்டாத – ஆபாசம் பொருந்திய காதற் கதைகளைப் படித்த எமக்கு, மனித சமுதாயத்தில் சர்வ சாதாரணமாக நிகழும் நிகழ்ச்சிகளை மையமாக வைத்துப் படைக்கப்படும் யதார்த்தக் கதைகளைப் படிக்கும்பொழுது ''மலர்'' எமது இலக்கிய தாகத்திற்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்றே எண்ணுகிறேன்.

**—கி. பவானந்தன், திருகோணமலை.**

× × ×

''மலர்'' ஏட்டுக்கு என் இதய பூர்வமான வாழ்த்துக்கள். 'மலரி'ல் காணக்கூடியதாயிருக்கும், நிதானமும், கட்டுக்கோப்பும் எதிர்கால வளர்ச்சிக்கு நல்ல அடையாளங்களாக உள்ளன. வாய்ப்புள்ள போதெல்லாம் நண்பர்களிடையேயும், எமது கலாசாலைத் தமிழ் மன்றத்திலும் ஈழத்து இலக்கியங்கள், ஏடுகள்பற்றியும் ''மலர்'' பற்றியும் பேசிவருகிறோம்.

**—மாவை. தி. நித்தியானந்தன், கட்டுப்பத்தை.**

× × ×

'மலரி'ன் மெய்யான இலக்கியப்பணியில் – மழையில் நனைந்த மலர்க்கூட்டம் புதுமலர்ச்சி காணுமே அத்தகையதொரு மலர்ச்சியில் என்மனமும் தோய்ந்தெழுந்து சிலிர்த்துக்கொள்ளுகிறது. சிலிர்ப்பின் ரேகை செயலை நோக்கிற்று. நோக்கத்தின் முடிவாக பத்து இதழ்களையாவது பிறரையும் நுகரச் செய்வதன்மூலம் நாமும் 'மலரி'ன் இலக்கியப் பணியில் ஒன்றலாமே என்ற கனிவின் தவிப்பே இக்கடிதம். எனவே 'மலர்' இதழ்கள் பத்து எனது வீட்டு முகவரிக்கு அனுப்புங்கள்.

**—எஸ். எல். எம். ஹனிபா, வாழைச்சேனை.**

× × ×

'மலரி'ன் ஒவ்வொரு அம்சத்தையும் படித்துச் சுவைத்தவள் நான். நல்லதோர் எதிர்காலம் 'மலர்' சஞ்சிகைக்கு இருக்கிறதென்பதை அதன் ஒவ்வொரு ஏட்டிலும் இழையோடும் செழிப்பும், இலட்சிய உணர்வும் பிரதிபலிக்கின்றன. தென்னிந்தியச் சஞ்சிகைகளுக்குச் சவால்விடும் முறையில் 'மலர்' மலர்ந்து நிற்கிறது.

**—சித்தி நபீஸா, சாய்ந்தமருது.**

× × ×



# ஒரு அனுபவம்

## * அதுவும் ஒரு பாக்கியமே

அம்பாறை நோக்கிச் செல்வதற்குத் தயாராகிக்கொண்டிருந்த இ. போ. ச. 'பஸ்' ஒன்றினுள். நானும் எனது தாயாரும் ஏறிக்கொண்டு ஒரு ஆசனத்தில் போய் அமர்ந்தோம்.

சிறிது நேரத்தில்.. மெல்லிய ஓர் இசையும் அதைத் தொடர்ந்து "பொருளே இல்லார்க்கு" என்ற சோகமான, 'சினிமாப்' பாட்டொன்றும் 'பஸ்ஸி'னுள்ளே கேட்டது. அடுத்த ஊர்களுக்குச் செல்வதற்கு 'பஸ்' ஏறும் மக்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த நான், அந்த ஓசை கேட்டதும் பார்வையைப் 'பஸ்ஸி'னுள்ளே செலுத்தினேன்.

அங்கே! இரண்டு கண்களும் குருடாகிய ஒரு பிச்சைக்காரன், அப்பாட்டை முணுமுணுத்தபடி, தட்டுத்தடுமாறி 'பஸ்'ஸின் ஆசனங்களைப் பிடித்துக்கொண்டு பிரயாணிகளின் அருகில் சென்று ஒரு தகரப் பேணியை ஒவ்வொருவரிடமும் நீட்டினான். தங்கள்முன் அவனது பேணி நீட்டப்பட்டதும் ஒவ்வொருவரும் முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டு, தங்களது வெறுப்பைக்காட்டிக்கொண்டிருந்தனர். அவர்களது வெறுப்பைக் காணும் துர்ப்பாக்கியத்தை, நல்ல வேளையாக, கடவுள் அவனுக்குக் கொடுக்கவில்லை. ஆனால் நான் அதைக் கண்டேன்.

உடனே, எனது 'மணிபர்சைப்' பார்த்தேன்; 'பஸ்' பிரயாணச் செலவைவிட இருபத்தைந்து சதம் மேலதிகமாக இருந்தது. எழுந்து சென்று அந்தத் தகரப் பேணியினுள் அதைப் போட்டேன். தலை நிமிர்ந்த பிச்சைக்காரனின் கண்களுக்கு, என்னைப்பார்த்து நன்றி கூறும் சக்தியைக் கடவுள் அளிக்கவில்லையே. எனவே அவன் 'பஸ்'ஸை விட்டு இறங்கினான். ஆனால், கண்ணிருந்தும் 'குருடர்களான' அப்பிரயாணிகள் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

**—'காரை ஈஸ்வா'**

[* ஈழத்துநூல் அன்பளிப்புப் பெறும் துணுக்கு — ஆசிரியர்]

× × ×

## பெருந்தன்மை

தனிப்பட்ட ஒரு பத்திரிகைக் காரியாலயத்தில், அச்சுக் கோர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஆரம்ப வேளையில் ஒருநாள்...

சஞ்சிகையின் எட்டுப் பக்கங்கள் பூர்த்தியாகிவிட்டன. 'புரூவ்' பார்த்து முடிந்தபின், திருத்தம் செய்வதற்காக, அச்சுக் கோர்த்த ஒரு பக்கத் (**Page setting**)தை மெதுவாக நகர்த்துகையில் அது தவறி நிலத்தில் வீழ்ந்துவிட்டது.

வெண்ணை திரளுஞ் சமயத்தில் தாழி உடைந்தால் எப்படியிருக்கும்?

ஆசிரியர் வந்து பார்த்தார்; ''தவறுதலாக நடந்ததற்கு என்ன செய்வது?'' என்று சொல்லிவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்ந்தார். மனங் கொதிக்கவேண்டிய இடத்திலும், மனம் கனிந்து வெளிவந்த அந்த வார்த்தை...

தவறு செய்தவன் மனமுடைந்து திருந்துவதற்கு, அது ஒரு நல்ல சந்தர்ப்பமல்லவா!

அறிவின் நிறைவிற்குள்ள ஒரு பூரணத்துவம், அது! அன்பின் சக்திக்கு அப்படியொரு வல்லமை!

இந்த அனுபவம், என் வாழ்நாளில் மறக்கமுடியாத ஒரு சம்பவமும்கூட.

—கண. மகேஸ்வரன்.

× × ×

## இப்படியும் ஒரு பஸ் அனுபவம்

''மலர்'' இதழில் நண்பர் விவேகானந்தன் எழுதிய 'பஸ் அனுபவத்'தைப் படித்த வாசகர்களுக்கு என்னுடைய பஸ் அனுபவம் ஒன்றையும் சொல்லிவைக்க விரும்புகிறேன்.

நான் தினமும் குருக்கள்மடத்திலிருந்து மட்டக்களப்புக்குப் பஸ்ஸில் பிரயாணம் செய்வது வழக்கம். ஒருநாள், பஸ்ஸில் மட்டக்களப்புக்கு வந்திறங்கி, அவசர அவசரமாக அலுவலகத்தை நோக்கி நடந்தேன். எதிர்ப்பக்கமாக வந்த ஒரு பஸ் என்னைக் கடந்துசென்றபோது, 'புளிச்'சென்று என் நெஞ்சில் ஏதோ விழுந்தது. குனிந்து பார்த்தேன் சட்டையின் முன்பக்கம் அப்படியே வெற்றிலைச் சாயத்தினால் அபிஷேகம் செய்யப்பட்டிருந்தது. பஸ்ஸில் சென்ற யாரோ ஒரு புண்ணியவாளன் துப்பிய தாம்பூலத் துப்பல்தான் அது என அறிந்ததும், நரகக் கிடங்கில் இறங்குவதுபோன்ற ஒரு உணர்வுதான் எனக்கு ஏற்பட்டது. எல்லோரும் என்னையே பார்த்தார்கள். நகரின் மத்தியில் நான் ஒரு விநோதப் பொருளாக நின்றேன். என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அந்த நேரத்தில் பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்ட ஒரு பஸ் என்னை நோக்கி வந்தது. எப்படியோ அவ்விடத்திலிருந்து மறைந்தால் போதும் என்ற மன நிலையில் இருந்த நான் சட்டென்று அந்த பஸ்ஸுக்குள் பாய்ந்து ஏறினேன். அது எங்கு செல்லும் பஸ் என்பதைக்கூடக் கவனிக்கவில்லை.

நல்லவேளையாக அது கல்முனை செல்லும் பஸ்ஸாக இருந்தது. பஸ்ஸில் உள்ளவர்கள் என்னை வேடிக்கை பார்த்தார்கள். எக்ஸ்பிரஸ் பஸ் ஆகையால் அரைமணி நேரத்தில் வீட்டுக்கு வந்துவிட்டேன். அன்று அலுவலகத்துக்கு ஒரு நாள் லீவு போட்டதுமல்லாமல், மனமும் குழம்பித் தவித்தேன். இது எனக்கு, மறக்கமுடியாத ஒரு அனுபவம்.

—கணபதி, குருக்கள்மடம்.

× × ×

## அனுபவம் புதுமை

இம்மாத "மலர்" சஞ்சிகையில் "ஒரு அனுபவம்" என்ற தலைப்பில் நான்கு துணுக்குகள் வெளிவந்துள்ளன. இவை போன்ற நெஞ்சைத்தொட்ட அனுபவங்கள் உங்கள் வாழ்க்கையிலும் ஏற்பட்டிருக்கலாம் அல்லவா? அப்படியான அனுபவங்களைச் சுவைபட எழுதி அனுப்பினால் "மலர்" மகிழ்ச்சியோடு அவற்றை வரவேற்றுப் பிரசுரிக்கும். ''மலர்'' சஞ்சிகைக்கு அனுப்பப்படும் ''ஒரு அனுபவம்'' சுவையுள்ளதாக, கருத்துள்ளதாக, பூள்ஸ்காப் தாளில் ஒரு பக்கத்தில் அடங்குவதாக இருக்கவேண்டும். ஒவ்வொரு மாதமும் பிரசுரமாகும் அனுபவத் துணுக்குகளுள் சிறந்ததெனத் தெரிவு செய்யப்படும் அனுபவத் துணுக்கினுக்கு ஈழத்து இலக்கிய நூல் ஒன்று அன்பளிப்புச் செய்யப்படும்.

துணுக்குகளை அனுப்ப வேண்டிய முகவரி:-

ஆசிரியர் ''மலர்''
21, மத்திய வீதி, மட்டக்களப்பு.

## அசலும் நகலும்

இங்கு "ரோமியோ ஜூலியட்" படம் நடந்துகொண்டிருந்த வேளை. எனது அறையில் வசிக்கும் நண்பர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்குப் போய் வந்திருந்தார். பல விஷயங்களைக் கதைத்துக்கொண்டிருந்த பின்னர் அவரை "ரோமியோ ஜூலியட்" படம் பார்த்துவிட்டீர்களா எனக் கேட்டேன். அதற்கு அவர் உடனே ''நான் நினைக்கிறேன், இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் நடந்த படவிழாவில் இலங்கையில் இருந்து அனுப்பப்பட்ட '' கம்பரெலியா '' வை வெள்ளைக்காரர்கள் பார்த்திருக்கிறார்கள். அதுபோல ஒரு படத்தை எடுக்கவேண்டும் என எண்ணித்தான் இந்தப் படத்தை எடுத்திருக்கிறார்கள்போலும்"எனக் கூறினார். இதைக்கேட்ட என்னுடன் இருந்தோர் அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தோம். இந்த விதமான ஒரு ஹாஸ்யத்தை இந்நாள்வரை நான் கேட்டதேயில்லை. பாவம், ஷேக்ஸ்பியரின் "ரோமியோ ஜூலியட்" என்ற அமரகாவியம்தான் அநேகமான காதல் கதைகளுக்கு வித்து என்பது அந்த நண்பருக்குத் தெரிந்திருக்கவில்லை.

—எஸ். தர்மனயகம்,
மட்டக்களப்பு.

× × ×

## புதிய வீட்டு மருமகள்

புதிதாகக் கல்யாண மானதும் மருமகள் மாமியார் வீட்டுக்கு வந்தாள். அவளுக்கு முந்திரிப் பருப்பு என்றால் மிகவும் பிடிக்கும். எனவே மாமியார் பார்க்காமல் இருக்கும் போது போகவர முந்திரிப் பருப்பை எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டே இருக்கலானாள். மாமியாருக்கு மருமகள்மீது சந்தேகம் ஏற்பட்டது.

தன்மீது மாமியார் சந்தேகப்படுகிறாளெனத் தெரிந்த மருமகள் ஒருநாள் வீடு பெருக்கும் போது கீழே கிடந்த ஒரு முந்திரிப்பருப்பை எடுத்து தன் மாமியாரிடம் காட்டி ''இதென்ன பருப்பு?'' எனக் கேட்டாள்.

இதைப் பார்த்துவிட்டு மாமியார் ''அடபாவமே முந்திரிப்பருப்பு எது என்றுகூடத் தெரியாத இவளையா நான் முந்திரிப் பருப்பை எல்லாம் திருட்டுத்தனமாக எடுத்துத்தின்றவள்என்று சந்தேகித்துவிட்டேன்'' என எண்ணி மருமகள் நல்லவள் எனத் தீர்மானித்தாள்.

—திருமதி. இராணமையா
களனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டுதல் வேண்டாமை

உள்ளும் புறமும் ஒவ்வோர் இடமும்
தெள்ளிய உணர்வாய்த் தெரியும் இறைவா!
எங்கே யுனது இருப்பிட மென்றே
எங்கும் தேடி இளைத்தவ ரானூர்!

எங்குந் தேடி இளையா மனிதர்
இங்கே கோயில் எடுத்துள் ளாரே!
இனிமை பரவும் இடமாய்க் கோயில்
மனிதன் கண்ட மாண்பு பெரிதே!

எனினும் இறைவா இற்றைக் குன்னை
மனிதன் கோயில் வாசலிற் காணேன்!
உன்னைப் பரவும் ஒவ்வோர் கணமும்
என்னுள் தீபம் ஏற்றிவைக் கின்ருய்.

என்னுள் பெருகும் இன்பச் சுரப்பை
தன்னந் தனியே நானுண் டேனு?
பிறர்க்குப் பகிரும் பெற்றிய ளுக
இறக்கும் வரைநீ என்னை நடத்த
உறக்கம் இன்றி உன்னை நினைத்தேன்.

உவர்ப்புக் கடலை உண்டாக் கியதால்
எவர்க்குக் கடல்நீர் இனிப்பா கியதோ?
கடல்நீர் உப்பாய்க் கசந்தும் மழைநீர்
அடடா! சுவையாய் ஆக்கியோன் நீயே!

எவர்க்கும் அதுபோல் இன்பம் பயந்தால்
உவர்க்கும் வாழ்வொன் றுலகினில் உண்டோ?
இருளைப் போக்கும் இறைவா விளக்கப்
பொருளே யுன்னைப் போற்றுதல் செய்ய

நேரம் காலம் நிர்ணயித் துள்ளோர்
பாரம் என்ருேர் பாவனை வைத்தார்!
நேரம் காலம் நிர்ணயிக் காமல்
பூரண மனதுள் புகுந்துள் ளாய் நீ!

தன்னுள் எதையும் தரித்தவ ளுன
உன்னை நினைந்து ஒப்பனை செய்ய
நேரம் காலம் நிர்ணயிக் கின்ருர்!
பாரம் என்ற பயமெனக் கில்லை!

பழகப் பழகப் பரமா னந்த
அழகாய் உலகில் அமைந்தவன் நீயே!
பெரும்பே ருள்ளம் பெற்றவ ருள் உன்
உருவம் அன்பாய் ஒளிரக் கண்டேன்.

கண்ட அழகைக் கலைவடி வாக
உண்டாக் கிப்பே ருவகை அடைவேன்.
துன்பம் அன்றி, தூய அக் கலையின்
இன்பம் உலகில் எவர்க்கும் பொதுவே.

கோயில் குளத்தில் குடியிருந் தாலும்
வாயில் லாத மற்றெவ் வுயிர்க்கும்
தாயா யுன்னைத் தரிசிக் கின்றேன்.
தாயா யுன்னைத் தரிசிப் பதனுல்
கோயில் வெளியே கொணர்ந்துள் ளேனே!

அளவுகோல் வைத்துனை அஞ்சலி செய்வோர்
இளகிய மனதை எங்குவைத் தாரோ?
மிருகம் பறவை வேறுபல் லுயிரைக்
கருணை குறையக் கண்பார்க் கின்ருர்!

கடமை யுன்னைக் கைதொழ லென்றே
மடமை அற்ற மனிதர்கள் சொல்வர்.
உடம்பா டெமக்கும்; ஓமோம், ஆனுல்;
கைதொழ லென்ற கடமையைப் போல
செய்கையும் இனிதே செய்வதும் கடனே!

என்னைச் சூழ்ந்து இருக்கும் மனிதர்
உன்னொளி பாயும் உளமுள்ளோர்கள்
என்பதனுலே என்னு லிடர்கள்
அன்னவர் தமக்கு ஆகா வண்ணம்
என்னைக் காப்பதோர் இனிய கடனே.

சான்ருே ருகச் சமுதா யத்தில்
சான்றுகள் பெற்ற சாமியா ரெனினும்
இலைகளைக் கிள்ளி எறிந்தபின் னுலே
மலர்களைப் பறிக்கும் மடமையொப் பேனே!
மலர்களைக் கசக்கும் மடமையொப் பேனே!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்துக் கென்னை வீட்டுக் கழைத்து
அருந்தி அவரே ஆனந்திக்கும்
ஓம்பல் எவர்தம் உளத்தை எரிக்கா ...?
ஆம், பலபேரை அவையில் இருத்தி
தாம் பொறுப் பேற்ற சமூகப் பணியை
உதறித் தள்ளி உமையஞ் சலிக்க
ஆலயம் செல்லும் அவசியம் ஏனோ?

சமுதா யத்தின் சகிப்பை யளந்து
அமுதா யுன்னை ஆலயத் துள்ளே
காணச் செல்லும் கண்வேண் டாமே!
ஆணவம் சுமக்கும் அகம்வேண் டாமே!!

அறிவே யிறைவன் அன்பென் றுனல்
பிறரின் துயரைப் பேணு அறிவு
அறவேவேண்டாம்! அறவே வேண்டாம்!!
விறகாய் உடலம் வேகுதல் சிறப்பே!

வெறியாற் பிறரை வேதனைப் படுத்தும்
அறிவால் உன்னை அர்ச்சனை செய்ய
பொன்னைப் பொருளைப் பொழுதை யழிப்போர்
என்னை வருத்தும் எமனே! எமனே!!

புண்ணிய தலங்கள் போய்மீண் டுள்ள
கண்ணியன் என்ற கருத்துப் படநான்
என்னை உயர்த்துதல், இறைவன் உனைநான்
தன்னை மறந்து தாழ்த்துத லாமே!

என்போல் வயிறு எரிவோ ரிடத்தில்
புண்ணிய தலங்கள் பொலியக் காண்பேன்.
என்போல் இன்னல் ஏற்போ ரிடத்தில்
உன்பே ரன்பின் உயர்வைக் காண்பேன்
எள்ளள வேனும் என்னுல் அவர்தம்
உள்ளம் நோகும் உயில்வேண் டாதே!
என்னுல் அதனை எழுதுதல் ஏலா
உன்னைப் பிறரின் உளத்தில்
கண்ணுற் கண்ட கைப்பலன் அதுவே!

— 'பாண்டியூரன்'



உருவகக்கதை

# ஆதாரம்

## எம். ஐ. எம். தாஹிர்.

"ஹஹ்ஹா...... ஹஹ்ஹா..."

பட்டாய்ப் பரந்துகிடக்கும் வெண்மணற்றிடரில் இழுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறிய தோணியைப் பார்த்து, இரண்டுயார் நீளமான துடுப்பு நகைத்தது.

சிரிப்பில் எத்தனையோ வகையுண்டு. அவற்றில் ஒன்றுன பைத்தியகாரச் சிரிப்பாகத்தான் இருக்கும், இந்தச் சிரிப்பு என்று தோணி அதைப் பொருட்படுத்தவில்லை.

"ஹஹ்.....ஹஹ்ஹஹ்ஹா...."

மீண்டும் துடுப்பு கெக்கலி கொட்டிச் சிரித்தது.

தோணியின் மௌனம் கலையவில்லை. அது கடுந்தவம் இயற்றும் கர்மயோகிபோல் இருந்தது.

துடுப்பின் சிரிப்பு ஓயவில்லை. பலமுறை வந்த ஓங்காரச் சிரிப்பு தோணிக்கு நாராசமாய்ப் பாய்ந்தது. பொறுமைக்கும் எல்லையுண்டல்லவா?

''என்னப்பா...... பைத்தியகாரத்தனமாகச் சிரித்துக்கொண்டிருக்கிருய்?......'' கோபத்தின் காங்கை வார்த்தைகளில் தகித்துச் சுழன்றது.

''யாருக்கு யார் ஆதாரம் என்ற ஆராய்ச்சியின் பிரதிபலன் தான் என் சிரிப்பு ..'' கர்வம் இழையோடியது.

''என்ன?... ஆதாரமா?...''


''ஆம் பெரிய உடலாக இருந்தும், உன் இயக்கத்தின் சூட்சுமம் சிறியவனுகிய என்னிலேயே தங்கியிருக்கிறதே என்று சிரித்தேன்''...

''சீ... முட்டாளே! வெட்கமில்லையா உனக்கு. நான் இல்லாவிட்டால் நீ எதற்கும் பயன்படமாட்டாயே!... என்னைத்தவிர உனக்கு வேறு ஆதாரமும் உண்டா?..."

''ஒருக்காலமுமில்லை. நான்தான் உனக்கு ஆதாரம்...''

''இல்லை நான்தான் ஆதாரம்...'' தோணியின் குரல் ஓங்கி ஒலித்தது.

இதுவரை எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்த கயிற்றுத்துண்டு "ஏனப்பா இந்த வம்பு?.. அதோ மனிதன் வருகிறுன். யாருக்கு யார் ஆதாரம் என்பதை அறிந்துகொள்ளலாமே?'' என்று கூறியது.



இதைக் கேட்டதும் இரண்டும் மௌனமாகி, மனிதனின் வருகையை நோக்கின.

தூண்டிற் கயிற்றேடுவந்த மனிதன் தோணியைத் தள்ளி நீரில் இறக்கினுன். துடுப்பை எடுத்து ஊன்றி வலித்து மறுகரையை நோக்கிச் செலுத்தினுன். நீரிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்து வெளியில் தூக்கும்போதெல்லாம் துடுப்பு தோணியைப் பார்த்துப் பெருமிதத்தோடு சிரித்துக் கொண்டது. தோணியும், எனக்குத்தான் வெற்றி என்பதுபோல் துடுப்பை அடிக்கடி நோக்கிக் கொண்டது.

கரையை அடைந்த மனிதன் தோணியை இழுத்துப் பக்கத்தில் இருந்த கண்டல் மரத்தில் கட்டினான். துடுப்பைத் தூக்கி தோணிக்குள்ளே வைத்துவிட்டு மீன்பிடிக்க ஆரம்பித்தான்.

சில கணம் மௌனத்தில் மடிந்தது.

“என்ன தோணியாரே! யாருக்கு யார் ஆதாரம் என்பதைக் கண்டுகொண்டீரா?......” என்று மௌனத்தைக் கலைத்து அலட்சியம் இழையோடக் கேட்டது துடுப்பு.

“ஆம் கண்டுகொண்டேன். உனக்குத்தான் படுதோல்வி”

“என்ன... எனக்குத்தான் படுதோல்வியா?...” ஆச்சரியத்தோடு கேட்டது, துடுப்பு.

“வேறென்ன? உனது பயன்பாடு என்னில் தங்கியிருந்ததைக் காணவில்லையா?” குறுக்குக் கேள்வியில் மடக்கிவிட நினைத்தது தோணி.

திடீரெனச் சுழன்றடித்த காற்று, தோணியை அங்குமிங்கும் ஆட்டி அலைக்கழித்தது. அதற்கு ஈடுகொடுக்கமுடியாத துண்டுக் கயிறு சொடுக்கென அறுந்தது. காற்றுடன் கலந்த நீரோட்டத்தில் எடுபட்டுச் சென்றது. இதனைக் கண்ட மனிதன் கடலில் பாய்ந்து நீந்தித் தோணியைப்பிடித்து ஏறிக்கொண்டான். மீண்டும் கரை நோக்கிச் செலுத்திவந்து, மணல் மேட்டில் இழுத்து வைத்துவிட்டுத் தன் கடமையில் ஈடுபடத் தொடங்கினான்.

## “மலர்” ஏட்டின் புதிய தோற்றம்

இம் மாதம் முதல் ‘மலர்’ கைக்கடக்கமான அளவில், புதிய தோற்றத்துடன், அதிக பக்கங்களுடன் வெளிவருகிறது. ஆனால் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை அநேக வாசகர்களின் நீண்ட நாள் ஆவல் இதன் மூலம் பூர்த்தியாகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். —ஆசிரியர்.

ஒருசில நிமிடங்களில் நடந்து முடிந்த இவ்வளவும் துடுப்பையும், தோணியையும் சிந்திக்கவைத்தன. இரண்டும் ஏககாலத்தில் கயிற்றுத் துண்டை நோக்கின.

“என்ன...... யாருக்கு, யார் ஆதாரம் என்பது புரியவில்லையா?”

“புரிந்துவிட்டது; ஆனால், தெளிவில்லை...” என்று கூறியது துடுப்பு. தோணியின் மௌனம் அதை ஆமோதிப்பதுபோல் அமைந்தது.

“அப்படியா?...... உலகத்தில் யாவும் ஒன்றுக்கு ஒன்று ஆதாரமாகத்தான் அமைந்திருக்கின்றன. ஆனால், எல்லாவற்றுக்கும் நித்தியமான ஆதாரமாக வேறு ஒன்று அமைந்திருக்கின்றது... அதுதான் இறைவன்...”

துண்டுக் கயிற்றின் இந்த வார்த்தைகளில் புதியதொரு ஞானம் ஒளிகாட்டியது. *



# உள்ளும் புறமும்

சாரல் நாடன்.

பிடிமண்ணைக் குழிக்குள் போடும் கடைசிவேளை, கண்கள் குளமாவதை அவனால் தடைசெய்ய முடியவில்லை. வாய்விட்டே அழுது விட்டான்.

அவன் அழுவதைக் கண்டதும், சுற்றிநின்ற அத்தனை பேருக்கும் அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

அவன் தொட்டுத் தாலி கட்டிய மனைவி இறந்து, அவள் பிரேதத்தை இடுகாட்டுக்கு எடுத்துச் சென்று குழிக்குள் வைக்கும்போதும் இவ்விதம் தான் அவனுக்கு அழுகை பீறிட்டது.

அது நடந்து பத்து வருடங்களுக்கும் மேலாகி விட்டது.

அப்போது அவனுக்கு வைராக்கியம் அதிகம். அவன் பிறவிக் குணமே அப்படி. அவன் மனைவி சாகும் பரியந்தம் அது மாறவேயில்லை. தோட்ட நிர்வாகம் அவனை பழிவாங்கத் துடித்துக் கொண்டு நின்ற சமயம் அது அவன் சாதாரண தொழிலாளிதான். கூடவே, தொழிலாளர்களுக்குத் தலைவனாகவும் அவன் இருந்தான்.

அவர்கள் செய்யும் அர்த்தமற்றதும், நியாயமற்றதுமான காரியங்களை அர்த்தமும் நியாயமுமுள்ளனவாகக் கற்பித்துக் கொண்டு அவர்கள் சார்பில் தொழிலாளர்களின் உரிமைகளை உதாசீனப்படுத்தும் நிர்வாகத்தோடு வாதாடவேண்டிய நிலையில் அவன் இருந்தான்.

கொக்குபோல அவனைக் கொத்தித் தீர்க்க காத்திருந்தது தோட்ட நிர்வாகம். நிர்வாகம் செய்யும் துரையின் கட்டளையை நிறைவேற்றும் வழி தெரியாமல் விழித்தனர் அவரது உத்தியோகத்தர்கள்.

எழுத்தில் இருந்ததென்றால் யாரும் யோசிக்கப்போவதில்லை. சொன்னது நீ, செய்தது நான் என்று தப்பித்துக்கொள்ளலாம். அதற்கு வழி இல்லாமல் செய்து விட்டார் பெரியதுரை.

எழுத்தில் இல்லை என்பதற்காக, தன்னிடம் நேரில் அவராகவே வாய் திறந்து சொல்லியதைச் செய்யாமல் விடுவதா என்று சிந்தித்துச் சிந்தித்து அந்தச் சிந்தனையே ஒரு சுமையாக, அந்த சுமையே வாழ்வாக அவர்கள் ஒவ்வொருவரையும் வதைத்துக் கொண்டிருந்தது. அப்படி ஒரு சுமையான வாழ்க்கையை வாழ்ந்து முடிந்த ஒருவருக்காகத்தான் இன்று அவனும், அவன் கூட்டத்தாரும் கண்ணீர் சிந்துகிறார்கள்.

தோட்ட உத்தியோகம் என்பது வாழ்க்கைச் சுமையை ஏற்கத் தைரியம் இருப்பவர்களுக்கு அல்ல, வாழ்க்கையையேசுமையாக ஏற்கத் தைரியமுள்ளவர்களுக்குத்தான் இலாயக்கானது. அவரிடம் அந்தத் தைரியம் அளவுக்கு அதிகமாகவே இருந்தது. இருபது வருடகாலமாக அதனால்தான் அவரால் அதே தோட்டத்திலேயே கண்டக்டராக ‘இழுத்து’ வரமுடிந்தது.

நிர்வாகம் இடும் சட்டத்தின் கோரத்தினால் தாக்குண்டு தவிக்கும் தொழிலாளர்களுக்காக மனதுக்குள்ளாக மௌனமாக அழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அவர்களின் தவிப்பை புரிந்து கொள்ளாதவராக புரிந்து கொண்டாலும் புறக்கணிப்பவராக நடந்து கொள்ளும் அசாத்திய துணிச்சல் அவருக்கிருந்தது.

மேலிடத்திலிருந்து ஆபத்தும், கீழிடத்திலிருந்து குழப்பமும் எதிர்பாராத எந்த வேளையும் வரக்கூடும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்து சமாளிக்க அவருக்குத் தெரிந்திருந்தது.

ஆபத்தையும், துர்ப்பாக்கியத்தையும் எந்நேரமும் எதிர்பார்த்துச் சமாளிக்கப் பழகிபோன எவருக்கும் வாழ்க்கையின் அழுத்தச் சுமை தெரிவதே இல்லை.

'ஷோ கோஸ்' என்றும், 'வார்னிங் லெட்டர்' என்றும் எத்தனை கடிதங்களை, அவர் செய்யும் தொழிலை ஆட்டுவிக்கும், அச்சுறுத்தும் கடிதங்களை துரை அவருக்குக் கொடுத்திருக்கிறார்.

அவைகளுக்குக் காரணங்கூற அவருக்கா தெரியாது? காலை மாலையென்று கடந்த இருபது வருட காலமாக நாள்தோறும், இரவில் கண்மூடும் சில மணி நேரங்கள் தவிர்த்து அவரின் பார்வையில் வளர்ந்த தொழிலாளர்களும், பராமரிப்பில் செழித்த தேயிலைச் செடிகளும் - ஆயிரம் காரணங்களை அவருக்குப் புதிதுபுதிதாய் எடுத்துச் சொல்லப் போதுமே. தன் சொந்தக் குழந்தையின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட தந்தை அதன் வளர்ச்சியின் ஒவ்வோர் அம்சத்தையும் சிலாகித்து மகிழ்வது போல அவர் மகிழ்ச்சி அடைந்த நிகழ்ச்சிகள் தாம் எத்தனை? கொழுந்து குறைந்தாலும் சரி, 'கோஸ்ட்' கூடினாலும் சரி அவர் தான் துரைக்கு பதில் சொல்லுவது, ஆக, மனிதனின் ஆசைக்கும் அறிவுக்கும் கட்டுப்படாதஇயற்கையின் தட்பவெட்பம் விளைவிக்கும் அத்தனைக்கும் அவர் காரணம் காட்டியாக வேண்டும்.

அவருக்கென்ன? அவர் சொல்வதை செவிமடுக்க ஒருவர் இருக்கும் வரை.

ஆனால் இன்று அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

துரைக்கு அவர் தந்த பதில் அர்த்தமற்றதாகி விட்டது.

தொழிலாளர்களுக்கு அவர் பேச்சு தேவையற்றதாயிருந்தது.

அவர் மலைத்துப் போனார். இருபது வருட காலமாக இதே தோட்டத்தில் கண்டக்டராக இருந்தும் தொழிலாளர்களைக் கட்டுப்படுத்த முடியாத அவரை துரை கடிந்து கொண்டார்.

அவர் என்ன செய்வார்? தொழிலாளர்கள் ஒரே பிடிவாதமாக இருந்தனர். தங்கள் கோரிக்கைகளுக்கு நிர்வாகம் இணக்கம் தெரிவிக்கும்வரை — எழுத்தில் இசைவு தரும் வரையிலும் வேலைக்குப் போவதில்லை என்று அவர்கள் தீர்க்கமாக முடிவு செய்திருந்தனர். கொடுக்கவேண்டியதற்கே, எங்கே எழுத்திலிருந்தால் எதிர்தரப்பினருக்குப் பிடிகிடைத்துவிடுமே என்று நினைத்துப்பயந்துஒதுங்கும்தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்குத் தரவேண்டிய சலுகைகளுக்கா எழுத்தில் இணக்கம் தர முன்வரும்?

தொழிலாளர்களின் தீர்க்கமான முடிவுகளுக்காக அவர் மனம் மகிழ்ந்திருக்கிறார். இப்போதும் அடிமனதில் அவருக்கு மகிழ்ச்சிதான். அவர் மனசோடு முயற்சித்தால் வேலைநிறுத்தத்தை உடைத்தெறிய முடியும் என்றாலும் அப்படிச்செய்ய அவருக்கு மனம் வரவில்லை. மாறாக, நீரின் குளிர்மையாய் நெஞ்சில் நிறைந்திருக்கும் மகிழ்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளாமல் — வெளிக்காட்டினால் வீதியில் நிற்க வேண்டியது தான்தாம் என்பதை நன்குணர்ந்தவரான அவர், அவர்களின் உறுதி குலைக்கும் முயற்சியில் அவரை ஈடுபடுத்தும் முயற்சியில் துரைகொடுத்த பேச்சுக்களுக்குப் பிடிகொடுக்காது பட்டுப்படாமலும் ஏதேனும் கூறி சமாளிப்பார்.

அந்த முயற்சியில் அவரை ஈடுபடுத்தும் துரை அவருக்குக் கூறுவது அச்சுறுத்தும் வார்த்தைகளை— ஆட்களிடம் கூறுவது ஆசை வார்த்தைகளை.

அச்சுறுத்துதலுக்கு அஞ்சாதவர்கள் கூட ஆசைக்கு மயங்கி விடுவதுண்டு என்பது மெத்தச் சரியானதுதான்.

சொல்லளவில் தோட்டத்து நிர்வாகம் தருவதாகச் சொன்ன சலுகைகளை ஏற்றுக் கொண்ட தொழிலாளர்கள் சிலர் வேலைக்குச் செல்லத் தொடங்கினர். சிலரைப் பலராக்கி வேலைநிறுத்தத்தை முறியடிக்க முனைந்த வெள்ளைக்காரத் துரையின் மூளை வெகுவேகமாக வேலை செய்தது.

அந்தச் சனங்களின் பழக்கவழக்கங்களையும், பாமர நம்பிக்கையையும், பொருளாதார இடர்பாட்டையும், ''யாரையாவது பிடித்து எப்படியாவது வாழணும்'' என்கிற அர்த்தமற்ற வாழ்க்கைக் கோட்பாட்டையும் அவர் ஓரளவுக்கு அறிந்து வைத்திருந்தார். துரையாகத் தொழில் புரிய அவரின் ஆரம்ப மூலதனமே அந்த அறிவும் அநுபவமும் தாம். அவை இரண்டும் தன்னைவிட தனது கண்டக்டருக்கு அதிகம் என்பதை அவர் அறிவார்.

அவை இன்று பயன் தரவில்லை என்றுதான் அவருக்கு ஆத்திரம்.

வாலிப மிடுக்கும், வாய்துடுக்கும் மிகுந்த ஒரு சிலருக்குக் கங்காணிவேலை கொடுக்கப்பட்டன. கொடுக்கச் சொன்னவர் துரை. கொடுத்தவர் கண்டக்டர் ஐயா. ஆக, இருதரப்பினருக்கும் ஆகாதானவர் அவர்தான்.

நான்கு நாள் வேலை நிறுத்தம் நீடித்திருந்ததே என்று அவரிடம் ஆத்திரப்பட்டார் துரை. நான்கு நாள் வேலை நிறுத்தம் இப்படி நாசமானது அவரால்தானே என்று கோபப்பட்டனர்தொழிலாளர்கள்.

ஆளோடு ஆளாக கூடி குனிந்து நின்று கூலிவேலை செய்தவர்களுக்கு கம்பும் கத்தியுமாக கைகளை ஆட்டி கதைக்கவைக்கும் கங்காணிவேலை கொடுத்தால் கசக்கவா செய்யும்?

ஒற்றுமை உடைந்த காரணத்தால் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் பிசுபிசுத்து விட்டது. அவர்களின் நியாயமான கோரிக்

## கவிஞர்களுக்கு ஒரு வேண்டுகோள்

'கவிதைத் துறையில் ஈழம் முன்னணியில் நிற்கிறது' என்ற நற்பெயர் நமக்குக் கிடைத்திருக்கும் அதே வேளையில், 'பெண்ணையும், காதலையும் விட்டால் பாடுவதற்கு இவர்களுக்கு வேறு பொருளே இல்லை' என்ற அவப்பெயரும் நம்மை நோக்கி வருகிறது. இந்த நிலையை மாற்றவேண்டும். ஆகவே பெண்ணையும், காதலையும் விட்டு, சமுதாய எழுச்சிக்குத் தேவையான பொருள் பற்றிக் கவிதை எழுதுங்கள் என்று நமது கவிஞர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். - ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளுக்கு நிர்வாகத்தைப் பணிய வைக்கமுடியாது போயிற்று.

அவருக்கு அது குறித்து அடி மனதில் வேதனைதான்.

என்றாலும், அவரிடத்தில் ஆரம்பத்தில் துள்ளிக்குதித்த துரை இன்று தொழிலாளர்களின் ஒற்றுமை குலைந்ததையிட்டு, ஆத்திர மடங்கியிருப்பதில் அவருக்குத் திருப்தி.

அதற்கிடையில் தான் அப்படி ஒரு சம்பவம் நடந்தது.

வேலை நிறுத்தம் ஆரம்பித்து மும்முரமாக நடந்து கொண்டிருந்த இரண்டாவது நாள். முத்துவின் மனைவி இறந்து போனாள்.

தொழிலாளர்கள் யாராவது இறந்துபோனால், தோட்டச் செலவில் சவப்பெட்டி கொடுப்பது என்பது அங்கு சம்பிரதாயம். அந்தச் சம்பிரதாயத்தை வேலை நிறுத்தத்தைக் காரணம் காட்டி துரை மீறினார்.

தனக்கு எதிராகப்போகும் ஒவ்வொருவரையும் காத்திருந்து பழி வாங்கத் துடித்துக் கொண்டிருந்த துரை இப்படி ஒரு சம்பவத்தை விட்டு வைப்பாரா?

வேலை நிறுத்தத்தில் ஈடுபடுபவர்கள் தோட்ட நிர்வாகம் தரும் சலுகைகளை பெறும் வாய்ப்பை இழந்தவர்கள் ஆவார்கள் என்று நோட்டீஸ் ஒட்டி வைத்தார். அப்போதாவது அவர்களின் உறுதி குலையாதா என்று.

தொழிலாளர்கள் முன்னிலும் அதிகம் ஆவேசப்பட்டார்கள், அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்த அவனோ குமுறும் எரிமலையானான். என்றாலும் அவனது ஆத்திரமும் ஆவேசமும் இறந்து போனவளின் இறுதிச் சடங்குகளைச் செய்ய உதவவில்லை — அவன் அதை அறிவான் என்பதால்தான் திகைத்துப் போனான்.

## இடமாற்றத்தை அறிவியுங்கள்

பாடசாலையில் உள்ள 'மலர்' சந்தாதாரரான ஆசிரியர்களின் ''மலர்'' பிரதிகள் அப்பாடசாலையின் தலைமையாசிரியரது முகவரிக்கே அனுப்பப்பட்டுவருகின்றன. ஆகையால் 'மலர்' சந்தாதாரரான ஆசிரியர்கள் இடம் மாற்றம் பெறும்போது, புதிய பாடசாலை முகவரியை உடனடியாகத் தெரிவிக்கும்படி வேண்டுகின்றோம். —ஆ-ர்.

அவனிடம் ஐம்பது ரூபா பணத்தைக் கையளித்த கண்டக்டர் ஐயா சொன்னார். ''முத்து, உன்னுடைய நிலைமை எனக்குத் தெரியும். இருந்த பணத்தை எல்லாம் கட்சி என்றும் சங்கம் என்றும் செலவழித்துவிட்டு, மனைவி இறக்க கிடப்பது தெரிந்திருந்தும் உன்னுடைய சக தொழிலாளர்களின் நன்மையே பெரிதெனக் கருதி நீ உழைத்துக்கொண்டிருக்கிறாய். உயிரோடிருக்கும்போது அவளுக்கு நீ செய்யத் தவறியதை சாவிலாவது செய்தாக வேண்டும். இந்தா இதை வைத்துக்கொண்டு ஆகவேண்டியதைச் செய்''

அவன் நிலை குலைந்து போனான். அவனுக்கு அவரைப்பிடிக்காது என்றாலும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு இப்படி உதவி செய்வது தோட்ட நிர்வாகத்துக்கெதிரான செயல் என்பதை அவன் அறிவான். தனக்குப் பிடிக்காதவர் என்றாலும் தன்னால் அவர் சிரமப்படுவதை அவன் விரும்பவில்லை. அவன் உணர்ச்சிகளை புரிந்து கொண்ட அவர் பேசினார்.

''முத்து, உனக்கும் எனக்கும் என்றைக்குதான் வாய்தர்க்கம் ஏற்படாதிருந்தது? ஆனால், அதெல்லாம் தொழில் செய்யும் இடத்தில். தொழிலாளர்களுக்கென்று நீ வாய்திறந்து பேசும்போது நீ சொல்வது சரியென்று பட்டாலும் அதை வெளிக்காட்டாதிருப்பதின் மூலம் நான் தோட்ட நிர்வாகத்துக்கு விசுவாசமாக இருக்க முயற்சிக்கிறேனே அல்லாது வேறில்லை.''

''உண்மையில் இப்போது நீங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பது எனக்கு உடன்பாடுதான். ஆனால், அது சரியான செயல் என்று ஆமோதிக்க நான் தயாராக இருந்தால் தலைவர் வேலைக்கு நீயும், கண்டக்டர் வேலைக்கு நானும் தேவையே இல்லை'' அவர் பேசி முடித்தார். அவன் ஆமாம் என்பது போல் தலையை ஆட்டினான்.

''உங்கள் பக்கம் தான் நான் என்றாலும், நாளைக்கே துரை வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் முயற்சியில் முழுமூச்சோடு ஈடுபடு என்று என்னைக் கேட்கும்போது 'ஆகட்டும் சரி' என்றுதான் சொல்வேன். அப்படி ஒரு நிலைமை என்னுடையது. ஆக 'உள்ளும் புறமும்' ஒட்டி உறவாடாத உணர்ச்சிகளைச் சகித்துக் கொண்டு வாழுகிறவர்கள் நாங்கள்.''

ஈழத்து
இலக்கியப் பூங்காவில்
ஒரு புதிய மலர்
''பாவை''
(சிறுகதைத் தொகுதி)
ஆசிரியர்: ''சாந்தன்''
கிடைக்குமிடம்:
யாழ் இலக்கிய நண்பர் கழகம்
மாவிட்டபுரம், தெல்லிப்பழை
விலை சதம் -/50

அவன் அவருக்காக அநுதாபப்படத் தொடங்கினான். தன் துயரத்தையும் மறந்து அவர் தொடர்ந்தார்.

"முத்து, மோட்சம் என்றும் நரகம் என்றும் சொல்கிறார்களே எனக்கென்னவோ அவற்றிலெல்லாம் நம்பிக்கை இல்லை. தன் மனசுக்குச் சரியென்று பட்டதை வெளியில் தப்பென்று சொல்லி தடுத்து வைக்கவும், தன் உளமார விரும்பாத ஒன்றை வெளிக்கு ஆதரித்து மகிழ்ச்சி அடைவதுமான, இந்த தோட்டத்து உத்தியோகத்தைவிட வேறு ஒரு நரகம் இருக்கமுடியாது"

''நான் இறந்து போனால், எனது சவக்குழியை யாரும் வெறுப்போடு பார்க்காவிட்டால் அதுபோதும் எனக்கு'' என்று அவர் சொல்லும்போதே அவன் இடைமறித்தான் ''ஐயா, அப்படியெல்லாம் பேசாதீர்கள்."

ஆனால், இன்று.

அவன் அவரை எது குறித்து பேசவேண்டாம் என்று தடுத்தானோ அது நடந்தேறிவிட்டது. அவர் போய் விட்டார்.

அவருக்காக அவனும் அவன் கூட்டத்தாரும் கண்ணீர் வடிக்கின்றார்கள். ஆனால், அவர்களுக்குத் தான் எத்தனை வேறுபாடு?

அவர்கள் அழுவது அநுதாபத்தால்.

அவன் அழுவது பிரிவால்.

அவர்களுக்கு அவர் இருந்தது தெரிந்தது.

அவனுக்கு அவர் இல்லாததும் தெரிகிறது.

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமம்

—★—

இளமைநிறை உரு, அவளின் இதழமுத கலசம்;
இதழவிழு பருவமலர் எழில்நிறையும் பருவம்;
நளினகலை பலவுமவள் நகையினிடை யாடும்;
நங்கையிரு பொங்குகல சங்களுட ஞடும்;
தளருமிடை யொடியுமிரு விழிகளொளி வீசும்.
தளருடலில் படர்துகிலும் இளமைவெறி பேசும்,
களிபெருகு முளமிளமைக் கனவுபல காணும்,
கன்னிமையின் பொன்மலரும் இதழ்விரியும் காலம்.


காலமெனு மேட்டிலொரு கதைமுடிந்த தாலே
கலைவளரு சிலையெழிலின் நிறைவுகொண்ட தாலே
கோலமுலார் கொள்கையுயர் சீலர், சில முதியோர்
கொடிபடர் கொம்புதரு வித்தனர்கள்; கடலில்
மாலையொளி வீழுபொழு தாகியநன் னேரம்
மாலையிடக் காளைமணப் பந்தலி லிருந்தான்;
சேலையுடுத் தோவியத்தைத் தோழியர்கள் கூடிச்
செம்மையுறச் செய்தனர்க ளோரறைக்கு ளோடி.

ஆடிவரு தென்றலவள் சாயல், இள மானும்
அன்னமு மிரந்துநடை யவளிடத்தில் பயிலும்;
பாடிவரு நதிகடலில் ஓடிவிடு முன்பு
பாடல்மறந் தாடல்துறந் தோடல்குறைந் ததுபோல்
சேடியர்கள் கூடிவரச் சீறடிகள் நோவச்
செம்மைமுகம் மேவஇதழ் சிறுமுறுவல் நெளிய
பாடுகவி கூறுநடை மீறிஅடி மெதுவாய்
பாவைநடந் தேகினள்; கண் பார்வைபுவி மீதில்!

பறையதிர மறைபரவ நிறையொளியில் முன்பு
பார்த்தசுப வேளைகழுத் தில் மஞ்சள் நாணை
முறைகளுடன் ஏற்றினன்முன் கண்டறியா ஒருவன்;
முதியவர்கள் வாழ்த்தினர்சம் பிரதாயப் படியே,
பிறைதிகழும் வான்பார்த்தார் பெருமீனைக் கண்டார்
பெய்வளையும் கைபிடித்த பெருமகனும் புவியில்
நிறைவுபெற வாழ்வதற்கு எத்தனையோ செய்தார்
நிலமகளும் நிலவொளியில் நினைவழிந்து கிடந்தாள்!

தனிமையில் இனிமையொன் றினியிலை யெனஅவள்
தனிவழி யினிலொரு மனிதனைத் தள்ளினர்!
இனியவள் விதியவன் விதியொடு இணைவழி
எழில்மிகு மெனவுளம் எண்ணின ரோ அவர்?

— கணேஷ்.



— வேதாந்தி.


காலத்தின் பிடி அன்று முற்றுாய்த் தளர்ந்துவிட்டிருந்தது. அவன் வெட்டில் சாய்ந்த வாழைபோல தொண்டைக்குக்கீழ் உணர்வற்று மரத்துவிட அதற்கு மேலாய்திணறிக்கொண்டிருந்தான். அந்த, செய்வ வாக்கு ஊர்ஜிதமாகிவிட்ட அறைக்குள் அவன் எதையுமே லட்சியம் செய்யாது மூச்சின் பரிபாஷை நயனத்தின் அபிநயத்தில் உறுதிப்பட உணர்ச்சிகளின் மயக்குநிலை கலங்காது, போலிவாழ்வை நிஜமாக வாழ்ந்துகொண்டிருக்கும் தனக்கு வேண்டிய, வேண்டாத உறவினர் புடைசூழ எதன் விதிக்கப்பட்டுவிட்ட யாத்திரையையோ வழிமறித்து இழுத்துப் பிடித்திருக்க விரும்பியவனுய் போராடிக்கொண்டிருந்தான். நிஜ ஏக்கமும் வரவழைக்கப்பட்ட ஏக்கமும் தனித்தனியாய் தனித்த முகங்களுக்குரிய சண்கள் தன்னிடம் மிக இரகசியமான அம்பலத்தில் எதனை எதிர்பார்க்கின்றனவோ அதற்கு நேராயோ, எதிராயோ செயல்பட்டுச் சாதிக்கமுடியாத மனிதப் பலவீனத்தின் வக்ரமான அழுங்குப்பிடியில் வதங்கி, அதனைக் கூட அறியாது அவன் அல்லற்பட்டுக்கொண்டிருந்தான்.

இன்னும் சற்று நேரத்திற்குள் கண்ணீரை வரவழைத்து வெடித்து அழ அவன் உணர்வுகள் மங்காத இதற்குமுன்னருள்ள காலத்தில் வாழ்ந்த நாட்களில், அவனுக்காய், கரிசனத்தின் திவலையைக்கூடக் காட்டாத ஒரு கூட்டமும், அவனில் இன்னும் தங்கியிருக்கமுடியாத சுயநோய்க் கைசேதத்தில் அழ வேறு ஒரு கூட்டமும், அவனுக்குக் கொடுத்த கடனை நினைத்து எரிந்து அழ மற்று ஒரு கூட்டமும், நலத்தில் பங்கு கொண்டதற்காய் நலிவிலும் பங்குகொண்டு காட்ட ஒரு கூட்டமும், அவன் என்றே, எங்கோ அழுத்தமற்றுச் செய்த உதவிகட்காய் மனம் வருந்தி அழ ஒரு கூட்டமும், அவனுக்குத் தமது முழுச் சேவையையும் செய்யமுடியாமல் போவதை நினைத்து விசிக்க ஒரு கூட்டமும், அவன் கண்ணை மூடிவிட்டால் அதிலுள்ள துயரைக் காட்டத் தாம் எப்படியெல்லாம் தோற்ற அளவில் மாற்றம் கொண்டு திரியவேண்டும் என்றும் அழ அவனுக்கு மிக நெருங்கிய ஒரு கூட்டமும், அவனிடம் தாம் கடன் வாங்கியதை யாரும் அறிந்திடக் கூடாதே என்ற பொருளாதாரக் கவலையில் குமைய ஒரு கூட்டமும் இதைவிட்டு மிகச் சிக்கலான தனித்தனிப் பிரச்னைகள் கொண்ட ஒரு கூட்டமும் சிறுசிறு தொகையில் தானிருப்பினும் அவை சேர்ந்து வெளியேற்றும் எச்சக் காற்றைத் தான் தானும் சுவாசிப்பதை அறியாத ஆனல் இதைவிட இலகுவாகவும் ஆழமாகவும் சுவாசிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்ற இகத்தின் பலமான கோரிக்கையை நிறைவேற்றச் சபத



மிட்டவனுய், அவன்போல, அவனும் தன் சுவாசத்தைச் சுகப்படுத்திக்கொள்ள தன்னை முற்றுக அறியாத நிலையிலும் பிரயாசைப்பட்டுக்கொண்டிருந்தான்.

தன் நினைவுடன் ஐக்யமாகிக் கலந்துவிட்ட நிாழ்ச்சிகளை ஒரேயொரு முறை கடைசியாக எண்ணிப்பார்க்க வக்கில்லாமல், அந்த எண்ணமே வராமல், தனக்கென்று இந்த உலகிலுள்ள ஐசுவரியங்கள், பாசப்பிணைப்புகளை நினைக்கக் கொடுத்துவைக்காமல், எல்லாருக்கும் பொதுவான, நிச்சயமான, தவிர்க்கமுடியாத அவஸ்தையின் உச்சத்தைத்தான் தானும் அநுபவிக்கிறேம் என்ற அளவில் ஒரு போலித் திருப்தியில் சமாதானிக்கவும் யோசனையில்லாமல், வாழ்வில் ஒரேயொரு முறை தன் அறிவையும் உணர்வுகளையும் ஒருமிக்க வைத்து தன்னை ஆசுவாசிக்கத் தன் மூச்சைத் தன்னைவிட்டும் போக வைக்காமல், போன மூச்சைத் திரும்பத் திரும்பத் தொடரவைக்கும் வழிக்கு அவன் முழுமனதாய் முயன்றுகொண்டிருந்தான்.

இத்தனை காலமாகத் தன்னை வளர்த்த, தன்னேடு ஊடாடிய தன் ஜீவ உணர்வுகளில் முதன்மையான ஆசைகள்—நிறைவு காணுதவையும்—இந்தக் கடைசி காலத்தில் தனக்கு நன்றி மறவாமல் தன் உயிரை இன்னும் விடாது பிடித்து வைத்திருக்கக் காலத்தோடு நடத்தும் உக்ரப் போராட்டத்தையும் விளங்காது, அந்த நிறைவேருது எஞ்சிவிட்ட ஆசைகளாலேயே தான் இன்னும் இப்படிக் காலத்தோடு போராடித் துடிக்கவேண்டியிருக்கிறது என்றும் அறியாமல், இப்படி வருமென்று அறிந்திருந்தால் ஆசைகளை அடியோடு நீக்கிவிட்டு வாழ்ந்திருக்கலாமே என்றும் உணராது, இதற்கு வருந்தவும் வராது அவன் ஊமைத் துடிப்பை அநுபவித்துக் கொண்டிருந்தான்.

அவனை வெறும் சடப்பொருளாக்கிவிட, இத்தனை பருவ மாறுதல்களிலும் உயிரியாக்கி வைத்திருந்த ஜீவ ஆத்மா, தன் கூட்டைவிட்டுப் புறப்படுவது அப்படிச் சுலபமானது அல்லவென்பதை பகிரங்கப்படுத்துவதுபோல ஜீவாத்மா, அணு அணுவாகத் தன் யாருமே அறிந்துவிடாத இருப்பிடத்தைவிட்டும் புறப்பட்டுத் தன், யாருமே அறிந்திராத வெளிக்கு நகர்ந்ததில் அவன் தன் மூச்சைப் பிடிக்கத் திணறிக்கொண்டிருந்தான். அவன் உயிர்வாகனம் சுவாச உறுப்பு கொஞ்சம்கொஞ்சமாய் தன் அசல் இருப்பிடத்தைவிட்டு, சுவாச வழியில் இடம்மாறி, இடம் நிலைத்து, இடம் பெயர்ந்து நாசியால் வெளிப் பிரபஞ்சத்திற்குத் தொண்டையூடாய் நகர்ந்துகொண்டிருப்பதை நிறுத்தி அதன் அசல் இடத்திற்கு அனுப்பும் முயற்சியில் அவன் சுவாசிக்கத் திணறிக்கொண்டிருந்தான்.

ஜீவாத்மாவை உடலில் தரிக்க வைக்கும் அந்த ஜீவ மரணப் போராட்டத்தில் அவனது நிறைவேருத ஆசைகள் தம் நிறைவேற்றத்தை அடையுமட்டுமாவது அவனை உயிரியாக வைத்திருக்க எடுத்த உளைச்சல் மிகுந்த யுத்தத்தில் காலத்தின் அரக்கத் தன்மைக்கு ஈடுகொடுக்கமுடியாமல் ஒவ்வொன்ருய்க் கடைசிவரையும் போராடி அழிந்ததும் அவனது இயக்கம் மூச்சின் பரிபாஷையையும், நயனத்தின் அபிநயத்தையும் நிறுத்தி நின்றது. அந்தக் கூட்டங்களில் அநேகம் அவனிடம் கடைசியாக எதிர்பார்த்ததை அவன் ஏமாற்றவில்லை. இனி, சில கணங்கட்கு அவன் உடம்பில் சூடு இருக்கும். அவ்வளவுதான்.

அந்த அறையிலிருந்து எதற்குரியது என்று தனித்தனியாக அடையாளம் கண்டுகொள்ள முடியாத வகையில் பல குரல்களின் ஒழுங்கற்ற பிலாக்கணம் காற்றில் ஒரு விஞடிக்கு சுமார் ஆயிரத்து நூற்று இருபது அடி வேகத்தில் பரந்தது.

*

## படைப்பிலக்கியமும் படிப்பிலக்கியமும்

சமீபத்தில் ஒரு நண்பர் என்னைக் கேட்டார்; ''முறையாகத் தமிழ் பயின்று, பட்டம்பெற்று, ஒரு பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றும் நீங்கள், சிறுகதை, நாவல் என்றெல்லாம் எழுதுகிறீர்களே, அது எப்படி?

இக்கேள்வி எனக்கு வியப்பைத் தரவில்லை.

**வியப்பைத் தரவில்லை என்பதே தமிழ் இலக்கியச் சூழ்நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறது.**

—இந்திரா பார்த்தசாரதி.

(நன்றி: 'தீபம்')

## படைப்பிலக்கியமும் படிப்பிலக்கியமும்

—★—

1970 ஜூன் ''மலர்'' ஏட்டில் வெளியான ஆசிரியத் தலையங்கத்தையிட்டு சில ஆசிரியர்கள் மனக்குறை கொண்டுள்ளதாக நமக்குத் தெரியவருகிறது. ஆசிரியர்களைப் புண்படுத்தும் நோக்கம் துளியும் நமக்கில்லை. ***படித்தவர்கள் படைப்பிலக்கியத்தில் அக்கரை காட்டவேண்டும் என்று யாசிப்பதே நமது நோக்கம்.*** இன்றைய எழுத்தாளர்களில் பலர் ஆசிரியர்களாக இருப்பது யாவரும் அறிந்ததே. ஆனுல் எழுத்தை வளர்க்கும் பணியில் - இலக்கியத்தை வளர்க்கும் பணியில், ஆசிரிய சமுதாயத்தில் பெரும் பகுதியினர் அக்கரை காட்டாமலிருப்பதை ஆசிரியர் கவனத்திற்குக் கொணர்வது ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்யும் என்ற நம்பிக்கையிலேயே இத்தலையங்கத்தில் ஆசிரியர்களைப்பற்றியும் குறிப்பிடப்பட்டது என்பதை மிகப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேம். —*ஆசிரியர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழக்கினேன் குரல்!

பூமி, நெருப்பு, ரொட்டி, மா, சீனி,
புஸ்தகம், கடல், காணிநிலம் — இவை
யாவருக்கும் பொது
— யாவர்க்கும் சொந்தம் —
ஆகணும் என்று நான்
அவாவுற்றேன் — ஆகையால்
வீதியில் நிற்கிறேன்
வீடற் றலைகிறேன்.

விபீஷணத் துரோகியின் விஷம தீர்ப்பாளர்
தேடுமுர் என்னை — தெருத் தெருவாக —
சீந்தி என் நாமத்தை சிதைத்துச் சீய்த்திட
அட்டஹாஸமாய்
— அவன் கையாட்கள் —
சேட்டைக் குரங்கெனக்
கூட்டமாய் அலைகிறார்!

உதயப்பருதி மறந்து தான் விட்ட
உதயப் பொழுதின் வனுந்தரப் பாலையில்,
தலைவாயிற் சுரங்கத்தில்
தலைவனோ டாங்கு,

அல்லற் படும் — என்
அன்புச் சகோதரர்
முன்னிலை நின்று — நான்
முழக்கினேன் குரல்:

''அழுக்குக் கந்தல் ஆடைகள் இனியும்
அணிய மாட்டேர் — இனியொரு பொழுதும் —
வயிற்றுக் குண வெதும் வழங்கிடா தும்மை
வந்தெதிர் கொள்ள
வராதினி யொருநாள்!

''வனுந்தரத்தின் வசிய அற்புதங்கள்
வனப்புகள் — பகிர்ந்தினி
விருந்தென மாந்துவோம்!



''பாலகர்க்காய் — இனி
பதைத்திடார் அன்னையர் —
துளி கண்ணீர் சிந்தி
அழாதினி தாய்க்குலம்!''

எனினும் அவர்கள் —
வியனன்பு காதலை,
விரும்பிப் பகிர்ந்திட விருப்பம் சிறிதிலார்.
வழங்கலுற்ற பொய் வாக்குறுதிகளை
நம்பலுற் றவனும் நலிந்திடுமாறு —

பட்டினி வாதையில்
படுதுயர் தியாகத்தில்
வீழ்த்தினர் — இருட்டில்
வீழ்த்தினர் மனிதனை!

திரண்டோங்கி நிற்கும்
தேக்கு மரமென
வலிமை உறுதியும், இளகிடு மன்பும்
பெறுவான் — மீண்டும்
உயர்வான மனிதன்!

அற்பரைச் சார்ந்தினி
அவருடன் நில்லேன் —
நாமமற்ற மனிதர்களோடு
— மக்களோடு —
மதர்ந்து நிற்பேன் யான்!

உரிய என் மக்கட்கு உரியதாகட்டும்
— உரிய தாகட்டும் — என்னரும் நாடு!
வீசும் கதிர்ச் சுட ரலைகள் தவழ்ந்து
விளையாடட்டு மென் அன்னை மண் மீது!

கலியழித்தின்பம் கலப்பை நல்குமால் —
ஒளியின் மேல் காதல் மேவிட ஒப்பினேன்!

மாந்தர்க் குணவு தான்
மறுத்து — வெறுப்புடன
அவர் கீறும் கோட்டை
அழித்துத் துடைத்திடத்
துணிந்தேன் — மனம் கொண் டெழுந்தேன் தோழனே!

மூலம்: பாப்ளோ நெருடா
தமிழில்: பண்ணாமத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியெல்லாம் தமிழ் மணக்க வீடெல்லாம் ஏடு படிக்கச் செய்யுங்கள்.

**கலைமேகம், இப்ருஹீம்.**

எங்கள் ஈழநாட்டில் எல்லோரும் எதுவரை உயர்ந்து விட்டார்கள்? சந்தித்துப் பேச சந்தியில் கூடுவதற்கும், தரம் கெட்ட மனிதர்களாய் வாழ்வதற்கும்தான் உயர்ந்திருக்கிறார்கள்.

நல்லதொரு நூலைக்கற்று நம் மவருக்குள் நற்பணிபுரியுமளவிற்கு நம் நாட்டில் உயர்ந்தவர் மிக மிகக் குறைவே. நாடுகள் தோறும் நூலகங்கள் அமைத்து அறிவு, கல்வி வசதியளித்தும் படிப்பவர் குறைவென்றே சொல்லலாம்.

மாணவர்கள்கூட ஆர்வ மற்றுக் கிடக்கின்றனர். வீணான கேளிக்கைகள், சினிமா போன்ற கெட்ட துறைகளில் உள்ளத்தை லயிக்க விட்டு படிக்கவேண்டியதை விடுத்து கற்க வேண்டியதை மறந்து காலத்தை வீணே கழிக்கின்றனர்.

தாய் தந்தையர்கள் போதிய படிப்பில்லாமையால் பெற்ற பிள்ளைகளுக்கு நல்ல படிப்பினைகளைப் போதிக்க சக்தியற்றிருக்கிறார்கள். முழுமூடன் சொன்னாலும் முழுக்க நம்பும் உள்ளங்கொண்ட சிலர் தங்களது பிள்ளைகளை ஏன் படிக்க வைக்கவில்லை என்றால், ''எதுக்கையா படிப்பு? என் மகன் படித்து பார்லிமெண்டுக்கா போகப் போகிறான்?'' என்று எங்களையே திருப்பிக்கேட்கும் அளவுக்கு அறியாமை இருள் அவர்களைப் பீடித்திருக்கிறது.

அறியாமை இருள் போக்கி அறிவொளி பெற்று, அச்சம் நீக்கி, நல்லவர் வழி நடந்து நல்லவர்களாக, நாட்டைத் தேற்றக் கூடியவர்களாக, சீரிய கருத்துள்ளவர்களாக சிறந்து விளங்க இவ்வீழ நாட்டில் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ளவேண்டும்.

சினிமாப் பத்திரிகைகளையும், சினிமா நேசன்களையும் வாங்கிப் படியாது நல்லறிவூட்டும் நற்றமிழ் ஏடுகளை வாங்கிப் படிக்க வேண்டும்.


## "மலர்"
### சந்தா விபரம்

ஒருவருடம் ரூ. 6-00.
தனிப்பிரதி சதம் -/50.

### விளம்பர விகிதம்

பின்புற அட்டை ரூ. 200/-
உட்புற அட்டை ரூ. 150/-
முழுப் பக்கம் ரூ. 125/-

விபரங்களுக்கு
**'மலர்'**
இல. 21, மத்திய வீதி,
மட்டக்களப்பு.


எமது நாட்டில் அறிவுப் பஞ்சம் பெருகி விட்டதால்தான், எழுத்தாளர்கள் எண்ணற்ற ஏடுகளை தம்மாலான மட்டும் முயற்சி எடுத்து வெளியிட்டும், வாங்கி வாசிப்பாரற்று உள்ளம் உடைந்து கொண்ட லட்சியத்தையும் விட்டு, இருந்த இடத்தையும் விட்டுச் செல்ல நேர்கிறது.

எமது நாட்டவர்களுக்காகப் பாடுபடும் எழுத்தாளர்களை நம்மவர் என்று எண்ணி அவர்களின் வெளியீட்டையும் ஆதரியுங்கள். பிற நாட்டுப் பத்திரிகைகளை வாங்கிப் படிப்பவர் பலர், எமது நாட்டுப் பத்திரிகையை வாங்கிக் கிழிப்பவர்களாக இருப்பது வருந்தத்தக்க விஷயமாகும். இது போன்ற செய்கைகளால் ஆற்றல் மிகு ஆர்வமுள்ள பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் செத்து மடிய நேர்கிறது என்பதை ஒவ்வொரு வாசகரும் அவரவர் உள்ளக் கருத்தில்கொள்ள வேண்டும்.

நாடு வளர, நல்லறிவு வளர நல்லறிஞர் வளர — நல்லாதரவு வேண்டும். இதை உணராது உதாசீனம் செய்யும் மக்கள் கண்ணிருந்தும் கருத்திழந்தவர்களாகவே கருதப்படுவர்.

ஈழநாடு கலைவீடாக, வீதியெல்லாம் தமிழ் மணக்க இன்றே கருத்துள்ள '' மலர் '' போன்ற நல்ல ஏடுகளை வாங்கிப் படியுங்கள்.

நல்லேட்டைக் கற்று நல்லறிவைப் பெற்று நாட்டைப் பெருமைப்படுத்துங்கள்.

*

## " வாசனை போகாமலிருக்க ...'

—◎—

ஒரு பணக்காரர் தம் வேலைக்காரியை அழைத்துக்கொண்டு வெளியே புறப்பட்டார் வழியில் கறிகாய்க் கடைப்பக்கமாகப் போக நேரிட்டது. உடனே அவர் தம் மூக்கைக் கெட்டியாக மூடிக்கொண்டார். வேலைக்காரியும் அதே போலச் செய்தாள்.

''நீ எதற்காக மூக்கை மூடிக் கொண்டாய்?'' என்று பணக்காரர் அவளைக் கேட்டார்.

''நீங்க எதுக்கு மூடிக் கிட்டீங்க?''

'' எனக்கு கருவாடு நாற்றம் பிடிக்காது. மூக்கினுள்ளே அது நுழையாமல் இருப்பதற்காக மூடிக்கொண்டேன்.''

'' எனக்கு கருவாடு வாசனை ரொம்பப் பிடிக்கும். மூக்கினுள்ளே புகுந்த வாசனை வெளியே போகாமல் இருக்கிறதுக்காக நானும் மூக்கை மூடிக்கொண்டேன்'' என்றாள் வேலைக்காரி.

திருமதி ராமையா
(களனியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளியீடுகள்

## நமக்குள் ஒரு வார்த்தை

விழிப்புணர்ச்சி, வழியெடுப்பு என்னும் பதங்கள் செயல் ரூபத்தில் நடைமுறை உலகிற்கு வந்துகொண்டிருக்கும் இந்தக் காலகட்டம் ஈழத்து இலக்கிய 'ஊழல்' உடையவர்களின் நெஞ்சை உறுத்த வேண்டிய ஒன்று. நமக்கென்று ஒரு தனி வளையை அமைத்துக் கொள்ள ஆரம்பமாகியிருக்கும் இந்த இக்கட்டு சகாப்தத்தில் நாம் விரும்புவது, யாசிப்பதெல்லாம் ஒத்துழைப்பு, ஒத்தாசை, உபகாரம் என்பவைதாம். நமது தனிவளை, அடுத்தவனின் மாடமாளிகையிலும் சகல ரசாநுணுக்கங்களையும் கொண்டிருக்கப்போகிறது என்பதற்கு நமது நிர்மாண வரிப்படங்களும், மாதிரி அமைப்புகளும் ஆதாரங்கள்.

சுதேச உணர்வை பரிந்துபேசும் வக்கீலாக்கி எம்மவர் படைப்பில் நீதி காணும்படியும், பின் உத்ஸாஹம் தரும்படியும் நாம் தொனி அமைக்கவில்லை. விதேசி வெளியீடுகளோடு ஒப்பிட்டுப்பார்ப்பதற்காயினும் ஒன்றிரண்டை — நம்மவர் ஆக்கங்களை — மனமுவந்து வாங்க வேண்டும் என்பதே எமது திவ்ய வேண்டுகோள். அதன்பின்னரும் உங்கள் தீர்ப்பு எதிர்ப்பக்கத்துக்குச் சாதகமென்றால், நாங்கள் வற்புறுத்தவில்லை.

நன்றி.

**'அமரத்துவம்'**

[யாழ்வாணனின் சிறுகதைத் தொகுப்பு - பக்கங்கள் 111]

சமுதாய நல்லுணர்வோடு செய்யப்படும் காரியங்கள் எத்துறையைச் சார்ந்திருப்பினும் அவை எல்லாத்துறைகளாலும் வரவேற்ப்கபடுவது உண்மை. இந்த நல்லுணர்வுகளின் பாற்பட்டு சமூக, சமுதாய நல்லுணர்வுகள் எனும் திரைச்சீலையில் தம் வண்ணக் கலப்பை சிறுகதைகளாக்கித் தந்து விட்டிருக்கிறார் "யாழ்வாணன்". இலக்கிய ஊட்டம் நிறைய உள்ள யாழ்வாணனுக்கு சிறுகதைகள் தண்ணீர்ப்பாடாய் வந்திருக்கின்றன. எல்லாரச உணர்வுகளுள்ளும் புகுந்து அவற்றில் திளைத்து ஒன்றி தனது அநுபவங்களுக்கு உணர்வுபூர்வமான சீர்திருத்த உருவம் தந்து விட்டிருக்கிறார், அவர்.

'கண் கெட்டபின்' சூர்ய நமஸ்காரம் பண்ணும் 'ஞானி'யின் மனைவியை 'அமரத்துவத்'திலும், மரியான் 'கருங்காலி' ஆகிவிட்டதற்காக அவன் நோயாளி மனைவியை உதாசீனிக்காது இரத்தம் கொடுக்க அஸ்பத்திரி விரையும் அந்தோனியை 'சங்கம'த்திலும், தன் மொட்டைத் தலையை மிக அசாதாரணமாக நினைத்து தன் காதலன் கணேசனில் சரிகண்டு அவன் புது மனைவிக்கு—தன் ஸ்தானத்தைப் பிடுங்கிக் கொண்டவளுக்கு, தனக்கெனக் கணேசனிடமிருந்து கிடைத்த பிறந்த நாள் பரிசை மனமாரக் கொடுக்கும் கதநாயகியை 'மொட்டை'யிலும் இழவு வீட்டில் 'கர்வம்' கொலுவிருப்பதாய் தான் அவமானிக்கப்பட்டதைச் சமாதானித்துத் திரும்பும் 'முள்' கமலாவைபும், நடப்பவை நல்லவையாயிருக்கும் என தான் தாக்குப் படுமட்டும் திருந்தக் காந்திருந்ததாய் வாழ்ந்த 'மலர்ந்த வாழ்வு' தியாகுவும், சீதாவின் கையால் தண்ணீரைக் குடித்துவிட்டு அதன் மூலம் தன் பாவ மண்ணிப்பைக்கண்டு மரிக்கும் 'அறுவடை' தெய்வானை அனைவரையும் அறியும்போது ஒரு பிரமை, உலகமே சீர்திருந்தி விட்டதென்று. அசாதாரண உணர்வுகளோடு, அசாதாரண விவேகத்தோடு ஏறக்குறைய விபசாரிக்குப் பாவமன்னிப்பு வழங்கும் 'புடத்'தின் தெய்வமனிதர் ஏசுபோல அனைத்து பாத்திரங்களும் இருப்பதைக் காண முடிகிறது.

ஒரு மலர்ச்சரத்தின் மலர்கள் போன்ற இக்கதைகளை இடைமறிக்கும் வேறுவகை மலர்கள்போல 'கோடை,' 'ஆதாரம்,' 'கொழுகொம்பு,' 'பிரவாகம்' என்பன வேறு ஒரு கலாரசனை உணர்வுப் பின்னணியில் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

பன்னிரண்டு சிறுகதைகளுமே சுவையை இழக்காத நல்லநடையில் பின்னப்பட்டிருக்கின்றன. 'ரமணி'யின் முகப்பு அட்டை மிக வசீகரம். கைக்கடக்கமான அளவில் தெளிவான அச்சில் பிரசுரமாகி இருக்கிறது 'அமரத்துவம்.'

கிடைக்குமிடம்:—

தனலக்குமி புத்தகசாலை
சுன்னாகம்.

விலை: ரூபா 2/50

---

**'ஆச்சி பயணம் போகிறாள்' — நாவல்.**

['செங்கை ஆழியான்' பக்கங்கள் - 96.]

'எது நகைச்சுவை?' என்பதே ஒரு சிக்கல்தான். குழந்தைத்தனமான, அப்பாவிச் சேஷ்டைகள் நமது ஹாஸ்ய உணர்வைத் தீண்டிவிடும் அதே நேரத்தில், மிக நுணுக்கமான, அதிவேக நையாண்டிக் குறிப்புகளும் நமக்குச் சிரிப்பை ஏற்படுத்திவிடுகின்றன. 'ஹாரெல் லோட்ஸ்,' சார்ளி சப்ளின் போன்றோரின் அசட்டுத்தனமான சேஷ்டைகளை நாம் ரசிக்கும் போதில் 'Witty jokes'களும் நம்மை சிரிக்க வைக்கின்றன. அறியாமையைக் கைகொட்டி நகைப்பதுவும் அதி அறிவை வியந்து கெக்கலிப்பதுவும் நமது நகைச்சுவை ரசனையின் இருபக்கங்கள்.

இந்த ரீதியானவற்றின் முதல் வகையைத் தெரிந்து எழுதப்பட்ட முழு நீள நகைச்சுவைப் பயண நாவல்தான் 'செங்கை ஆழியானி'ன் 'ஆச்சி பயணம் போகிறாள்.' கிணற்றுத் தவளையாய் உலகப் புதினங்களின் நேரடிச் சம்பந்தமற்று வாழ்ந்து வந்த ஒரு ஆச்சியின், கல்யாணம் முடிக்கக் காத்திருக்கும் ஒரு பேரச் சோடியுடனான கதிர்காமப் பயணமே 'ஆச்சி பயணம் போகிறாள்.'

'ஆச்சி பயணம் போகிறாள்' வாசிக்கும்பொழுது பல சந்தர்ப்பங்களில் நாம் வாயாரா, மனமார நமது தனிமையை மறந்தும் உரக்கச் சிரித்து விடுகிறோம். மெயில் வண்டி வருவதைத் தெரிவிக்க மணி அடித்ததும் ஆச்சி 'முருகா!' என்று கரம் குவிப்பதுவும் 'ஸ்டேஷனில் கோயிலும் இருக்கும் போல' என்பதுவும் நினைக்கையில் சிரிக்க வைக்கின்றன. மெயில் முதன் முதலாக நின்றதும் 'என்ன நிண்டுட்டுது... சில்லுக்குக் காத்துக் கீத்துப் போட்டுதே......' என்று ஆச்சியின் விசாரணையில் அவளின் அறியாமை நம்மை நகைக்க வைக்கிறது.

சின்னத்தம்பி முனிக்கு ஆணி அடிப்பதைத் தொடர்ந்து வரும் பேய்க்கதை மிக ரசனையானது. செல்வி சிவராசாவை 'காவாலி' என்று அழைப்பதில் ஆபாசம் தென்படவில்லை. ஹாஸ்யம்தான் தொனிக்கிறது. இப்படி எத்தனையோ.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த முழுநீள நகைச்சுவை நாவலின் சிறப்பிற்கு பெரிதும் உறுதுணைத்திருப்பது 'சௌ' வின் நயமான சித்திரங்கள். சம்பவங்களை வாசிக்கையில் ஏற்படும் சிரிப்பு சித்திரங்களைப் பார்க்கையில் அடக்க முடியாது போய்விடுகிறது.

ஈழத்தின் முதல் ஹாஸ்ய நாவல் எனும் பெருமிதத்தைச் சுமந்துகொள்ளும் இந்த 'ஆச்சி பயணம் போகிருள்' ஒவ்வொரு இலங்கையனும் வாசித்து மகிழ வேண்டிய படைப்பு.

கிடைக்குமிடம்:—

தனலக்குமி புத்தகசாலை

27 - D, பெரிய கடை வீதி,

யாழ்ப்பாணம்.

விலை ரூபா 2/—

---

## தமிழமுது

[இலக்கிய முத்திங்கள் ஏடு]

'மலர்' முதல் ஏட்டின் தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தோம். ''ஈழத்தில் இலக்கியத்தரம் வாய்ந்த பத்திரிகை இல்லாத குறையைப் போக்குவதற்காக இந்தச் சஞ்சிகையை வெளியிடுகின்ருேம் என்று எல்லோரையும்போல் பீற்றிக்கொள்ள நாம் விரும்பவில்லை. ஏனெனில் அக்குறையை இந்தச் சஞ்சிகையினுல் மட்டும் போக்கிவிடமுடியாது. ஈழத்தில் இலக்கியத்தரம் வாய்ந்த பத்திரிகைகள் பல தோன்றவேண்டும் என்ற எமது ஆத்மார்த்தமான ஆசையின் முன்ஞேடியாக இச்சஞ்சிகை வெளிவருகிறது என்பதை மட்டும் சொல்லிவைக்க விரும்புகிருேம்."

நமது ஆசை வீண்போகவில்லை. கொழும்பு வாசகர் பேரவை வெளியிட்டுள்ள ''தமிழமுது" என்னும் இலக்கிய முத்திங்கள் ஏடு இந்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

முதல் இதழிலேயே ஈழத்துப் பிரபல எழுத்தாளர்கள் பலரது படைப்புகள் இடம் பெற்றுள்ளன. தரமான சிறுகதை, கவிதைகளுடன் கவிதை பிறந்த கதை, எழுத்தாளர் வரலாறு, ஒருவரியில் வாத்தியார் பொன்னுத்துரை, எழுத்தாளர் பேட்டி முதலிய நல்ல இலக்கிய அம்சங்களும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

கவர்ச்சியான இருவர்ண அட்டையுடன் 56 பக்கங்கள் கொண்ட இச்சஞ்சிகையின் விலை சதம் —/60 ஈழத்து இலக்கிய முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டிய ஈழத்து வாசகர்கள் தம் கடமையைச் செய்ய வேண்டும்.

[ஆசிரியர்: த. தனநாயகம்
வெளியீடு: வாசகர் பேரவை

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

சு. சோமசேகரம் (சரவணையூர் மணிசேகரன்)

செயலாளர், வாசகர் பேரவை,
101, வேக்கந்தை வீதி,
கொழும்பு — 2]

---

## இசை அருவி

[மாத இதழ்]

இசைக்கென ஒரு ஏடு! அதுவும் ஈழத்திலே தான் வெளியாகியுள்ளது. பிரபல இசை ஆசிரியர்களின் இசைப்பாடல்கள், கவிதைகள், இசை, நடன, கலைஞர்களின் வாழ்க்கை வரலாறு, கலைஞர் முகவரி, புதிய பாடல் ஸ்வர அமைப்பு, இராகம், தாளம் சம்பந்தமான பயனுள்ள கட்டுரைகள் முதலியன இடம் பெறும், இவ்விதழ், இசை பயிலும் மாணவர்களுக்கு மட்டுமல்லாது, இந்தத் துறையில் ஈடுபட்டுள்ள சகலருக்கும், மற்றும் ரசிகர்களுக்கும் பயன்படக் கூடியது. இசை சம்பந்தமான விடயங்கள் தவிர, சிறுகதை, நாடகம் போன்ற இலக்கிய ரசிகர்களுக்குப் பயன்படக் கூடிய விடயங்களும் இச்சஞ்சிகை இடம் பெறுகின்றன.

இசை உலககில் பிரபலம் பெற்றுள்ள 'நல்லைக்குமரன்' அவர்களை ஆசிரியராகக்கொண்டுள்ளது ஒன்றே இச்சஞ்சிகையின் சிறப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

டிமை 1/4 பெரிய அளவில், கவர்ச்சியான அட்டையுடன், 12 பக்கங்களில் வெளிவரும் இச்சஞ்சிகையின் தனிப்பிரதி விலை சதம் —/25. வருடச் சந்தா ரூபா 4/— மட்டுமே.

பத்திரிகை அமைப்பிலும், அச்சிலும், இன்னும் திருந்த இடமுண்டு. இச்சிறு குறையைப் பொருட்படுத்தாது, ஈழத்து இசைப்பிரியர்களும் இலக்கிய அன்பர்களும் ஆதரவு கொடுக்க வேண்டிய தனித்துவம் பெற்ற ஏடு ''இசையருவி,''

''இசையருவி''

ஆசிரியர் : நல்லைக்குமரன்

முகவரி: வைரக்கண்டி,
கோப்பாய்.

---

## ரோஜாப்பூ

[சினிமா மாத இதழ்]

ஈழத்திலிருந்து வெளியாகும் சினிமா மாத இதழ் 'ரோஜாப்பூ.' நிறையப் படங்களுடனும், ஈழத்துக் கலையுலகு பற்றிய பல சுவையான செய்திகளுடனும், வெளிவருகிறது. சினிமாச் செய்திகள் மட்டுமல்லாது, சிறுகதை கவிதை முதலியனவும் இச்சஞ்சிகையில் இடம்பெறுகின்றன.

ஈழத்தில் வெளியாகும் பெரும் பத்திரிகைகள் செய்யாத அளவுக்கு, ஈழத்து திரை முயற்சிகளுக்கும், கலை முயற்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளையும் படங்களையும் பிரசுரிக்கும் இச்சஞ்சிகைக்கு ஈழத்துக்கலை அன்பர்களின் ஆதரவு நிச்சயம் கிடைக்க வேண்டும்.

கூடியவரை வெளிநாட்டுச் சினிமாச் செய்திகளையும் படங்களையும்குறைத்து, ஈழத்து நாடகம், நடனம், கலைநிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளையும், படங்களையும் பிரசுரித்தால் பூரணத்துவம்பெற்ற ஒரு ஈழத்துக்கலை ஏடாக ''ரோஜாப்பூ" அமையும்.

வெளி அட்டையில் உள்ள கவர்ச்சியை பத்திரிகையின் உள் அமைப்பில் காணமுடியவில்லை இதில் கவனம் செலுத்தவேண்டும்.

டிமை 1/4 பெரிய அளவில் 24 பக்கங்களுடன் வெளிவரும் இச்சஞ்சிகையின் விலை சதம் -/40.

'ரோஜாப்பூ' ஆசிரியர்:
சுரேஷ் சுவாமிநாதன்

நிர்வாக ஆசிரியர்:
இ. பிரேமகாந்தன்

வெளியீடு: ஞானகுருபர நிலையம்,
82/3, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு — 13.

---

## நல்லை நாவலர்

[மாதப் பத்திரிகை]

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையாரால் வெளியிடப்பட்டுவரும் ''நல்லை நாவலர்''





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற மாத ஏடு, நாவலர் இலக்கியத்தைக் கட்டி எழுப்பும் ஒரு நல்ல முயற்சி எனலாம். ஆறுமுக நாவலர் பற்றிய பிரக்ஞையே இல்லாது தூங்கிக்கிடந்த தமிழ் மக்களை விழிப்புறச்செய்து, நாவலர் பெருமையை உலகறியச் செய்த ஆறுமுக நாவலர் சபை, நாவலருக்கு மகத்தான முறையில் சிலை அமைத்ததுடன், நின்றுவிடாது, அவருக்கு ஒரு நிலையான ஞாபகச் சின்னமாக இச்சஞ்சிகையை வெளியிடுவது மிகப் பொருத்தமாகும்.

நாவலர், நாவலர் சபையின் பணி, பற்றிய செய்திகள் மட்டுமல்லாது நல்ல பல கட்டுரைகளும் கவிதைகளும் இடம் பெறும் இச்சஞ்சிகை, காலக்கிரமத்தில் தரமிக்க ஒரு இலக்கிய ஏடாக அமையும் வாய்ப்பு இருக்கிறது.

1/4 செய்திப்பத்திரிகை அளைப்பில் 8 பக்கங்களுடன் வெளிவரும் இச்சஞ்சிகையின் தனிப்பிரதி விலை சதம் —/25.

---

## "நோக்கு"

"நோக்கு" என்ற புதுமைப் பா ஏடு மீண்டும் வெளிவந்துள்ளது.

'கவிதை என்பது ஒரு சிலரின் ஈடுபாட்டுக்கு மட்டுமே உரியது' என்ற நிலையை மாற்றி, 'பாவைப் படைப்பதும், பாவை நயப்பதும் பரந்துபட்டதொரு செயற்பாடாக விரிதல் வேண்டும்' என்ற எண்ணத்துடன் இந்த ஏடு பணியாற்றுகிறது. மக்கள் இதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

கவிதைத்துறையில் தமிழகத்தைவிட ஈழம் முன்னணியில் நிற்கிறது என்ற நற்பெயர் நமக்குக் கிடைத்திருக்கிறது. இங்குள்ள கவிஞர்களின் ஏராளமான படைப்புகளுக்கு விரிவான களம் அமைத்துக்கொடுப்பதற்கு கட்டாயமாகக் கவிதைக்கெனத் தனி ஏடுகள் இருக்கவேண்டியது அவசியம். "நோக்கு" நமது கவிஞர்கட்கு விரிவான களம் அமைத்துக்கொடுப்பதுமல்லாமல், நமது கவிஞர்களைப் புதுமைப் பாதையிலும் இட்டுச் செல்கிறது.

சித்திரை இதழில் வெளிவந்துள்ள கவிதைகளைப் பார்க்கும்போது இவ்வுண்மை நன்கு புலனாகிறது.

"நோக்கு" கவிஞர்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் இது:-

"பாவினில் புதுமை செய்ய வல்ல பாவலரை அழைக்கின்றோம். செய்யுட்களத்தில் சேர்ந்து பணியாற்றுங்கள். புதியன படைத்து 'நோக்கிற்'கு அளியுங்கள். ஈழத்தில் புதியதொரு பாமரபைப் பரிசோதனை முறையில் ஏற்றி அமைத்து நிறுவ எல்லோரும் முயல்வோம். கூறும்பொருள் என்னவாயமையினும், பாநலத்தைப் பெரு நலமாகக்கொண்டு உழைக்கும் ஓர் அணியினர் நம்மிடை தோன்ற வேண்டும்."

"நோக்கி"ன் தொகுப்பாளர்கள் ஈழத்தின் பிரபல புதுமைக் கவிஞர்களான இ. இரத்தினம் — இ. முருகையன் ஆகியோர் என்பதிலிருந்தே இவ்வேட்டின் சிறப்பை வாசகர்கள் அறிந்துகொள்ளலாம்.

விளம்பரங்கள் எதுவுமில்லாமல், புதுமையான இருவர்ண ஆர்ட் அட்டையுடன், நல்ல காகிதத்தில், 32 பக்கங்களில் வெளிவரும் "நோக்கு" தனிப்பிரதியின் விலை ரூபா 1—25.

விபரங்களுக்கு:

செய்யுட்களம்
149/3, காலி வீதி,
கொழும்பு — 4.

*



# நானும் நாலு நல்லவர்களும்

நானும்,
நாலு நல்லவர்களும்,
நற்றவம் செய்ய
நல்லாயன் நடந்த
நடுங்கும் குளிரிலும்;
போதிமரப் புத்தனின்
புண்ணிய பூமியிலும்;
மகான் முகமதுவின்
மக்காப் பாலையிலும்;
கர்ம வீரன் காந்தியின்
கால்பட்ட இடமெல்லாம்;
ஓடியும் நடந்தும்,
நடந்தும் ஓடியும்,
போகாத காலத்தே
போதி மரத்தடி வர.

மரம் சுற்ற
மரவேலி,
மரக் கொப்பில்
பிச்சைக் காரன்
உடுக்கையிலும்
அரை, வெண்துண்டுகள்,
வேரோடும் மண்ணில்
வேலாடும் மாதர் முகம்,
சிரசுகள்,
இளசுகள்,
புத்தம் சரணம் கச்சாமி.
பொய்யாய் ... மெய்யாய் ...
என்னவோ ... ...

மஞ்சற் சாமி
மலரலர் முகம்,
சங்கம் சரணமென
சத்தமாய்ச் சொல்லியும்
போதிமரத்தடியே
புத்தனின் ரூபம் தான்;
போதிமரத் தடியே
புத்தனின் நாதமில்லை.

நல்லாயன் மந்தைதனை
வேறு பலர்
விரட்டக் கண்டு
நல்லாயத் தரிசனம்
நாடியோடுங் கால்
ஞானஸ் நானம்
ஞானோபதேசம்
எல்லாம் முடிந்தது.
கொண்டாட்டம்;
கும்மாளம்;
நல்லானுப தேசம்
கேட்க,
கூடியிருந்த மந்தைகள்
கூக்குரல் விடவில்லை.

மக்காவின் பாலை
மனிதப் பதர்களாய்,
மாய வெறும்புகளாய்,
ஊர்ந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி,
குடிநீரில் முழுகி,
பாவம் மறைத்து
அன்று பிறந்த
பாவமறியா பாலர் போல
மறுபடியும் பிறக்கையிலே
கறளகற்ற பாவிகள்
பாவம் … …
மீண்டும்,
கறள் பிடிக்க
கால் தடுக்கி … …
ஐயையோ! … …!

யாபெரும் மகாத்துமா,
மண்ணோடு கலந்து,
மற்றுமொரு பத்தாண்டு,
இரத்தம், கொலை,
பாதகம், பாவங்கள்
பிரிவுகள், பேதங்கள்,
தீண்டத் தகாதவன்
இன்னமும் இருக்கின்றான்.
சத்தியம் சாகின்றது.

சன்மார்க்கக் கண்களிலே
சதைவளர்ந்து மறைக்கின்றது.
அண்ணலவன் நடந்து விட்டான்
அவர்களும் … … விழுந்தார்கள்.
மகாத்துமா எரிந்த,
மணல்மேடு மணக்கிறது.
ஓடுகின்றோம் … … … வழியில்லை

நானும் நல்லவர்களும்,
நாடிக்கிடைக்காத
நாத சிருங்காரன்;
நாயகன்,
நானா?… …
என்னுள்… நானா?… …
நல்லவர்கள் … …
பாவம் தேடட்டும்.
எங்கோ தேடிவிட்டு
என்னில் கண்டுவிட்டு
நாலு பேரை விட்டுவிட்டு
நான் மட்டும் … … ஓடுகின்றேன்
தரிசனம் முடிந்தபின்
இரட்சிக்க ஓடுகின்றேன்.

— நிதானி.



# கறுப்பையா

## மருதூர் மஜீத்.



மாலை மணி ஐந்திருக்கும். சிணு சிணுத்த மழை. கல்முனை பஸ் நிலையத்திற்குப் பக்கத்திலேயுள்ள வாடகைக்கார்கள் நிற்கும் இடத்தில் பத்துப்பன்னிரெண்டு வாடகைக்கார்கள் நிற்கின்றன.

இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று "மழை வெய்யில் எல்லாம் எனக்கு ஒன்றுதான்'' என்று கூறுவதே போல் நிலையத்தை விட்டு வெளியேறுகின்றது.

தனிப்பட்டோர் வாகனம் ஒன்று அம்பாரைக்குச் செல்லும் ஆட்களைச் சேர்க்க அடித்தொண்டையால் கத்திக்கொண்டு அலைகிறது.

பிரயாணிகள் தங்குமிடம் ஒழுங்கில்லாததால் மழைக்காக 'பஸ்' வருமட்டும் நடை ஓரங்களில் ஒதுங்கியவர்களுடன் நானும் சேர்ந்து கொள்ளுகிறேன்.

பாதையிலே மழையைப் பொருட்படுத்தாத கூட்டமொன்று. அவர்களுக்கு முன்னால் ஒரு தள்ளு வண்டி ஒருவரால் தள்ளப்பட்டு வருகிறது. அதற்குள் ஒரு மனித உருவம் கூனிக்குறுகிக் கிடக்கிறது; அந்த உருவம் அசைவதும் அவதிப் படுவதும் என் கண்களுக்கு நன்றாகத் தெரிகிறது. ஆச்சரியத்தோடு அதை நோக்குகிறேன். அந்த உருவம் உயிருக்காகப் போராடிக் கொண்டு செல்கிறது என்பதில் சந்தேகமேயில்லை.

வண்டியைப் பின் தொடர்கிறவர்கள் எல்லோரும் உழைத்து உருக்குலைந்தவர்கள் ''சக்கிலியர்கள்'' என்று பிறரால் வர்ணிக்கப் படுபவர்கள். அவர்கள் எல்லோரது உள்ளங்களிலும் சஞ்சலம் நிழலாடுவது அவர்களின் முகங்களில் அப்படியே தெரிகிறது.

நகரமே அவர்களின் தள்ளு வண்டி ஊர்வலத்தை வேடிக்கை பார்க்கிறது. என்னைத் தாண்டும் போது நானும் பார்க்கின்றேன். இல்லை கூர்ந்து நோக்குகிறேன்.

அங்கே,

வண்டியின் மத்தியிலே சுருண்டு கிடப்பவன் — சாவோடு போராடிக் கொண்டிருப்பவன், எனக்கு நன்கு தெரிந்த கறுப்பையா. கல்முனை வாழ் மக்கள் அனைவருக்குமே தெரிந்த அதே கறுப்பையா. "சக்கிலியன்" என்ற பட்டத்தை எடுத்து விட்டு வேறு ஏதாயினும் பட்டத்தைக் கொடுத்திருந்தால் எந்த உத்தியோகத்திற்கும் பொருத்தமான பேர்சனலிட்டி பொருந்திய அதே கறுப்பையா, அவன் எந்த வண்டிக்குள் வாளிகளை வைத்துத் தள்ளித் திரிந்தானோ அதே வண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிக்குள் இப்போது கூனிக்குறுகிக் கிடக்கிறான்.

அவன் முக்கிமுனகுவது என் காதுகளில் நன்றாகக் கேட்கிறது. அதோடு சேர்த்து பக்கத்தில் இரு இளைஞர்கள் பேசுவதுப் நன்றாகக் கேட்கிறது. தெரிந்தவன் என்பதனாலும் நடந்தது என்ன என்பதை அறியும் ஆவலினாலும் அவர்கள் பேச்சை நான் செவிமடுக்கின்றேன்.

''பாவம் கடைசி வருத்தம் கறுப்பையாவுக்கு. அதனால்தான் அந்த வண்டியிலே வைத்துத் தள்ளிக்கொண்டு ஆசுபத்திரிக்குப் போகிறார்கள். பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது இல்லையா?''

''நாம் பரிதாபப்பட்டு என்ன செய்ய முடியும்? அது சரி இரண்டு மூன்று ரூபாய்க் காசைக்கொடுத்து ஒரு காறிலே கொண்டுபோய்ச் சேர்த்திருக்கலாமே ஆஸ்பத்திரிக்கு ஏன் இப்படித் தள்ளிக்கொண்டு அநியாயப் படுத்துகிறார்கள்? குடித்து வெறித்துச் செலவு செய்வார்கள். இதற்கெல்லாம் செலவு செய்ய மாட்டார்கள்.''

''விஷயம் தெரியாமல் கதைக்காதே. காசு இல்லாமல் இவர்கள் இப்படித் தள்ளித் திரியவில்லை, கார்க்காறனுகள் வர முடியாது என்று சொல்லிவிட்டார்கள். காலை தொடக்கம் ஒவ்வொரு கார்க்காறனாகக் கேட்டுப்பார்த்தார்கள். அசிங்கமான சக்கிலியனைத் தங்கள் காருக்குள் ஏற்றினால், மற்றவர்கள் தங்களை ஹயருக்குக் கூப்பிடமாட்டார்கள் என்ற சாட்டைச் சொல்லி எல்லோரும் மறுத்து விட்டார்கள்.''

இளைஞர்களின் உரையாடல் என் உள்ளத்திலே சுமையாகிறது. அனுதாபத்தோடு கறுப்பையாவைத் தள்ளிக்கொண்டு போகிற திசையை நோக்குகிறேன். கறுப்பையாவைப் பற்றிய நினைவுகள், என்னுள்ளே நிழலாடுகின்றன.

நான் கந்தோருக்குச் செல்லாது வீட்டிலே நின்றால் கறுப்பையாவை வாளியும் கையுமாகச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டும். அப்போதெல்லாம் அவனோடு கதைக்க ஆசைப்படுவேன். காரணம் கறுப்பையா தமிழைப் பேசுவதே ஒரு தனி அழகு அதனால் நானே கறுப்பையாவைப் பேச்சுக்கிழுப்பேன்.

''என்ன கறுப்பையா உன்னை இரண்டு மூன்று நாளாய் இந்தப் பக்கமே காணல்ல, ஏதும் முக்கியமான வேலையோ?''

''ஏன் சார் அப்படிச் சொல்றிய, உங்களைத்தான் காண்றது ரொம்ப அபூர்வமாய் இருக்கு கறுப்பையா ஏதாயினும் அஞ்சு, பத்துண்ணு கேட்டுத் தொலச்சிடப் போறான்னு காலங்காத்தால எழும்பிக்கிட்டு ஆபீசுக்குப் போயிடிறிய, நான் வாறநேரம் நீங்க வீட்டிலே

**வள்ளுவர் வழியில் ......... **

**பிறனில் விழையாமை.**

—❋—

அறனெனப்படும் அனைத்தையும் கெடுத்து ஒருவனைக் கடை நிலைக்குக் கொண்டு செல்ல வல்லது பிறன் மனைவியை ஒருவன் தன் காம நினைவொடு விரும்பத்தொடங்கும் மனநிலையாகும். தன்னைக் காக்காது இவ்வழி செல்பவனிடத்தில் பகையும், பாவமும், அச்சமும் பழியும் சேர்ந்து நிலைகொள்ளும். நல்லோரின் பார்வை இதற்குத் தூரத்தில் நிற்கும்.

— நாக. பத்.



இல்லீங்களே, அதனாலதான் காண முடியல்ல. அது அப்புடியிருக்க நான் வராட்டாத்தான் நீங்க வீட்டிலே குடியிருக்க முடியாதே. அதனால காய்ச்சலோ கறுப்போ, வந்து தானுங்க ஆகணும். நீங்க நாலு நாளைக்கு ஆபீசுக்குப் போகாம லீவுஎடுத்தாலும் ஒண்ணும் ஆகாது. லீவு முடிஞ்சுபோய் வேலையக் கவனிச்சுப்புடலாம். ஆனா நாங்க ரெண்டு நாளைக்கு லீவு எடுத்தா அப்புறம் கேக்கணுமா? அதனால தினசரி வந்து தானுங்க ஆகணும். வேறு ஒரு இடத்திலே வேலைக்குக் கூப்பிட்டிருக்காங்க. சம்பளம் கொஞ்சம் கூடத்தருவாங்க போலிருக்கு. ஆனா கல்முனையை விட்டுட்டுப்போக மனமில்லாமயிருக்கு. பத்துப்பன்னிரெண்டு வருசம் இங்கேயே வாளிதூக்கிப் பழக்கப்பட்டுப் போச்சு, அதனால மனுசன் பெரிசா, சம்பளம் பெரிசா என்னு யோசிச்சிப்புட்டு இங்கே தான் சாகும்வரை கிடப்போமென்னு தீர்மானிச்சுப் புட்டனுங்க. இன்னும் பத்துப்பன்னிரெண்டு வீடு இருக்கு முடிச்சுப்புடனும் நம்ம கடம அது. போயிட்டுவாறன் சார்.

கடமையைப் பற்றியும், மனிதத் தன்மையைப் பற்றியும் பேசிய கறுப்பையா இப்போது —

என் கண்கள் கலங்குகின்றன. கண்கலங்கித்தான் என்ன செய்ய முடியும்? எனக்குள் நானே குமைகின்றேன்.

இதே நகரத்தைச் சுத்தப்படுத்த எத்தனை பேருடைய கழிவுகளைச் சுமந்திருக்கின்றான் கறுப்பையா. ஒருநாளா இரண்டு நாளா எத்தனை வருடங்கள்; ஆனால் ...... அவனுடைய உடல் உயிருக்காகப் போராட்டம் நடத்தியபோது அவனை ஆஸ்பத்திரிக்குச் சுமந்து செல்ல ஒரு வாடகைக்கார் கிடைக்கவில்லை. பெருமூச்சு விடுவதைத் தவிர வேறு வழியே தென்படவில்லை எனக்கு.

*

# அகம்பாவம்

—o—

செழுங்கிளை பரப்பி தவம் இயற்றும் பொலிவுடன் நிமிர்ந்து நின்றது அந்தப் புளியமரம்.

உச்சிக்கு வந்துவிட்ட பகலவன் அதனைத் துச்சமாக மதித்தான்.

''என் ஒளியை உறிஞ்சிக் கொழுத்து நிற்கும் இந்தப் புளியமரத்தின் அகம்பாவத்தைப் பாரேன்'' என்றான். பகலவனின் கூற்று பூமித்தாய்க்கும் கேட்டது ''ஆதவன் எப்பொழுதுமே பெருமை பேசுபவன். நான் இல்லாவிட்டால் என் தாய்மைச் செழிப்பு இல்லாவிட்டால் - இந்தப் புளியமரம் தோன்றியிருக்கமாட்டாது'' என்றாள் அவள்.

இருவரின் உரையாடலும் புளியமரத்திற்குக் கேட்டபோதிலும் மௌனஞ் சாதித்தது. மேகக்கூட்டங்கள் குவியலாயின. புயல் கோரமாக வீசத் தொடங்கியது. தொடர்ந்து பேய் மழை. வேர் பாறிச் சாய்ந்துவிடுவதைப்போல புளியமரம் ஆடியது.

பகலவனின் பேச்சு மூச்சைக் காணவில்லை. பூமித்தாய் மூச்சுத் திணறிய நிலையில் மழை நீரைக்குடித்துக்கொண்டிருந்தாள்.

எஸ். எல். எம். ஹனிபா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உண்மைக்கதை.**

# மலைப்பாம்புடன் மல்யுத்தம்

## எஸ். சிதம்பரப்பிள்ளை.

1951ம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு வார இறுதி நாள் அன்று சாய் பொழுதில் சிறிது மழை பெய்தது. அம்பாறை நீர்ப்பாசன இலக்காவில் நான் தலைமைக் குமாஸ்தாவாக இருந்தகாலம் அது.

எனது நண்பர் திரு. குரேசயர் நீர்ப்பாசன என்ஜினியர். அவர் அப்போது அங்கு வந்து, ஆகாயக் கப்பல் விடுவதற்காக அமைக்கப்படும் மைதானத்துக்கு அருகாமையில் யானைகள் கூட்டம் கூட்டமாய் திரிவதாகவும், அவைகளைப் பார்க்கப்போகலாம் என்றும் கூறினார்.

நான் யானைக் கூட்டங்களைப் பார்க்கப் பெரிதும் விரும்பினேன். சிறிதுநேரத்தில் அவர் வசம் உள்ள ஜீப் வண்டியில் ஏறிக்கொண்டு இருள் அடைவதற்கு சற்று முன்பு சென்றோம்.



நான் எனது துப்பாக்கியை எடுத்துப் போகத் தவறவில்லை.

எனது நண்பர் ஜீப் வண்டியை ஓட்டிச்சென்றார். சில பகுதிகளில் காடுகள் துப்பரவாக்கப்பட்டு இருந்தன. ஜீப்வண்டி வெளிச்சத்தில் மெள்ள மெள்ளப் போய்க்கொண்டிருந்தோம்.

தற்போது இருக்கும் ஆகாய விமான இறங்கு துறைக்குக் கால்மைல் தூரத்தில் நன்றாய் துப்பரவு செய்யப்பட்ட இடத்தில் ஜீப் போய்க்கொண்டு இருக்கும்போது, பெருமரம் ஒன்று பாதைக்குக் குறுக்கே கிடப்பது ஜீப்வெளிச்சத்தில் தெரிந்தது. எனது நண்பர் ஜீப் வண்டியை வெளிச்சம் போட்டபடியே நிறுத்திவிட்டு, இறங்கிப்போய் அக்கட்டையின் நுனியைப் பிடித்துத் தூக்கினார். அப்போது கட்டை ஒரு பக்கம் வளைந்துகொடுப்பது போலவும் தெரிந்தது. ஒருவேளை பெரும் கொடியாக இருக்கும். பாதையில் இருந்து அகற்ற நாமும் உதவிசெய்யலாம் என்ற நினைப்பில் ஜீப்பைவிட்டு இறங்கி அவர் அருகில் போனேன்.

சமீபத்தில் போனதும் திகைத்து என்னை அறியாமலே பின் வாங்கினேன். காரணம் எனது நண்பர் குரேசியர் தூக்கிப்படித்துக் கொண்டிருந்தது ஒரு பெரிய மலைப் பாம்பு. அவர் அதனுடைய கழுத்தில் பிடித்துக்கொண்டு ஜீப் வண்டிக்கு சமீபமாக இழுத்துக்கொண்டு வந்தார். பாம்பு என்றாலே எனக்கு நடுக்கம். அதிலும் மலைப் பாம்பு என்றால் எப்படி இருக்கும்?

அதன் வாய் திறந்தபடி இருந்தது. அவர் கையில் இரத்தம் கசிந்தபடி இருந்தது. ஆனால் அவர் அதை விடமுடியாமல் அபாயமான சூழ்நிலையில் இருப்பதாக எனக்குப் பட்டது. நல்லவேளையாக என்னிடம் துவக்கு இருந்தது. துவக்கை எடுத்துக் குண்டு தோட்டா ஒன்றை மாட்டியபடி ''உங்கள் கையில் படாமல் அதன் தலையில் எப்படிச் சுடலாம்?'' என்று கேட்டேன். அப்பொழுது அவர் பாம்பை ஜீப் வண்டிக்கு இரண்டு மூன்றடி தூரத்தில் இழுத்துவந்துவிட்டார். என்னைச் சுடவேண்டாம் என்றார். ''இந்தப் பாம்பை உயிருடன் பிடித்துக் கொண்டு போகவேண்டும்'' என்று சொன்னார்.

அவர் நல்ல தைரியசாலி. அதை எப்படியாவது இழுத்துவிடவேண்டும் என்றே நின்றார். மலைப் பாம்புடன் விளையாடலாமா? அவருக்கு எவ்வளவு தைரியம் இருந்ததோ எனக்கு அவ்வளவு நடுக்கம் இருந்தது. நான் அதை விட்டு விடும்படி எவ்வளவோ மன்றாடியும் அவர் கேட்கவில்லை. ஜீப்புக்கு அருகாமையில் இழுத்துவந்து விட்டார்.

அப்போது மலைப்பாம்பு அவரைச் சுற்றி வளைப்பதுபோல் இருந்தது. என்னைச் சற்று தூரத்துக்குப் போகும்படி சொன்னார். பாம்பு சுற்றியதைத் குலைத்துக்கொண்டு இருந்தது. பின்பு பாம்பைத் தன் பலம் கொண்டமட்டும் ஜீப்புக்குப் பக்கத்தில் இழுத்து பின் பக்கமாகப் பிடித்தபடி உள்ளே ஏற முயன்றார். எப்படியோ பிடி வழுக்கி பாம்பைத் திடீரென விட்டுவிட்டார்போல் தெரிந்தது. சற்று இருளானதால் தவறியது எப்படி என்று என்னால் கூற முடியவில்லை. ஆனால் பாம்பைக் காணவில்லை. எப்படி மறைந்தது என்றே தெரியவில்லை.

"கூட்டாளி ஓடிவிட்டார். நான் அவரைப் பிடிக்கவேண்டும்'' என்று கூறியபடி ஜீப்பில் தாவி ஏறி வண்டியை ஓட்டத்தொடங்கினார் அவர். நான் இருக்கிறேன் என்ற நினைவே அவருக்கு இல்லை. வண்டி அசைந்ததும் நான் உடனே குதித்து ஏறி விட்டேன்.

பாம்பு ஓடியதைப் பற்றி எனக்கு மிகுந்த சந்தோஷம். நான் வேண்டிய தெய்வங்கள் எனக்குக் கைகொடுத்தன. நான் அவரிடம் ஒன்றுமே பேசவில்லை. எனது துவக்கை தோளில் சாத்தியபடி பக்கத்தில் அமர்ந்திருந்தேன். வெறிபிடித்தவனைப்போல் அவர் எங்கும் சுற்றி வளைத்து ஜீப் வண்டியை ஓட்டினார்.

கிட்டின களிமண் நிலம். காடுகளை வெட்டி எங்கும் துப்பரவாக்கி இருந்தது. அதனால் அவர் எத்தனையோ தடவைகள் சுற்றி வளைத்துக்கொண்டு இருந்தார். இந்த அவசரத்தில் அவரோ நானோ பக்கத்தில் நின்ற யானையைக் கவனிக்கவில்லை. அவருக்குத் தைரியம் எனக்குப் பயம் தெளிந்த நிலைமை. ''நீங்கள் இவ்வளவு கோழையாக இருக்கிறீர்களே'' என்று கேட்ட குரேசயர் ஒரு மூலைப்பக்கம் வண்டியைத் திருப்பினார்.

திடீரென்று ஒரு பெரும் சத்தம் காடு அதிரும்படி கேட்டது. பக்கத்தில் நின்றிருந்த யானை ஒன்று தன்னை வண்டி துரத்தி வருகிறது என்ற பயத்தினால், அப்பாவியான எங்களைத் தாக்குவதை விட்டு, பிளிறிக்கொண்டு வெளிச்சத்துக்கு முன் ஓடியது.

என் மூச்சு நின்றுவிடும்போல் இருந்தது. ஆனால் என் நண்பர் குரேசியரோ ''ஆகா! இக்காட்சி எவ்வளவு அழகாக இருக்கிறது. யானை இவ்வளவு வேகமாய் ஓடியதை இதற்குமுன் நான் காணவில்லை'' என்றார்.

"திருப்புங்கள் ஜீப்பை.'' என்று கத்தினேன். குரேசியர் என்னைப் பார்த்தார். என்ன நினைத்தாரோ தெரியாது ஜீப்பைத் திருப்பி விட்டார். அவருடைய நோக்கம் மலைப் பாம்பைத் தேடுவதேயாகும். கொஞ்ச தூரம் போனபின் மீண்டும் பயம் தெளிந்து வரும் பொழுது எனது வலது தோளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தியிருந்த துப்பாக்கிக் குழல் இடது தோளில் சாத்தியிருப்பது போல் தோன்றியது. நான் திரும்பிப் பார்த்தேன். கீச்சிட்டேன்.

அது துப்பாக்கிக் குழல் அல்ல. மலைப் பாம்புதான். மலைப்பாம்பின் பிளந்த வாய் என்னை விழுங்குவதற்குக் குறிபார்த்து இருப்பதைப் போல் என் கண்களுக்குத் தெரிந்தது. ''ஜீப்பில் பாம்பு'' என்று கத்திவிட்டு, ஜீப் ஓட்[illegible]ய நண்பரைக் கட்டிப்பிடித்தேன்.

அவர் உடனே ஜீப்பை நிறுத்தி கீழே இறங்கி தந்திரமாக அதனுடைய கழுத்தைப் பிடித்து ஜீப்பிற்கு பின் ஆசனத்தில் இருந்து கொண்டு தன்னுடைய கைஅசைப்பினால் பாம்பை தன்பக்கம் இழுக்கத் தொடங்கினார்.

இம்முறை அவர் எனது உதவியை வாயாலே கேட்டுவிட்டார்.

இவைகள் அனைத்தும் சொற்பவேளையில் நடந்து விட்டதால், நான் மலைத்துப்போய் பார்த்துக் கொண்டிருந்தேன். இவ்வளவு தைரியமாக நண்பர் இருக்கும் போது நான் இவ்வளவு கோழையாய் இருக்கிறேன் என்று எனக்கே வெட்கம் வந்தது. என்னுடைய துவக்கின் உதவியால் ஒரு அளவாக எட்டி நின்று உதவி செய்தேன்.

பாம்பின் மூன்றில் ஒரு பங்கு இழுபட்டபின் நண்பரின் கை அசைப்பின் காரணமாய் பாம்பு தானாகவே வளைந்து, வளைந்து தன் முழுப்பாகத்தையும் இழுத்துக் கொண்டது. அவருடைய முகத்தில் சந்தோஷக்குறி காணப்பட்டது. என்னை வண்டியை ஓட்டச் சொன்னார். எனக்கு அவ்வளவு பழக்கம் இல்லாவிட்டாலும் அவர் சொன்னபடி மெதுவாக ஓட்டிக் கொண்டு சென்றேன்.

நீர்பாசன ஊழியரின் குடிசைகள் சமீபத்தில் (உகனையில்) இருந்ததால் அவ்விடம்போய், ரணவீர என்ற லொறிச் சாரதியை அழைத்து அவரைக்கொண்டு ஜீப் வண்டியை ஓட்டச்செய்து உகனையில் இருந்த சண்முகதாஸ் பங்களாவுக்குப் போய் அவரிடம் இருந்த உறுதியான மரப்பெட்டியில் பாம்பைத் தூக்கிப்போட்டு பெட்டியை அடைத்தோம். அதுவரையும் நண்பர் குரூசியர் பாம்பின் தலையைப்பிடித்தபடியே இருந்தார். அதன்பின் அம்பாறையில் உள்ள பங்களாவுக்குச் சென்றோம். மலைப்பாம்பு ஏறக்குறைய 15 அடி நீளமானது. எனது நண்பர் இதை தெகிவளையில் உள்ள மிருகக்காட்சிச் சாலைக்கு கொடுத்தார். அதை இப்பொழுதும் மிருகக்காட்சிசாலையில் பார்க்கலாம். எனது நண்பர் நீர்ப்பாசன இலாக்காவில் மெக்கானிக் எஞ்சினியராக இருந்து இப்பொழுது இளைப்பாறி இருக்கிறார்.

※

**வள்ளுவர் வழியில் ... ... ...**

**வாழ்க்கைத்துணை நலம்**

—※—

பெண்ணின் நற்பண்பே வீட்டுக்கு மங்கலமாய் அமைகிறது. கற்பென்னும் திண்மை பூண்டு அவள் தன்னைக் காத்து தன்னைக்கொண்ட தன் கணவனின் நலனைப் பேணிக்காத்து, இருவர்க்கும் உரிய நற்சொல்லைக் காத்து, சோர்விலா வாழ்க்கைத் துணையாகி நிற்கிறாள்.

— நாக. பத்.





# கொசு மருந்து - (FLY SPRAY)

—எடுத்தாளன்—

கண்ட கண்ட இடங்களிலெல்லாம் இருந்து வரும் ஈக்கள், நமது பாவனைப் பொருட்கள்மீதும் உணவுப் பண்டங்களின் மீதும் அமர்ந்துவிடுவதன் மூலமாக பலவிதமான தொற்று நோய்க் கிருமிகள் வெகு சுலபத்தில் பரவ ஏதுவாகின்றது.

ஈச்களின் தொல்லைகளிலிருந்தும், இவை விநியோகிக்கும் நோய்களிலிருந்தும் விடுதலை பெற இதோ ஒரு மருந்து, இதை ஆங்கிலத்தில் Fly Spray என்பார்கள். இதைத்தயாரிப்பது எப்படி என்பதைப் பார்ப்போம்:—

| | | |
|---|---|---|
| நெடியற்ற மண்ணெண்ணெய் (Deodonizing Kerosene) | 89 | பங்கு |
| பைரத்திரம் Pyrethrum | 10 | ,, |
| மிதைல் சலிசிலேட் (Methyl Salicylate) | 1 | ,, |

மண்ணெண்ணெயைப்பற்றி எந்தவிதமான குறிப்பும் தேவையில்லை. ஆனால் 'நெடியற்ற' மண்ணெண்ணெய் என்று அடைமொழியொன்று போட்டிருக்கிறேனே, அதைப்பற்றி கட்டாயம் கூறித்தானாகவேண்டும்.

மண்ணெண்ணெய் எங்கு கொட்டினாலும் சரி, அது எங்கே சிந்தியிருக்கிறது என்பதை நீங்கள் கண்டுபிடித்துக்கொள்வீர்கள். மண்ணெண்ணெயிலுள்ள நெடி இதைக் காட்டிக்கொடுத்துவிடும். இந்தநெடி அகற்றப்பட்ட எண்ணெயைத்தான் Deodorizing Kerosene என்று சொல்லுவார்கள். பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு கலப்பதற்கென இந்த மண்ணெண்ணையை வடிகட்டியுள்ளனர். நெடி மட்டுந்தான் இல்லாதிருக்குமே தவிர, மற்றபடி என்னென்ன குணம்சங்கள் நாம்பாவிக்கும் மண்ணெண்ணெய்க்குண்டோ அத்தனையும் இதில் உண்டு

பைரத்திரம் (Pyrethrum) பூச்சிக் கொல்லிகளுக்கென பயன்படுத்தப்படும் தூள் என்றதும் இது நச்சுப் பொருளாகத்தான் இருக்க வேண்டுமென்ற திட்டவட்டமான முடிவுக்கு உடனடியாக வந்துவிடாதீர்கள். இது நச்சுப் பொருளல்ல. பைரத்திரம் நச்சுப்பொருளெனத் தப்புக் கணக்குப் போட்டு கிலி கொண்டவர்களும் கிலி கொள்பவர்களும் ஏராளம். மனிதனுக்குத் தீமைவிளைவிக்காது, ஆனால் கிருமிகளுக்கும் பூச்சிகளுக்கும் எமனாக இருக்கும். இது செவ்வந்தி செடியினத்தைச் சேர்ந்த ஒருவகைப் பூக்களின் பொடியாகும்.

பைரத்திரத்திற்கு பதிலாக செயற்கை மருந்தொன்று கண்டு பிடிக்கப்பட்டு பாவிக்கப்பட்டு வருகிறது. இதற்குப் பெயர் Lethene என்பதாகும். இது பைரத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச்சத்தைவிட முப்பது நாற்பது மடங்கு சக்தி மிக்கதாகும்.

மிதைல் சலிசிலேட் (Methyl Salicylate) என்பது செயற்கைத் தைலமாகும். வின்டர்கிரீன் (Win-tergreen) என்னும் தைலத்துக்குப் பதிலாக இதைப் பாவிப்பதுண்டு. கடைகளில் வின்டர்கிரீன் என்று கேட்டால், இந்தப் பெயரை எழுதி மிதைல் சலிசிலேட் தான் கொடுப்பார்கள். அசல் வின்டர் கிரீன், Gaultherie Proumbens என்ற இலைகளிலிருந்து வடித்தெடுக்கப் படுவதாகும். இச்செடிகள் அத்திலாந்திக் சமுத்திர நாடுகளில் விளைவதாகும்.

மிதைல் சலிசிலேட் என்னும் செயற்கைத்தைலம் சாலிசிலிக் அமிலம், மிதைல் அல்கஹோல், சல்பியூரிக் அமிலம் ஆகிய மூன்று பொருட்களின் கலப்படமாகும். அசல் வின்டர்கிரீனுக்கும், மிதைல் சலி சிலேட்டுக்கும் அதிகமான வித்தியாசம் இல்லை. இதை வாசனைக்காகவும், உணவுப் பண்டங்களிலும் சேர்ப்பதுண்டு.

பைரத்திரம் அபாயமற்றது என்றுரைத்தேன். மிதைல் சலிசிலேட்டை உண்ணும் பொருட்களில் கூட கலக்குகிறார்கள் என்றேன். மண்ணெண்ணெயைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. எனவே, தைரியமாக சமையற்கட்டுகளிலும், சன்னல்களிலும் கதவுகளிலும் தெளித்துவிடலாம். பூசிவிடலாம்.

தயாரிக்கும் முறை இதுதான்: நெடியற்ற மண்ணெண்ணெயில், பைரத்திரந் தூளைப் போட்டு பின்னர் மிதைல் சலிசிலேட்டைப் போட்டுக் கலந்துவிடவேண்டும். இரண்டு நாட்களுக்கு இப்படியே விட்டு வைக்கவேண்டும். இடையிடையே கலக்கியும் விட்டுக் கொள்ளவேண்டும். மூன்றுவது நாள் மஸ்லின் துணியொன்றின் மூலமாக வடிகட்டிக் கொள்ள வேண்டும். பாவனைக்கு தயாராகிவிடும்.

இறுதியாக, ஓர் எச்சரிக்கை. இந்த மருந்தை நெருப்பருகே வைத்துவிடாதீர்கள். மண்ணெண்ணெய் அதிகமாக சேர்த்திருப்பதனால் தீப்பற்றிக்கொள்ளும் அபாயம் உண்டு!

*


**நாடெங்கும் "மலர்" விற்பனையாளர்கள் தேவை.**

---

- ★ முற்பணம் கட்டவேண்டிய அவசியம் இல்லை.
- ★ பிரதிமாதமும் பத்துப் பிரதிகளுக்குக் குறையாமல் பெறவேண்டும்.
- ★ விற்பனையாகாத பிரதிகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியாது.
- ★ முந்திய மாதப் பிரதிகளுக்குரிய பணம் அனுப்பாதவர்களுக்கு அடுத்த மாதம் "மலர்" அனுப்பப்படமாட்டாது.
- ★ விற்பனையாளர்களுக்கு 20% கழிவு உண்டு. எங்கள் செலவில் பிரதிகளை அனுப்பிவைப்போம்.
- ★ தனிப்பிரதி -/50 சதத்துக்கு மேல் விற்பனை செய்யக்கூடாது.

விற்பனையாளர்கள் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:—

நிர்வாகி "மலர்"
21, மத்திய வீதி,
மட்டக்களப்பு.




# எழுத்து ரத்தினங்கள்

"யாழ்ப்பாணத்து மக்கள் கிணற்றுத்தவளைகள்தாம் எல்லைச் சண்டையிலும், சீதனம் சேகரிப்பதிலும், வீடு கட்டுவதிலும்தான் அவர்களுக்குக் கவனம். சிங்களவர்கள் வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள்! அவர்கள் வாழ்வதற்காக உழைக்கிறார்கள் தமிழர் உழைப்பதற்காக வாழ்கிறார்கள் ..."

["ஆச்சி பயணம் போகிறாள்" 'செங்கை ஆழியான்']

ஃ ஃ ஃ

சரியான நேரங்களில் கூறப்படும் சில வாக்கியங்களில் தான் எவ்வளவு சக்தி மண்டிக்கிடக்கிறது? அவை மெய்யாக இருந்தாலென்ன கற்பனையாக இருந்தாலென்ன.

["மலைக்கொழுந்து" — நந்தி—]

— **சௌமினி — கோப்பாய்.**

ஃ ஃ ஃ

பாசப் பொறிக்கிடங்கு விரிந்தவிழ, அதற்குள் நான் அமிழ்கிறேன். ["முள்" — யாழ்வாணன்]

ஃ ஃ ஃ

வேதனை நெஞ்சை மத்தாய்க் கடைகிறது. அதனால் கண்களிற் காட்டாற்று வெள்ளம் உருவாக 'கைத்துடைப்புக்கருமம்' என்ற அணையையும் உடைத்துத் தகர்க்கின்றது ["முள்" — யாழ்வாணன்]

— **மு. கணபதிப்பிள்ளை,**
**குருக்கள்மடம்.**

ஃ ஃ ஃ

கங்கை மழலையின் குரலெழுப்பி கன்னித் தமிழின் நித்திய யௌவனப் பொலிவுடன், குழலவிழ, இடைதுவள, நீராடுங் கன்னியின் உடற்கவர்ச்சி காட்டி, பரதக் கூத்திடும் நர்த்தகியின் காம்பீரியத்துடன், வற்றாது, காலங்காலமாக வளநீர் நிதியைச் சகலருக்கும் அளித்தவண்ணம் ஓடி கடல் ராஜனுடன் சங்கமித்துக் கொண்டேயிருக்கிறாள்.

[எம். ஏ. ரஃமான் - "மரபு"]

ஃ ஃ ஃ

துவட்டியும் துவட்டாமலும், ஈரம் சொட்டச் சொட்ட இடுப்பளவு தொங்கும் கூந்தல்.

குடம் வைக்கச் சற்று இடம் கொடுத்து மறுபக்கம் நொடித்து நிற்கும் இடை, சற்றே ஒடிய அடி வைக்கும் அழகு நடை.

தோளிலே தொங்கும் துவைத்துப் பிழிந்தரவிக்கை உடலிலே ஒட்டிக் கிடக்கும் ஈரச்சேலை.

**கதை: பீலிமேலே போகிறது!**

**— ஆசிரியர்: தெளிவத்தை ஜோசப்.**
**6 - 7 - 1967 சிந்தாமணி.**

ஃ ஃ ஃ

ஒரு போர்வீரனின் அழகிய மார்பினைப் போல் குவிந்து பரந்து கிடக்கும் அந்தக் கடற்கரையின் வெண்மணற்பரப்பை, பாக்கு நீரினைக் கடற்கன்னி தன் அலைக்கரங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் வருடியபடி அணைத்து மகிழ்கிறாள். கீழ்வானப் பொன்னரங்கில், குங்கும வண்ணத்திரையை நீக்கிக்கொண்டு கதிரவன் அன்றைய நாடகத்தை இன்னும் ஆரம்பிக்கவில்லை. கிழக்கு வெளுக்கிறது.

கதை: 'அலைகள்'

— ஆசிரியர்: செ. கந்தசாமி.

2-4-1969 சிந்தாமணி.

ஃ ஃ ஃ

காட்டிக் கொடுக்கின்ற கயமையிலேயே இன்பத்தையும் காசையும் தேடுகின்ற ஊர் மக்களின் களிப்பைப்போல நேரம் ஓடியோடிக் களித்துக் கொண்டிருந்தது.

கதை: 'கடலும் கனவும்'

— ஆசிரியர்: கயிலாசநாதன்.

13-10-1968 வீரகேசரி.

ஃ ஃ ஃ

இரவுப் பெண் அன்ன நடை போட்டுக்கொண்டிருந்தாள். தென்றல் அவள் முந்தானையை இழுத்துப்பிடித்தாள். கறுப்பு முந்தானை விரிந்து பறந்து உலகத்தை மறைத்தது. அந்தத்திரை மறைவிலே எத்தனையோ அற்புத அக்கிரமங்கள்! இன்றுமட்டுமா? யுகம் யுகங்களாக நடந்து கொண்டிருக்கும் சம்பவம் இது.

கதை: 'பாதிக்குழந்தை'

— ஆசிரியர்: பித்தன்.

நூல்:- முஸ்லிம் கதைமலர்.

ஃ ஃ ஃ

தொகுப்பு:

அபூஷனூபா
ஓட்டமாவடி

## ஈழத்து ரத்தினங்கள்

ஈழத்து எழுத்தாளர்கள் பலரது படைப்புகளில், கருத்துச் செறிவுள்ள உவமை, கச்சிதமான வர்ணனை, கலையழகு மிக்க சிந்தனை நிறைய விரவிக் கிடப்பதை வாசகர்கள் அவதானித்திருப்பார்கள். எத்தனையோ சந்தர்ப்பங்களில் அவை உங்கள் நெஞ்சைத் தொட்டிருக்கும். உங்கள் கருத்தில் பதிந்துவிட்ட அப்படியான பகுதிகளை எழுதி அனுப்பிவைத்தால் ''ஈழத்து ரத்தினங்கள்'' என்ற பகுதியில் அவற்றை மகிழ்ச்சியோடு வரவேற்றுப் பிரசுரிப்போம். நீங்கள் அனுப்பும் பகுதி எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டது என்ற விபரத்தையும் (உரிய பக்கத்துடன்) குறித்து அனுப்ப வேண்டும்.

பத்திரிகை, சஞ்சிகைகள் முதலியவற்றில் வெளிவந்த, கதை கட்டுரைகளிலிருந்து பொறுக்கி எடுத்த 'ரத்தினங்க'ளாக இருந்தால் குறித்த கதை, கட்டுரை, பிரசுரமான பத்திரிகைப் பெயர், திகதி ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும்.

'ஈழத்து ரத்தினங்கள்' அனுப்பவேண்டிய முகவரி :—

**ஆசிரியர் ''மலர்''**
**21, மத்திய வீதி,**
**மட்டக்களப்பு.**

## ''மலர்'' சஞ்சிகைக்கு ஏன் ஈழத்து வாசகர்கள் முழு ஆதரவு கொடுக்க வேண்டும் என்பதற்குச் சில காரணங்கள்

1. ஈழத்து இலக்கிய முயற்சிகளுக்கு ஆக்கம் தரும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு ஆத்மார்த்தமாக உழைக்கும் சஞ்சிகை ''மலர்''

2. அரசியல் கலப்பற்று, காட்சிச்சார்பற்று, கோஷ்டிச் சார்பற்று, மதசார்பற்று, பிரதேசச்சார்பற்று, உண்மை, நேர்மை, நடுநிலை என்ற கொள்கையை நடைமுறையில் கடைப்பிடித்து வரும் சஞ்சிகை ''மலர்''

3. மட்டக்களப்பு எழுத்தாளர், யாழ்ப்பாணத்து எழுத்தாளர், மலைநாட்டு எழுத்தாளர் முஸ்லிம் எழுத்தாளர் என்ற பாகுபாடற்று, ஈழத்து எழுத்தாளர் படைப்புகளைத் தாங்கி வருவது ''மலர்''

4. பழம் பெரும் எழுத்தாளர்களின் படைப்புகளுடன், புதிய எழுத்தாளர்களின் படைப்புகளுக்கும் இடமளித்து புதிய தலைமுறையினரை வளர்த்துவரும் ஏடு ''மலர்''

5. எழுத்தாளர்களை உரிய முறையில் அறிமுகப்படுத்தியும், ஈழத்து எழுத்தாளர் நூல்களுக்கு இலவசவிளம்பரம் அளித்தும், ஈழத்து நூல்களை அன்பளிப்புச் செய்தும், ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளைக் கூறியும், பணிபுரிவது ''மலர்''

6. எல்லா வகையிலும் ஈழத்து இலக்கிய உலகைப் பிரதிநிதித்துவப்படுத்த முற்றிலும் தகுதி வாய்ந்த ஓரே ஏடு ''மலர்''

[மூன்புற உள் அட்டையைப் பார்க்கவும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு ஸ்ரோர்ஸ்
பத்திரிகை விற்பனையாளர்
கல்முனை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

ஜூலை 1970
விலை சதம் -/50.



மாதவிப் பொன்மயிலாள்
தோகைவிரித்தாள் — வண்ண
மையிட்ட கண்மலர்ந்து தூதுவிடுத்தாள்.

கலைக்கெனத் தன் வாழ்வை
அர்ப்பணித்த ஒரு கன்னியின்
இனிய சோகவரலாறு

ஈழத்துப் பிரபல நாவலாசிரியர்

## "நவம்"

எழுதும்
சுவைமிக்க தொடர்கதை

விரைவில்
உங்கள் ''மலர்'' சஞ்சிகையில்
ஆரம்பமாகிறது.

இன்றே சந்தாதாரராகச்
சேர்ந்துவிடுங்கள்.

அச்சிட்டவர்:- வண. சகோ. ஜோசப் பி. மறே S. J. கத்தோலிக்க அச்சகம், இல. 18, மத்திய வீதி, மட்டக்களப்பு. வெளியிடுபவர்: ... 21, மத்திய வீதி, மட்டக்களப்பு. கௌரவ ஆசிரியர்:- இரா. ... மத்திய வீதி, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org